REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி


THE SUDAR OLI

வார மலர்

ஜூன் 19 – 25, 2005 June 19 - 25, 2005 28 பக்கங்கள் 16.00




# பொதுக்கட்டமைப்பு படும்பாடு!



# படைக் குறைப்பும் இல்லை புத்தரும் அதே இடத்தில்

திருகோணமலையில் வைக்கப்பட்ட புத்தர் சிலையை அடுத்து பல்வேறு சர்ச்சைகள் கிளம்பின. அதனால் அங்கு மேலதிக துருப்புகள் அனுப்பப்பட்டன. முப்படைகளுடன் விசேட அதிரடிப்படை, இராணுவப் பொலிஸ், பொலிஸ் என மூலை முடுக்குகள் எல்லாம் படைகுவிப்பாகவே காணப்பட்டன. ஒரு யுத்த பூமிபோன்று திருமலை காட்சி அளித்தது. மக்களிடையே பயம், பீதி ஏற்பட்டதுடன் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது.

இதனால், திருகோணமலையில் மேலதிகமாக குவிக்கப்பட்ட படையினர் வாபஸ்பெறப்பட வேண்டும் என்று தமிழர் தரப்பு வலியுறுத்தி வந்தது. நெருக்கடியான சூழல் தோன்றுவதற்கு வாய்பளிக்காது தவிர்க்க துருப்புகள் வாபஸ் பெறப்படும் என அரசதரப்பு உறுதி அளித்தது. ஆனால் அந்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டவையாகிவிட்டன.

ஜூன் முதலாம் திகதி திருகோணமலை மாகாண ஆளுநர் வாசஸ்தலத்தில் இடம் பெற்ற உயர் மாநாட்டில், இரண்டாம் திகதி மாலைக்கு இடையில் துருப்புகள் வாபஸ் பெறப்படும் என்று சிரேஷ்ட அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உறுதி அளித்திருந்தார். எனினும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வில்லை.

இதனால் அதனைக் கண்டித்து அடையாள கதவடைப்பு ஒன்று செய்ய வேண்டிய சூழலுக்கு தமிழ்த்தரப்பினர் தள்ளப்பட்டனர். இந்த அஹிம்சை வழிப் போராட்டத்துக்கு கூட அரசதரப்பு செவிசாய்க்கவில்லை. அஹிம்சை வழிப் போராட்டங்களை உதாசீனப்படுத்திய பேரினவாதத்தரப்பிடம் நியாயம் கேட்பது மடமை தான். இப்படி ஒரு வாக்குறுதியை அமைச்சர் அளிக்கவில்லை என பிரதி அமைச்சர் ஒருவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தது சுட்டிக்காட்டத்தக்கது. அதன் பிறகு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிகளின் போராட்டத்தால் மீண்டும் அரசதரப்பு பிரதிநிதி ஒருவர் நாடாளுமன்றத்தில் உறுதி அளித்துள்ளார். அதுவும் இதுவரை நிறைவேறியதாகத் தெரியவில்லை.

இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருப்பதால் துருப்புக்களை வாபஸ் பெறவேண்டும் என்று தமிழ் கூட்டமைப்பு கூறுகிறது. துருப்புகள் அகற்றப்பட்டால் சிங்களவர்களுக்கு பாதுகாப்பில்லை என்கிறது ஜே.வி.பி. அடுத்ததாக புத்தர்சிலை வைக்கப்பட்டதன் பிற்பாடுதான் பேரினவாதிகளுக்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது போலும்.

எது அப்படியோ நாளுக்கு நாள் படைக்குவிப்பு பெருகுவதாகவே உணர முடிகிறது. குறைந்ததாகத் தெரியவில்லை. நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் துருப்புகள் திருகோணமலைக்கு அழைக்கப்பட்டுள்ளன. இது ஒருபுறமிருக்க, திருகோணமலை நகரம் இப்போது பலத்த சோதனைகெடுபிடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. வீதிகள் தோறும் சோதனைகள் அதிகரித்துள்ளன.

ஒரே சமயத்தில் பல்வேறு வீதிகளில் திடீரென படையினர் வெற்றுப் பரல்களைப் போட்டு வாகனங்களை மறித்து சோதனையிடுகின்றனர். இதனால் மக்கள் அச்சத்துடன் செயற்பட்டு வருகின்றனர். திருகோணமலை ஒரு பதற்றம் நிறைந்த பூமியாகக் காணப்படுகின்றது.

புத்தர் சிலை இன்னும் அகற்றப்படவில்லை. சுற்றிவர அடைக்கப்பட்ட கம்பி வேலிக்குள்ளும் மண் மூடைகளுக்கு மத்தியிலும் புத்தர் பாதுகாப்பாக இருக்கின்றார். படைகளின் பாதுகாப்பும் சற்று அதிகமாகவே உள்ளது. நினைத்தால் கூட சிலை இலகுவில் நகர முடியாது.

திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரம் தீரமுன்பு மேலும் பல புத்தர் சிலைகளை வைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. எனினும் சில அரச இடங்கள், பொதுக்காணிகள் குறித்த தகவல்களை சிங்களத் தரப்பு சேகரித்து வருகின்றது. அதிலும் அரச மரங்கள் சார்ந்த பகுதிகளை மிகுந்த உன்னிப்புடன் அவதானித்து வருகின்றது.

இதனிடையே, புத்தர்சிலை விவகாரம் சூடு பிடித்து அது அகற்றப்பட வேண்டிய சூழல் தோன்றினால் கதவடைப்புக்கான அழைப்பை விடுப்பதற்கு பேரினவாத தரப்பு எண்ணியுள்ளது.

அதில் ஏதும் தடங்கல் ஏற்பட்டால் கந்தளாயால் மரக்கறி மற்றும் பொருட்களை திருகோணமலைக்கு அனுப்பாது இடை நிறுத்துவதென்றும், மின்சாரம், நீர் விநியோகங்களை துண்டிப்பதென்றும் பேரினவாத தரப்பு முடிவெடுத்துள்ளதாக அறிய முடிகின்றது. ஆகவே புத்தர்சிலை இருந்தாலும் பிரச்சினை அகற்றப்பட்டாலும் பிரச்சினை என்ற நிலைமை தோன்றிஉள்ளது.

மனோ

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் கடலில் மிதக்கும் பனிப்பாறை போன்றது. இப்போதைக்கு மாற்றம் இல்லாது விடினும் பாரிய விளைவுகள் ஏற்படலாம். எனவே, அவதானமாக இருக்க வேண்டியது அனைத்து தரப்பினதும் பொறுப்பாகும்.




## காலுக்குத்தான் செருப்பு தலைக்கு அல்ல

கம்பளை ஐயரத்தன மிகவும் குஷியாக வெற்றிலை சப்பிக் கொண்டு வந்தார். ''என்ன அங்கிள்! ஏதாவது கலியாண வீட்டுக்குப் போயிட்டு வாறீங்களா; வெற்றிலை எல்லாம் ஜொலிக்குதே!'' என்றோம்.

''ஆமாம் மாப்புளே! நம்ம கம்பளை முதலாளி ஒருவரோட மகளுக்கு வெள்ளவத்தையில் கலியாணம். அங்கே போயிட்டு ஜோடியை வாழ்த்திவிட்டு ஒருபிடி வடை பாயாசத்துடன். மிச்ச நாளைக்கு பிறகு ஒரு சைவச் சாப்பாடு. அப்படியே சுப்பர் பீடா. நான் பீடா சாப்பிட்டதைப் பார்த்த முதலாளி வேற தனியாக பார்சல் செய்து கொடுத்தார். இந்தாங்க நீங்களும் ஒன்று டேஸ்ட் பண்ணிப் பாருங்க மாப்புளே'' என்று பீடா ஒன்றைக் கொடுத்தார்.

சும்மா சொல்லக்கூடாது இந்தியா அல்லவா! சுப்பர் டேஸ்ட்டாக இருந்தது. பீடாவை சுவைத்துக் கொண்டே கம்பளை ஐயரத்னத்தாரின் வாயைக் கிண்டினோம்.

''என்ன அங்கிள் அம்மையார் நேத்து ஜே.வி.பி. தம்பிமாரை கிழி கிழி என்று கிழித்து விட்டாரே! எப்படி அவ்வளவு துணிச்சலாகப் பேசிவிட்டார்?''

''மாப்புளே! உங்களுக்கு அம்மையாரைப் பற்றித்தெரியாது. தான் கடைசிவரையிலும் ஜனாதிபதிக்கு சகல வழிகளிலும் தனிப்பட்ட முறையிலும் அரசியல் ரீதியாகவும் பல ஆலோசனைகளை வழங்கியவர் நம்ப புரபசர்ஜீ.எல்.ஐயா 'அந்த மனிதனையே லோ படிச்சு இருக்காரா, டிகிரி எடுத்து இருக்காரா மண்டையில் இருப்பது எல்லாம் களிமண் தான்' என்று நக்கல் அடித்தார்.

இந்த ஜே.வி.பி. காரங்கள் ஒரு தூசு. அது தான் ஜனாதிபதி வெளிப்படையாகவே சொல்லிப்புட்டார் கொலை வெறிபிடித்து அலைந்த இந்தப் பசங்கள்; இப்ப எல்.டி.டி. காரங்களை கொலைகாரங்கள் என்று திட்டுறாங்கள் என்று. புலிகளை கொலை காரங்கள் என்று சொல்ல எந்த அருகதையும் இல்லை என்று நெற்றி அடியா ஜனாதிபதி அடிச்சிப்புட்டாங்க.''

''அப்பமன்னா! அம்மா ஜே.வி.பி.யினருக்கு 'கெட்அவுட்' சொல்லிப்புடுவாங்களோ?''

''என்ன மாப்பிளே! காலுக்குத் தானே செருப்பு தலைக்கு இல்லையே. சரிவராத செருப்பை தூக்கி எறிய வேண்டியதுதானே! தைரியம் இருந்தால் சொல்லட்டும் 'நாங்களும் முன்பு கொலை கலாசாரத்தை கடைப்பிடித்தவர்கள்தான். ஆயிரம் ஆயிரமா கொலை செய்துள்ளோம். ஆசிரியர்களை, அரசியல்வாதிகளை, பிக்குமாரை கொலை செய்தோம். வி.ஜே.குமாரதுங்கவையும் கொலை செய்தோம்.' இப்போது ஜனநாயக வழிக்கு வந்துள்ளோம் என்று.

''என்ன அங்கிள் பீடா போட்டவுடன் தைரியம் வந்து விட்டதுபோல''

''ஆமாம் இந்திய பீடா இல்லையா?''

''அப்படி என்றால் இந்தியா கொடுத்த சப்போட்டில் தான் அம்மாவும் அப்படிக் கூறி விட்டாரோ?''

''என்ன மாப்பிளே நான் கொடுத்த பீடாவைப் போட்டுக் கொண்டே என்னை வம்பில் மாட்டிவிடப் பார்க்கின்றீர்கள் ஆளை விடுங்க'' என்று கம்பி நீட்டிவிட்டார் கம்பளையார்.

## அமைச்சுக்கு வந்தது 'டபிள்கப்' ஆனால் எல்லாமே 'எஸ்கேப்!'

இந்த ஆண்டில் அந்த அமைச்சுக்கு வந்தவை புத்தம் புதிய 'டபிள்கப்' வாகனங்கள் எட்டு.

இந்த எட்டாவது நம்பர் கூடாது என்பதாலோ என்னவோ அந்த முத்தான அமைச்சர் தனது தலைவருக்கு நான்கு வாகனங்களை தாளமாக வழங்கிவிட்டாராம். தலைவர் பிச்சையாகப் போட்டது தானே இந்த டம்மி அமைச்சர் பதவி. அதற்கு நன்றிக்கடனாகவே நான்கு ''டபிள் கப்'' புகளையும் தலைவரின் உண்டியலில் போட்டுவிட்டாராம்.

இப்பொழுது தலைவரின் மெய்ப்பாதுகாப்பாளர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் தலைவரின் முன்னும் பின்னும் சர்புர் என்று பறக்கின்றார்களாம் இந்த 'டபிள் கப்'புகளில்.

அதோடு நின்று விடவில்லை. வந்ததும் வாராததுமாக இரண்டு வாகனங்களை பொலிஸ் காரர்களிடம் கொடுத்து வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தாராம். எண்ணி இரண்டே வாரங்களில் இரண்டு வாகனங்களையும் முட்டி மோதி பீஸ்பீஸாக்கிக் கட்டி விட்டனராம்.

எட்டு 'டபிள் கப்'களில் ஆறு அம்போவாகிவிட்டனவாம். எஞ்சி உள்ள இரண்டு 'டபிள் கப்' புகளும் அமைச்சில் கிடந்து அல்லாடிக் கொண்டிருக்கின்றனவாம்.

அது சரி மலையகத்தில் பாலாறும் தேனாறும் பொங்கிப்பெருகி ஓடவைக்கத்தான் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டோம் என்றனர்.

ஆனால் ஜூனியர் முத்து அமைச்சராகவும் சீனியர் சாமி பிரதியாகவும் எப்படி நடமாடுவது என்ற கூச்சத்தால் சாமியானவர் அமைச்சுப் பக்கமே போவதில்லையாம்.

தன்னத் தனியாக தூசுதட்டிக் கொண்டிருக்கும் முத்தான அமைச்சரும் டம்மியாக்கப்பட்டு சுதந்திரமாக எதையும் செய்ய முடியாமல் மூக்கை சுரண்டிக் கொண்டு அமர்ந்து விட்டாராம்.

என்ன செய்வது? பாவம் மலையக ஆசிரியர் நியமனம், பொலிஸ் உத்தியோகம் என மே மாத நடுப்பகுதியில் நியமனங்களை வழங்குவோம் என்று தம்பட்டம் அடித்து விட்டார். இப்போது ஏதுமே நடக்கவில்லை. தன்னாலும் சுயமாக நடக்க முடியவில்லையே என்று கண்ணீர் வடிக்க முடியாத நிலையில் நடமாடுகின்றாராம்.

இந்த மனிதன் பிழைக்கத் தெரியாத ஆள். அமைச்சுப் பதவி இருக்கு. சொகுசு வாகனம் இருக்கு. வெளிநாட்டு சுற்றுப் பயணம் இருக்கு. இவற்றை எல்லாம் விட்டு விட்டு மக்கள் சேவை அது இது என்று அலட்டிக் கொள்ள வேண்டாம் என ஆசாமியர் ஒருவர் ஆறுதல் படுத்துகின்றாராம். எப்படி இருக்கு இவர்களின் அரசியல்?

## தம்பிக்கு அடித்தது யோகம் அண்ணன்மாருக்கு மனதில் காயம்

''நாமலும் தான் காலம் காலமாக கட்சிக்கு, சங்கத்துக்கு என்று மண்டைமயிர் எல்லாம் போகப் பாடுபட்டம். என்ன புண்ணியம்! கடைசிவரை இந்த எம்.பியும் கம்பியும் தான் மச்சான்'' என்று மனம் நொந்து போய் தத்தமது கவலைகளைப் பங்கு போட்டுக் கொண்டிருந்தனர் மலையகத்தின் மூத்த அரசியல் வாதிகள் இருவர்.

அங்கத்தினர்களுக்கு மட்டுமே என்று 'போர்ட' போடப்பட்டிருக்கும் அந்த ரெஸ்ட்டுரண்டில் கூட்டம் அதிகம் இல்லை.

அட்டனில் ஜெகஜோதியாக இருப்பவரும், நுவரெலியாவில் பிள்ளையாக இருப்பவருமே இப்படி சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தனராம். இவர்களுடைய பேச்சு தலவாக்கலை பக்கம் திரும்பியது.

''ஆமாம் மச்சான்! இந்த கோவிந்தன் ஏதோ புதுக்கட்சி ஆரம்பிக்கப் போவதாக படம் மாத்துக் காட்டினார். இந்த பேப்பர் காரங்கள் எல்லாம் போட்டு அடி அடி என்று அடித்து ஆளைவாய் திறக்க முடியாமல் செஞ்சிப் புட்டாங்களே!'' என்றார் நடாராஜப் பெருமானுக்கே பிள்ளையானவர்.

என்னடா இது நம்மைப்பற்றி பேச்சு அடிபடுகின்றதே என்று பேனா நண்பரும் காதை அவர்கள் பக்கம் ஒட்டி வைத்துவிட்டார்.

''என்னதான் என்றாலும் நம்ப தலைவர் சொல்லித்தானே இந்த கோவிந்தனை நாம் கூட்டிவந்தோம். கடைசியில் இப்படியா காலை வாரி விடுவது? இப்பபாரு அரசனை நம்பி புருசனையும் கைவிட்ட கதையாச்சு''

''ஆமாம் மச்சான் இந்த கோவிந்தன் தான் முன்பு ஒரு முறை பெரிய தலைவரின் படத்தைக் கொண்டுபோய் தலவாக்கலை ஆற்றில் கருமாதி செய்தவர்.''

''அதோடு நின்றாரா? விலகியவுடன் ஹிட்லர், இடி அமின், சர்வாதிகாரி அப்படி இப்படி என்று எல்லாம் முழக்கம் இட்டார். அதையும் இந்த பேப்பர் காரங்கள் படத்தோட போட்டாங்கதானே?''

''நீங்க சொன்னதும் சரிதான். நல்லதை சொன்னாலும் போடுவாங்க, கெட்டதைச் செய்தாலும் போடுவாங்க. ரொம்ப நிதானமாகப் பேசவேணும்'' என்று உஷார் படுத்தி விட்டார் பிள்ளையானவர்.

''அது சரி, எம்.பி மந்திரி அது இது என்று என்னமோ சொல்ல வந்தீங்களே! அது என்ன?''

''ஆமாம் சொல்ல வந்த விடயத்தை சொல்லாமலே விட்டு விட்டேன். இப்ப பாருங்க; நாம எல்லாம் எத்தனை வருடம் இந்த சங்கத்தைக் கட்டிக் காத்தோம். ஐம்பது சதம் சந்தா வாங்கின காலத்தில் இருந்து கஷ்டப்படுகிறோம். நாம விதையை போட்டு உரம் இட்டு தண்ணி ஊற்றி வளர்த்துவிட்டோம். இப்ப என்னடா என்டால் நேற்று வந்தவங்கள் நிழலில் இருந்து கொண்டு பழம் சாப்பிடும் கதையாகிவிட்டது.''

''உண்மை தாங்க அண்ணே! நாம இந்த பிரதேச சபைக்கும், மாகாண சபைக்கும், நாடாளுமன்றத்துக்கும் வர மூன்று தசாப்தங்கள் பிடித்தன. ஆனால் இந்த கண்டிக்காரர் நேற்று வந்தார். வந்தவுடன் உபதலைவர் ஆனார். பின் எம்.பியானார். இப்ப நிரதி அமைச்சராகவும் ஆகிவிட்டார். இதுதான் கவலை''

''அப்படியானால் நாமும் கட்சி மாறப் போகிறோம்; கட்சியைவிட்டு வெளியேறப் போகிறோம் அப்படி இப்படி என்று 'ஸ்டன்ட்' அடித்தால் தான் தம்பியாரும் கொஞ்சம் மசிஞ்சு வருவார் போல இருக்கு''

''என்ன செய்வது பிள்ளை நமக்கே வயசு போய்விட்டது. அடுத்தமுறை டிக்கட் கிடைக்கிறதோ தெரியாது. இருக்கும்வரை வெட்டி எடுக்க வேண்டியதை எடுத்துக் கொள்ளவேண்டியது தான்'' என்று கூறிக் கொண்டே வெயிட்டரை அழைத்து அடுத்த ரவுண்டுக்கு ஓடர் கொடுத்தார் அட்டனுக்கே ஜெகஜோதியானவர்.

எப்படி இருக்கு மலையக அரசியல்.

சுவிஸில் உங்கள் அபிமான

சுடர் ஒளி

விளம்பர முகவர்

சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (கனா)

MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND
Telephone :- 0041 - 043. 3179137 - 9

# பேரினவாதம் சன்னதம் கொள்கிறது



பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துவரும் அதேவேளை தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதம் சன்னதங்கொள்ளத் தொடங்கியுள்ளது.

தமிழர்களுக்கான தீர்வு பற்றி பேசிய போதெல்லாம் கடந்த காலத்தில் பேரினவாதம் தென்னிலங்கையில் மிகக் கடுமையான முறையில் நடந்துகொண்டது. ஆனால் இம்முறை தீர்வு பற்றியல்ல மனிதாபிமான பிரச்சினைக்கான ஒரு கட்டமைப்புப்பற்றி பேசும் போதே தென்னிலங்கை பேரினவாதம் கிளர்ந்தெழுந்து நிற்கின்றது. இது தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கான தீர்வினை சிங்கள தேசம் தரும் என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதது என்பதை உணர்த்தி நிற்கிறது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தை கண்டியில் ஹெலஉறுமயவும், கொழும்பில் பிக்குகள் முன்னணியும் நடத்தத் தொடங்கின. எனினும் கண்டியில் ஹெலஉறுமய மேற்கொண்ட போராட்டம் பிசுபிசுத்து கைவிடப்பட்டுவிட்டது.





சாகும்வரையான உண்ணாவிரதத்தினை ஹெலஉறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்சோபித்த தேரர் ஆரம்பித்திருந்தார். ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை கைவிடுவதாக அறிவிக்கும் வரை தனது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தெரிவித்த அவர், ஜனாதிபதி அவ்வாறானதொரு உத்தரவாதம் வழங்காமலேயே போராட்டத்தை கைவிட்டார்.

உண்ணா நோன்[illegible]து உயிரை நீத்தல் என்[illegible] சாதாரணவிடயமல்[illegible] அதற்கு [illegible] உயர்ந்[illegible] அர்ப்பணிப்புத் தேவை. சாதாரண அபிலாஷைகளைக் கொண்ட மனிதனா[illegible] சாகுவரை உண்ணா[illegible]தம் இருந்து உயிர்விட முடியாது.

இவ்வாறான போராட்டத்திற்கு உறுதியான குறிக்கோ[illegible] மட்டுமல்ல[illegible] தார்[illegible]நியிலான பு[illegible]மும் இருத்தல் வே[illegible]டும். எனவே தனது உண்ணாவிர[illegible]போராட்டத்தை தேரர் கைவிட்டமை[illegible] ஆச்சரியத்துக்குரியத[illegible]

தேரர் போராட்ட[illegible] ஈடுபட்டபோது அ[illegible]ர் டி.எம்.ஜெயரட்ன பி[illegible]ருமாறு கூறியிருந்தார் "சில கு[illegible]கோள்களுக்காக சாகும்வரை உண்ணா[illegible]ான்பிருந்து அவைக்காகவே தன[illegible]யிரை நீத்தவர் ஒருவரே. அவர் தீலீ[illegible] மட்டும் தான் இப்போது பிக்குகளு[illegible] உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு தியாகங்களைச் செய்தால் அவர்களை நாம் வரலாற்றில் பதிவு செய்வோம்" என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை ஓமல்பே சோபித்த தேரர் உண்ணாவிரதத்தை கைவிட்டமைக்கான பின்னணித் தகவல்கள் பல வெளியாகியுள்ளன.

உண்ணாவிரதத்தை தேரர் கைவிடாமல் இருந்திருந்தால் அவரை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்த பொலிஸார் தயாராக இருந்தனர். குறிப்பிட்ட இடத்தில் உண்ணாவிரத நடவடிக்கை மேற்கொள்வது சட்டத்துக்கு முரணான விடயம் எனவும் இது குறித்த நடவடிக்கைக்குப் பொலிஸார் கண்டி நீதிமன்றத்தில் உத்தரவைப் பெற்றிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து நாட்களாக உண்ணாவிரதமிருந்த தேரர், மகா நாயக்கர்களை ஜனாதிபதி சந்தித்ததை அடுத்து – அதாவது ஜனாதிபதி மகாநாயக்கர்களுக்கு பொதுக்கட்டமைப்புக் குறித்து வழங்கிய வாக்குறுதி உண்ணாநோன்பிருந்த தேரருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து உண்ணா நோன்பைக் கைவிட்டார்என அறிவிப்பு வெளியாகியது.

ஜனாதிபதி சந்திரிக்கா பொதுக்கட்டமைப்பை கைவிட்டதாக அறிவித்தால் மட்டுமே போராட்டத்தைக் கைவிடுவேன் எனத் தெரிவித்த தேரர், மகாநாயக்கர்களுக்கு ஜனாதிபதி வழங்கிய உறுதி மொழியை அடுத்து கைவிட்டமையே பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

சமகாலத்தில் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாகவும் தேசிய பிக்குகள் முன்னணியினர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து பிக்குகள் முன்னணி ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், நாட்டின் இறைமையை பாதுகாக்க உண்ணாவிரதம் இருந்துவரும் தம்பர அமில தேரருக்கு உயிராபத்து ஏற்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு யோசனையை கைவிட்டு இந்த உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்காது விடின் தம்பர அமில தேரர் மட்டுமல்லாது தமது உயிரைக்கொடுக்க மேலும் பௌத்த குருமார் வரிசையில் இருக்கிறார்கள் எனவும் இனவாதத்தை அக்கடிதத்தில் கக்கியுள்ளது மேற்படி பிக்குகள் முன்னணி

இதேவேளை மூன்று நாள் இடைவெளியில் இரு தடவைகள் இனவாதிகளால் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (10.06.2005) ஹெலஉறுமய கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இருந்து ஜனாதிபதி மாளிகையை சுற்றிவளைக்கும் நோக்கோடு சென்றதாக பிக்குகள் தெரிவித்தனர்.

எனினும் பொலிஸார் அவர்களைத் தடுத்த நிறுத்தி கண்ணீர்புகைக் குண்டு தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர்.

அதேபோல கடந்த திங்கட்கிழமை (13.05.2005) ஜே.வி.பியினரின் அனுசரணையுடன் பல்கலைகழக மாணவர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக மருதானையில் இருந்து ஜனாதிபதி மாளிகை வரை பேரணியாக சென்றனர். மேலும் உட்செல்ல முயன்ற மாணவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல் நடத்தி விரட்டியடித்தபோது மீண்டும் மீண்டும் கூடி போராட்டத்தை நடத்தியது ஜே.வி.பி ஆதரவு பல்கலைக்கழக மாணவர் அமைப்பு.

ஜே.வி.பியின் பின்னணியுடன் நடத்தப்பட்ட இப்பேரணிப் போராட்டம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் பெருமளவு மாணவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர்.

அதேவேளை பேராதனை பல்கலைக் கழகத்துக்கு அண்மித்த கலகா சந்திப்பகுதியில் கறுப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் 20க்கு மேற்பட்ட மாணவர்கள் சத்தியாகிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு தென்னிலங்கையில் சிங்கள பேரினவாதக் குழுக்களால் நடத்தப்படும் போராட்டங்களின் விளைவு ஜனாதிபதிக்கு மிகப்பெரும் சவாலாக மாறியுள்ளது.

பொதுக்கட்டமைப்பு திட்டத்தை கைவிடும்படி ஜனாதிபதிக்கு பேரினவாதம் அழுத்தம் கொடுத்து வருகிறது.

அதே சமயம் பொதுக்கட்டமைப்பு உள்ளடக்கத்தில் பெரிதாக ஒன்றும் இல்லை என்று தமிழர் தரப்பு விசனம் தெரிவிக்கின்றது. எனினும் மேற்படி திட்டத்தை சிங்களப் பேரினவாதம் சாகடித்துவிடும் நிலையே காணப்படுகிறது.

-கே.பி-

சுடர் ஒளி
ஜூன் 19 – 25, 2005
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## மறக்கமுடியாத பாடம்

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கம் பதவி ஏற்று பதினான்கு மாதங்கள் தான் ஆகின்றன.

அரசுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக ஆட்சி கவிழும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தெருவால் போன விஷப் பாம்மைப் பிடித்து மடியில் கட்டிக் கொண்டதன் பலனை ஜனாதிபதி தற்போது அனுபவிக்கிறார்.

பொதுத்தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்தவர் ரணில் விக்கிரமசிங்க. இதனால் இருபது வருடகால யுத்தத்துக்கு முடிவு வந்தது.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பமாக இருந்த சமயம் தனது அதிகார மோகத்தினால் நயவஞ்சகமாக ரணிலின் ஆட்சியைக் கலைத்தார் ஜனாதிபதி. இன்று அவர் படித்துள்ள கசப்பான பாடம் வாழ்க்கையில் மறக்க முடியாதது. ஏனைய தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கும்.

ஜனாதிபதியின் தந்தை எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவும் முன்பு இதே போன்ற நெருக்குதல்களை எதிர்நோக்கியவர்தான். ஆனால், அவரது கட்சிக்குள் ஓரளவு ஒருமைப்பாடு இருந்தது. தமிழ்மக்களுக்கு பிராந்திய சபைகளை வழங்குவது நியாயமானது என்பதை தனது கட்சியினரை ஏற்றுக் கொள்ள வைத்திருந்தார் பண்டாரநாயக்கா.

ஆனால், இன்று முழு அரசாங்கமே ஜே.வி.பி – சுதந்திரக்கட்சி என்று இரண்டு பட்டு நிற்கிறது. சுதந்திரக்கட்சிக்குள்ளேயே ஜனாதிபதியின் முதுகில் குத்துவதற்கு சதி நடக்கிறது. மந்திரிப்பதவிக்காக அவரது ஆட்சிக்கு முண்டு கொடுத்து வரும் சில கட்சிகள் கூட நழுவும் போக்கில் செயற்படுகின்றன.

ஏற்கனவே விலைவாசி உயர்வினால் ஜனாதிபதிக்கு வெளியே தலைகாட்ட முடியாத நிலைமை. சர்வதேச சந்தை நிலவரங்களை எவ்வளவு காலத்துக்கு சாட்டாகக் கூறிக்கொண்டிருக்க முடியும்?

தற்பொழுது தினமும் நடைபெறும் போராட்டங்கள், போராட்டங்களை அடக்க பொலிஸார் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ஆகியவற்றால் சிங்களப் பௌத்தர்களின் பாதுகாவலர்கள் என்ற பெயரை ஹெல உறுமயவும் ஜே.வி.பியும் தட்டிக் கொண்டுவிட்டன.

ஜே.வி.பியினருடன் கூட்டணி அமைத்துக் கொண்டதன் தவற்றை ஜனாதிபதி தற்போதாவது உணர்ந்திருப்பது அவரின் எதிர்கால அரசியல் நகர்வுகளுக்கு உதவும். ஜே.வி.பியின் தலையீடு காரணமாக கடந்த பதினான்கு மாதகாலத்தில் இந்த அரசினால் எதனையுமே செய்ய முடியவில்லை.

* புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க முடியவில்லை.
* பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த முடியவில்லை.
* இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.
* சமுர்த்தி திட்டங்களில் பின்னடைவு.
* பத்தாயிரம் குளங்களை புனரமைக்கும் திட்டமும் பிசுபிசுப்பு.

நாட்டை பொருளாதார நெக்கடிகளில் இருந்து மீட்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை விற்கலாம் என்றால் அதற்கும் ஜே.வி.பி.யினர் இடம் கொடுக்கவில்லை. இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டத்தையும் அவர்கள் அமுல் செய்யவிடவில்லை.

அரச சபைகள் திணைக்களங்களுக்கு பணிப்பாளர்களை நியமிப்பது முதல் அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை விவகாரம் வரை ஜே.வி.பியும் ஜனாதிபதியும் குடுமிப்பிடி சண்டைதான்.

ஆகவே இவை எல்லாம் ஜனாதிபதிக்கு வரலாற்றில் மறக்க முடியாத பாடங்கள்.

# பொதுக்கட்டமைப்பு படும்பாடு!

பொதுக்கட்டமைப்பு விடயம் இன்று தென்னிலங்கையில் பெரும் அரசியல் சூறாவளியை ஏற்படுத்தியிருக்கிறது. ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்துக்கான மேற்படி திட்டம் கடந்த ஒரு வருடத்துக்கு முன்பாக ஆட்சியைக் கைப்பற்றிய கூட்டமைப்பு அரசாங்கத்துக்கும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கத்தில்கூட பெரிதாக ஒன்றும் இல்லை. இந்த நிலையில் அத்திட்டத்தை இம்மாத இறுதிக்குள் ஏற்படுத்தியே தீருவேன் என ஜனாதிபதி தெரிவித்ததைத் தொடர்ந்து தென்னிலங்கையில் பரவலாக இனவாத சக்திகளால் தொடர்ந்து எதிர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த எதிர்ப்புக்களை அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியும், சில பிக்குகள் அமைப்புகளுமே முன்னின்று நடத்தி வருகின்றன.



ஜனாதிபதி மாளிகையை நோக்கி முன்னேறிய ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் தண்ணீர் பீய்ச்சி கலைக்கின்றனர்.

## அரசியல் லாபம் கருதியே போராட்டம்

தென்னிலங்கைப் பேரினவாதிகள் அரசியல் இலாபங்களைக் கருத்தில்கொண்டு மேற்படி பொதுக்கட்டமைப்பை எதிர்த்து வருகின்றனர். உண்மையில் இவர்கள் சிங்கள இனத்தின் மீது உள்ள பற்றின் காரணமாகவே போராடுகிறார்கள் என்பது மிகவும் அபத்தமானது. சுய அரிசியல் லாபங்களே இங்கு முன்னிலை பெற்றுள்ளன என்பதே உண்மை ஆகும்.



லிப்டன் சுற்று வட்டத்தில் ஜே.வி.பி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பிக்குகள்.

இதற்கு நல்ல உதாரணம் அண்மையில் ஹெல உறுமயவின் பிக்கு எம்.பியான ஓமல்பே சோபித தேரர் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக ஆரம்பித்து திடீரென அதைக் கைவிட்டதே. அவர்களின் உண்மை நிலையை வெளிச்சம் போட்டுக்காட்ட இது போதுமான ஓர் உதாரணம்.

ஜே.வி.பியின் எதிர்ப்பும் அப்படியானது தான். ஆரம்ப காலம் முதல் ஜே.வி.பி எதற்கெடுத்தாலும் போராட்டங்களை நடத்திவந்தது. இதன் மூலம் தன்னை வளர்த்துக்கொண்டது. தற்போது அரசில் இருப்பதனால் போராட்டம் இல்லாமல் தனது செல்வாக்குக் குறைந்துவிடுமோ என்ற அச்சம் ஜே.வி.பிக்கு உண்டு. இதன்காரணமாக அரசாங்கத்தைக் கவிழ்த்தாலும் பரவாயில்லை போராட்டமே பிரதானமானது என ஜே.வி.பி. போராட்டத்தில் குதித்துள்ளது.

கடந்த 57 ஆண்டுகால இலங்கையின்வரலாற்றை தூக்கிப் பார்த்தால் தமிழர்களுக்கு உரிமை கொடுப்பது பற்றியோ அல்லது அதுபற்றி பேச்சு எடுத்தாலோ பேரினவாதம் நெருப்பெடுத்துக்கொண்டு நிற்கிறது.

கடந்த இருபது வருடப்போர் கூட பேரினவாதத்தின் எண்ணத்தில் சிறிதும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக மேலும் பேரினவாதம் வளர்த்துவிடப்பட்டுள்ளது.

பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம், இலங்கை- இந்திய ஒப்பந்தம் என்பன ஏற்பட்டபொழுது பேரினவாதம் எவ்வாறு போராட்டங்களையும், பாதயாத்திரைகளையும் நடத்தி தனது திட்டத்தில் வெற்றிகண்டதோ அதேபோல இன்றும் சிங்கள இனத்தைக் காப்பாற்றப் போவதாக நவ துட்டகைமுனுக்கள் சூளுரைக்கின்றனர்.

2000ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றில் ஒரு தீர்வுப் பொதியை கொண்டு வந்தபோதும் பேரினவாதம் கிளர்ந்து எழுந்தது. சந்திரிகா பணிய வேண்டி வந்தது.

அன்றைய நிலையை விட இன்று நிலைமை வேறு. அன்று சர்வதேசம் தமிழரின் பிரச்சினை பற்றி கொண்டிருந்த அபிப்பிராயம் வேறு. இன்றோ தமிழரின் அபிலாஷைகளை சர்வதேசம் புரிந்துகொள்ளத்தொடங்கிவிட்டது. இதனால் இன்று ஏமாற்ற முடியவில்லை சிங்கள அரசால்.

உறுதி அளித்த நிதி உதவிகளை வழங்குவதற்கு பொதுக்கட்டமைப்பு அவசியம் என சர்வதேசம் உணர்ந்து அதை சிங்கள தேசத்துக்கு வலியுறுத்தியுமுள்ளது. மே மாதம் கண்டியில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் மட்டுமல்லாது, இம் மாதம் 13ஆம் திகதி வாஷிங்டனில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் மேற்படி நாடுகள் பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா இம்மாத இறுதிக்குள் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தாவிடில் தனது பதவியையே துறக்கப்போவதாக சபதமிட்டுள்ளார். அதற்கேற்றால் போல் தனது அரசியல் நகர்வுகளையும் மேற்கொண்டுள்ளார்.

ஐ.தே.கவுடன் கடும்போக்கை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அண்மையில் ரணில் விக்கிரமசிங்கவுடனும், தமிழ்க்கூட்டமைப்பினருடனும் பேச்சுகளை நடத்தியிருந்தார்.

-கலின்-

இந்த நிலையில் ஜே.வி.பியும் அரசில் இல்லாத சூழ்நிலையில் ஜனாதிபதி ஒன்றில் பொதுத் தேர்தலை நடத்தும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார் அல்லது நாடாளுமன்றத்தை சில மாதங்கள் ஒத்திவைக்கவும் அவர் முனையக்கூடும்.

பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி ஏற்படுத்தினாலும் அது தமிழர் தரப்பை எவ்வளவு தூரம் திருப்திப்படுத்தும் என்பது தெரியவில்லை. தமிழர்கள் நினைத்துப் பார்க்கமுடியாத தியாகங்களைச் செய்தும் ஒரு சாதாரண பொதுக்கட்டமைப்பை வழங்குவதற்கே சிங்கள தேசம் முரண்படுகின்றது எனில் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் விடுக்கப்பட்ட செய்தியையே- அதாவது தமிழீழத் தனியரசு என்பதனையே- இறுதி வடிவமாக தமிழர் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம்.

ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் எழுதிய
தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்
(The Fall and Rise of the Tamil Nation)
தொடர் அரசியல் கட்டுரை
அடுத்தவார சுடர் ஒளி வாரமலரில் அதாவது
ஜூன் 26 - ஜூலை 03 வாரமலரில்
ஆரம்பமாகிறது.

# வவுனியாவில் வெடித்த முரண்பாடுகள்!

வவுனியா குருமண்காடு ஈ.பி.டி.பி அலுவலகத்தினுள் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி இருக்கிறது. அண்மைக்காலமாக ஈ.பி.டி.பி அமைப்புக்கும் ஈ.பி..ஆர்.எல்.எப். வரதர் அணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டின் விளைவே இதுவெனச் சொல்லப்படுகிறது.

### பின்னணி என்ன?

இது சம்பந்தமான பல பின்னணித் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. சில மாதங்களுக்கு முன் வவுனியா கூமாங்குளம் பகுதியில் இருவர் சுடப்பட்டும், கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களை ஈ.பி.டி.பி தனது உறுப்பினர்கள் என உரிமைகோரியது. அதே சமயம் ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணித் தலைமை அவர்கள் தமது உறுப்பினர்கள் என்றது. இதை அடுத்தே பிரச்சினை அம்பலத்துக்கு வந்தது.

வவுனியா குருமண்காடு பகுதியில் 2000ஆம் ஆண்டு முதல் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி முகாம் இயங்கி வருகிறது. ஈ.பி.டி.பி அமைப்பானது 1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் வவுனியாவுக்குள் நுழைந்தது. வவுனியா குட்செட் வீதியில் முகாம் அமைத்துச் செயற்பட்டு வந்தது.

இந்த நிலையில் 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஈ.பி.டி.பி வவுனியாவில் வரதர் அணியுடன் நெருங்கிச் செயற்பட்டு வந்தது. அப்போது வவுனியாவின் வரதரணிப் பொறுப்பாளராக சிவம் என்பவர் இருந்தார். அவர் பின்பு சில காரணங்களால் வவுனியாவைவிட்டு வெளியேறி வேறு மாவட்டத்தில் செயற்பட்டு வந்தார். இதனால் வரதரணி பொறுப்பாளராக லிங்கேஸ்வரன் என்ற இராசையா செயற்பட்டுவந்தார்.

இந்த நிலையில் ஈ.பி.டி.பியினர் பெருமளவு பணத்தினை வாரி வழங்கி வரதர் அணி உறுப்பினர்களையும், குருமண்காடு முகாமையும் தம்வசப்படுத்திக் கொண்டனர். வரதர் அணியின் பெயர்ப்பலகையுடன் செயற்பட்ட மேற்படி முகாம் இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் ஈ.பி.டி.பி பெயர் பலகையுடன் இயங்கி வரத் தொடங்கியது. வவுனியா ஈ.பி.டி.பி பொறுப்பாளரான ரகு என்பவரின் தலைமையின் கீழ் லிங்கேஸ் தலைமையிலான வரதரணி சங்கமம் ஆகியது.

### அறிக்கைப் போர்

இதை அடுத்து ஈ.பி.டி.பி அமைப்புக்கும், வரதர் அணிக்கும் இடையே பெரும் அறிக்கைப்போர் நடந்தது. வரதர் அணியோ, காஸ்ரோ என்ற புலி உறுப்பினருடன் இணைந்து ( இவர் உண்மையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது) ஈ.பி.டி.பி தமது முகாமைக்கைப்பற்றி விட்டதாகத் தெரிவித்தது. அதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியின் கடசிப்பத்திரிகையான 'கண்ணோட்டம்' ஏபரல் மாத இதழில் மேற்படி முகாமை விட்டு ஈ.பி.டி.பி வெறியேற வேண்டும எனா முன்பக்கததில் மிகவும் மோசமாக விமர்சித்து எழுதப்பட்டிருந்தது.



இதற்கு பதிலடி கொடுதத ஈ.பி.டி.பி, வரதா அணியின் லிங்கேஸ்வரனிடமிருந்து (தற்போது இவா ஈ.பி.டி.பி) ஒரு கடிதத்தைப் பெற்று தமது இணையத்தில் பிரசுரித்திருந்தது. அதில் வரதர் அணியின் தலைமையை கடுமையாக விமர்சித்திருந்ததுடன் வரதர் அணியே சுபத்திரன் உட்பட முக்கியஸ்தர்களை காட்டிக்கொடுத்து கொன்றதாகவும் வரதரணிக்குள் புலிகள் புகுந்திருப்பதாகவும் குற்றச்சாட்டுக்களை அடுக்கிவிட்டிருந்தார் லிங்கேஸ்.

இவை குறித்து வரதர் அணியின் தற்போதைய பொறுப்பாளர் எனக் கருதப்படும் சுகு என்ற சிறீதரன் பெரிதாக அக்கறை கொள்ளவதில்லை எனவும் இவர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நல்லுறவுடன் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால் விசனமடைந்த மன்னார் வரதர் அணிப் பொறுப்பாளர் மற்றும் மட்டக்களப்பு பொறுப்பாளர் துரைரத்தினம் ஆகியோர் இவை குறித்து இந்தியாவில் உள்ள வரதராஜப் பெருமாளுடன்கதைத்துள்ளனர்.

இதன்பின் முன்னாள் வவுனியா வரதரணிப் பொறுப்பாளர் சிவம் உட்பட ஒரு குழுவினர் மேற்படி தமது முகாமுக்குச் சென்றபோது அங்கிருந்த லிங்கேஸ் கைத்துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தி அவர்களை உடனடியாக வெளியேறுமாறு கூறி வெளியேற்றியுள்ளார். இதையடுத்து இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

(9 ஆம் பக்கம் பார்க்க)


## MARKETING EXECUTIVES

உதயன் / சுடர்ஒளிப் பத்திரிகைகளுக்கு கொழும்பில் விளம்பரங்கள் சேகரிப்பதற்கு சுறுசுறுப்பான விளம்பரப் பிரதிநிதிகள் தேவை. ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடியவராகவும், ஆகக்குறைந்த தகைமையாக G.C.E. (O/L) பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் லைசன்ஸ் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கவர்ச்சிகரமான கமிசனுடன், கல்வித் தகைமை / அனுபவத்துக்கு ஏற்ப நல்ல சம்பளம் வழங்கப்படும்.

30.06.2005க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**Chief Executive Officer**
(Marketing & Administration)
Mass Media Syndicate (pvt)Ltd.
85,Jeyanthamallimarachchi Mawatha,
Colombo - 14.

## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் [illegible] முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம், மற்றும் ஆஸ்மா, [illegible], வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின்போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

யூன் 22 – 27 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

யூன் 11 - 12 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

யூன் 14 -19
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

## Study in London
### University *of* East London

Instant Admissions will be offered for eligible students.

With over 18,000 students and rated among the top 5 modern universities for research by the Guardian*, UEL is a dynamic university with a reputation for innovation and diversity.


**COMPUTER FACILITIES AND ADSL INTERNET AVAILABLE FOR STUDENTS AT KMS**


Education Advisor P.K. Suhanthan is available in Colombo.

UeL
University of East London

• BSC • MSC
• MBA • PhD

September 2005 Intake





Expert Advice and guidance will be given to obtain the Visa
University Accommodation Available.

(PART TIME WORK CAN BE ARRANGED)

Hotlines: 0777-209446, 2361565

KMS Knowledge Management Systems
Leading Educational Consultants and Training Providers

No. 6-1st Floor 37th Lane, Wellawatte, Colombo 06.
E-mail: pksuhanthan@yahoo.co.uk

# கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பிறகே 'பேஸ்போல்' பற்றி சிந்திப்பேன் — கில்கிறிஸ்ட்

அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணி வீரர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவராக கில்கிறிஸ்ட் திகழ்ந்து வருகிறார். விக்கெட் காப்பாளரான இவர் அதிரடி ஆட்டக்காரராரும் கூட.

இவரது கிரிக்கெட் ஆட்ட நுணுக்கம் 'பேஸ்போல்' வீரர் ஆடுவது போலவே உள்ளது. அதனால் கில்கிறிஸ்ட்டை கிரிக்கெட்டிலிருந்து பிரித்து தனது அணியில் சேர்த்துக் கொள்ள பல 'பேஸ்போல்' கழகங்கள் முயற்சி செய்துவருகின்றன. அதற்காக கிரிக்கெட்டில் அவருக்கு கிடைக்கும் பணத்தைவிட 3 மடங்கு பணம் அதிகமாகக் கொடுக்க (சுமார் 20 கோடி ருபா வரை) தயாராக உள்ளது.

ஆனால் கில்கிறிஸ்டோ ''தொடக்கத்திலிருந்தே எனக்கு கிரிக்கெட் போட்டியில் தான் ஆர்வமுள்ளது. நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற பிறகுதான் 'பேஸ்போல்' பற்றி சிந்திப்பேன்'' – என்கிறார்.



# காது குத்துவது ஒரு குற்றமா? டேவிட் பெக்கம் கடும் ஆதங்கம்

அட... என் பையனுக்குத்தானே காது குத்தினேன். இதற்காக ஏன் இப்படி? என்று அலுத்துக் கொள்கிறார் கால்பந்து நட்சத்திரம் பெக்கம்.

கையில் விதவிதமாக பச்சை குத்துவது, காதில் கடுக்கன் போடுவது, ஒவ்வொரு நாளும் புதுவித தலைமயிரில் வருவது பெக்கமுக்கு வழக்கமான ஒன்று. இதே போல் தனது இரண்டு வயது மகன் ரோமியாவுக்கும் அவர் காதுகுத்த சர்ச்சை கிளம்பிவிட்டது.



1999 இல் பிரபல பொப் பாடகி விக்டோரியாவை மணந்தார் பெக்கம். இவர்களுக்கு பிறந்த மூன்றுமே அழகான ஆண் குழந்தைகள். இதில் இரண்டாவது குழந்தைதான் ரோமியோ. இவனுக்கு சமீபத்தில் காதுகுத்திப் பார்க்க ஆசைப்பட்டார் பெக்கம். உடனே இதற்கான ஏற்பாடுகள் நடந்தன. குழந்தையின் காதில் தோடும் ஏறியது. பத்திரிகைகளில் அப்படம் வெளிவர, பிரச்சினை ஆரம்பமானது.

இங்கிலாந்து சட்டப்படி 18 வயதானவர்களே பச்சை குத்தமுடியும். 16 வயதிற்குட்பட்டவர்கள் காது, மூக்கு, இமை, தொப்புள் என எங்கு வேண்டுமானாலும் பெற்றோர் அனுமதி பெற்று குத்திக்கொள்ளலாம்.

பெக்கம் விடயத்தில் சட்டப்படி எல்லாம் சரியாக உள்ளது. ஆனாலும், குழந்தையின் சம்மதத்தைப் பெற்றாரா? – இரண்டு வயதான குழந்தை மீது தனது 'பேஷன்' விருப்பத்தை திணிக்கிறார். – உடல் ரீதியாக அக்குழந்தைக்கு பாதிப்பை உண்டாக்குகிறார் என்று அடுக்கடுக்காக அவர் மீது புகார்கள் சுமத்தப்பட்டன.

இது பற்றி பெக்காமிடம் கேட்டதற்கு –''முக்கியமான காரணம் எதுவும் இல்லை. நான் பல நாட்களாக காது குத்தியுள்ளேன். என்னைப்போல ரோமியோவுக்கும் கடுக்கன் போட்டுப் பார்க்க ஆசைப்பட்டேன். அவ்வளவுதான். இப்போது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறான் பாருங்கள்.'' –என்றார் குஷியாக.

# பிரேசில் கால்பந்து அணிக்கு கிடைத்தது புது நட்சத்திரம்



கால்பந்து போட்டியில் பிரபலமான அணிகளில்ஒன்றாக பிரேசில் திகழ்ந்து வருகிறது. அந்தநாட்டைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர்களான ரொனால்டோ, ரொனால்டினோ ஆகியோரின் பெயரில் முதல் ஆங்கில எழுத்தான 'ஆர்' வரிசை கொண்ட விளையாட்டு வீரர்கள் எப்போதுமே விளையாட்டில் ஜொலிப்பார்கள் என்ற ராசி உண்டு.

முதலில் ரொமாரியோ உலகக் கிண்ணத்தை பிரேசில் அணி வெல்ல காரணமாக இருந்தார். கடந்த உலகக் கிண்ணப் போட்டியை வெல்ல ரொனால்டோ காரணமாக இருந்தார்.

அதேவரிசையில்தற்போதுரொபின்ஹோ என்ற 21 வயது இளைஞர் இடம் பெற்றிருக்கிறார்.

அடுத்த உலகக் கிண்ணக் கால்பந்து போட்டி ஜேர்மனியில் நடைபெற உள்ளது. அதற்கான தகுதிச்சுற்று ஆட்டம் ஒன்றில் பராகுவே அணியை பிரேசில் எதிர்த்தாடியது. இதில் ரொபின்ஹோவும் ஆடினார். அவர் சிறப்பாக விளையாடி ஒரு கோல் அடித்து அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்தார். இதனால் அவரும் பிரேசில் ரசிகர்களிடையே பிரபல்யம் அடைந்துள்ளார்.

2002 – 2004 ஆம் ஆண்டு நடந்த உள்ளூர் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடியதன் மூலம் ரொபின்ஹோவுக்கு சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்ற விருதும் கிடைத்துள்ளது.

முன்பு மைதானத்தில் ரொனால்டோ பந்தை விரட்டி எடுத்துச் செல்லும்போது ரசிகர்கள் எப்படி 'ரொனால்டோ, ரொனால்டோ' என்று கூச்சல் போடுவார்களோ அதேபோல் தற்போது ரொபின் ஹோவுக்கு மைதானத்தில் ரசிகர்கள் கூச்சல் போட்டு உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

''நான் எப்போது கால்பந்து விளையாட வந்தேனோ அப்போதிருந்தே எனக்கு இது பிடித்தமான விளையாட்டாக மாறிவிட்டது. என் வாழ்நாளில் கால்பந்து விளையாடுவதைத் தவிர வேறு எதுவும் எனக்கு சந்தோஷம் தருவதாக இருக்காது.''– என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறுகிறார் ரொபின்ஹோ.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரொபின்ஹோவின் தாயாரை தீவிரவாதிகள் சிலர் கடத்திச் சென்று 42 நாட்கள் கழிந்த பிறகே அவரை விடுதலை செய்தனர்.

இந்த சோகத்திற்கு இடையிலும் அதிலிருந்து விடுபட்டு கடந்த சில ஆட்டங்களில் ரொபின்ஹோ சிறப்பாக விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியக் கால்பந்து கழகம் ஒன்று இவரை சேர்த்துக்கொள்ள சுமார் 420 கோடி ருபா தர முன்வந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நெதர்லாந்தில் உள்ள எம்மன் நகரில் நடந்த 20 வயதிற்குட்பட்டோருக்கான சர்வதேச கால்பந்து போட்டியில், பிரேசில் வீரர் தியகோ குயிரினோவின் கோல் முயற்சியைத் தாவிச்சென்று தடுக்கிறார் நைஜீரிய கோல் காப்பாளர் அம்புரோஸ். இந்த ஆட்டம் இரு அணிகளும் கோல் அடிக்காததால் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

# விளையாட்டுச் செய்திகள்!

ஷைனீர்யா

## சேலை கட்டும் பெண்ணுக்கொரு...

நமீபியா நாட்டில் பிரடெரிக்ஸ் என்றால் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். 100, 200 மீற்றர் ஓட்டங்களில் இவர் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர். உலக தடகளப் போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்களையும், ஒலிம்பிக் போட்டிகளில் 3 வெள்ளிப் பதக்கங்களையும் வென்றிருக்கிறார்.



இவரது மனைவியின் பெயர் ருத். அண்மையில் பிரடெரிக்ஸ் தனது மனைவியுடன் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் ஒரு விழாவில் கலந்துகொள்வதற்காக வந்திருந்தார். அப்போது அனைவரும் ருத்தையே ஒரு நிமிடம் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காரணம், அவர் தமிழ்ப் பெண்களின் கலாசார உடையான சேலை, அணிந்து வந்திருந்தது தான்.

ஒரு முறை தென்னாபிரிக்கா சென்றிருந்த பிரடெரிக்ஸின் மனைவி அங்கே இந்தியப் பெண்மணி ஒருவர் அணிந்திருந்த சேலையைப்பார்க்க, அந்த உடை அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. அன்றிலிருந்து இவரும் சேலை, அணியப் பழகிக் கொண்டார். இப்போது எந்தப் பொது நிகழ்ச்சியென்றாலும் பிரடெரிக்ஸின் மனைவியை சேலையில்தான் பார்க்க முடிகிறது.

## சப்பலுக்கு கிடைத்த கௌரவம்

இந்திய அணிக்குப் புதிய பயிற்சியாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் கிரேக் சப்பல் மிகுந்த உற்சாகத்தில் உள்ளார். தன் மீது விழுந்திருக்கும் எதிர்பார்ப்புகளை எப்படி நிறைவேற்றுவது என்று தீவிர சிந்தனையில் உள்ளார். சச்சின் டெண்டுல்கர் போன்ற சிறந்த வீரர்கள் அடங்கிய அந்த அணிக்கு பயிற்சியாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று அவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது–



''இந்தியாவில் சர்வதேச அளவில் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் 4 பேர் உள்ளனர். எனவே அந்த தரம் வாய்ந்த வீரர்களுடன் இணைந்து பணிபுரிவது எனக்கு கிடைத்திருக்கும் பெரிய கௌரவம் ஆகும். பந்துவீச்சில் ஹர்பஜன், கும்ளே போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர். எனவே இவர்களுடன் இணைந்து பணிபுரிவது என்னை உற்சாகத்தில் ஆழ்த்துவதாக உள்ளது.

''அதே சமயம் இந்திய அணியில் சில சவால்களும் காத்திருக்கின்றன. மொத்தத்தில் இந்தப் பயிற்சியாளர் பதவி எனக்கு ஒரு சிறந்த பயணமாக இருக்கும்.'' – என்று புன்னகை ததும்பக் கூறுகிறார் சப்பல்.


# வெயிலில் முகம் கறுப்பது ஏன்?



கடும் வெயிலில் அலைந்து திரும்பினால் முகம் ஏன் கறுக்கிறது?

எம் உடலில் உள்ள இயற்கையான சரும அழகைப் பாதுக்காக்கவே!

ஏதோ செயற்கைச் சாதனங்களால் தான் பெண்களுக்கு முகமும், உடலும் பளிச் என்று மாறுகின்றன என்று தப்புக்கணக்குப் போடாதீர்கள்.



எல்லாமே இயற்கையில் இருப்பதுதான்.

பிறந்ததில் இருந்தே சரியான பராமரிப்பு இல்லாததால், இளம்பருவத்தில் உடலை செயற்கையால் பளபளப்பாக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும், இயற்கை அழகில் உள்ளது எப்போதும் இருக்கும். செயற்கை அழகு, கழுவினால் போய்விடும்தானே?

சரி. எமது தோல் எப்படி பளபளப்புடன் இருக்கிறது? எப்படி வெயிலிலும் மழையிலும் பாதுகாக்கப்படுகிறது? இதோ மருத்துவ ரீதியான பதில்கள்.

* ஆண்களாக இருக்கட்டும், பெண்களாக இருக்கட்டும். சிலர் மாநிறமாக இருப்பர். முகம், உடல் பகுதிகள் எல்லாம் அழகாக இருக்கும். சிலர் சுமாரான நிறமாகத்தான் இருப்பர். இதற்குக் காரணம் மெலனின் சுரப்பிதான்.

*மெலனின் சுரப்பி எவ்வளவு சுரக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு தோல் பாதுகாப்புக்கு நல்லது. அது குறைவாகச் சுரந்தால், மாநிறம் குறைவாக இருக்கும். அதிகமாக சுரந்தால் மாநிறம் அதிகமாக இருக்கும்.

*வெயிலில் அலைந்துவிட்டு வந்தால், சிலருக்கு முகம் கறுத்திருக்கும். சிலருக்குக் கறுக்காது. கறுக்கக் காரணம், மெலனின் அதிகமாகச் சுரக்கிறது என்று அர்த்தம்.

மெலனின் சுரப்பதால் தான் சூரியனில் இருந்து எமது உடலில் பாயும் புற ஊதாக் கதிர்களில் இருந்து எமது தோல் பாதுகாக்கப்படுகிறது. அப்படிப் பாதுகாக்கும்போது தான் எம் தோல் பாதிக்காமல் இருக்க மெலனின் அதிகமாகச் சுரக்கிறது.

*சூரியனின் புற ஊதாக் கதிர்கள் பாய்ந்தால், தோல் புற்றுநோய் வருவது நிச்சயம். இது வராமல் தடுப்பது இந்த மெலனின்தான்.

*பொதுவாகவே சூரியன் வெப்பக் கதிர்களை அதிகம் வீசுகிறது. உடல் தாங்காது என்று சிக்னல் செய்வது எம் கண்கள் தான்.

*சூரியனை நேருக்கு நேர் பார்த்தால் கண் சுருங்குகிறது. சில சமயம் அதிக வெயிலில் நிற்கும்போது எம்மை அறியாமல் கண்கள் சுருங்கி விரியும்.

*அப்போது கண்களை இணைக்கும் நரம்புகளுக்கு பெயர் ஆப்டிக் நெர்வ். கண்கள் சுருங்கியவுடன் வெப்பம் அதிகமாக இருப்பது பற்றி, இந்த நரம்புகள் மூலம் அவற்றின் 'மாஸ்டர் சுரப்பி'க்கு, அதாவது பிட்யூட்ரி சுரப்பிக்கு சிக்னல் கொடுக்கிறது.

*குளிர்ப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு மெலனின் குறைவாகச் சுரக்கும். அதனால்தான் அவர்கள் அதிக வெயிலைத் தாங்க மாட்டார்கள். வெயிலில் அவர்கள் கண்கள், உடல் பகுதிகள் தகதக என எரிய ஆரம்பிக்கும். அதனால்தான் கிரிக்கெட் பந்தயங்களில் வெளிநாட்டவர், எம் நாட்டில் ஆடும்போது, உதடு, கன்னம் ஆகிய பகுதிகளில் லோஷன்களைத் தடவிக்கொண்டு வருகின்றனர்.

*வெப்ப நாடுகளில் உள்ளவர்களுக்கு மெலனின் அதிகம் சுரக்கும். அதனால் அவர்கள் குளிர்ப்பிரதேச மக்களை விட சற்று கறுப்பாகத்தான் இருப்பர். இதற்குக் காரணம், மெலனின் சுரந்து தோலைப் பாதுகாக்கிறது என்பதுதான்.

இப்போது தெரிகிறதா? எப்படி. ஒருவர் மாநிறமாகவும் மற்றவர் சுமாராகவும் இருக்கின்றனர் என்று. அதனால்தான் செயற்கைச் சாதனங்கள் தேவைப்படுகின்றன. குழந்தைப் பருவத்தில் இருந்தே சீராக பராமரித்தால் கண்டிப்பாக மாநிறமாக என்றும் தோற்றமளிக்க வாய்ப்புண்டு.




## பொங்கி எழும் பேரினவாதம்

# யுத்த நிறுத்தம் நீடிக்குமா?

நீங்களும் வாழ்ந்து கொண்டு எங்களையும் வாழ விடுங்கள் என்று சிங்கள தேசத்தை வினயமாக வேண்டி, அனைத்து இனமக்களுடனும் சமாதான சக வாழ்வை விரும்பி – யுத்த நிறுத்தம் செய்த தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதத்தின் காட்டுக் கூச்சலும், இனவாத நடவடிக்கைகளும் அடுத்து என்ன நடக்குமோ என்ற பயத்துடன் அவர்களை வாழ வைத்துள்ளது. அத்துடன் பேரினவாதத்தின் எழுச்சியும் அதை அடக்க முடியாது அல்லல்படும் அரசின் கையாலாகாத்தனமும் தமிழீழ விடுதலைப் புலிகளை விரக்தியின் விளிம்புக்கு தள்ளி உள்ளன. தவிர அண்மைக்கால அரசியல் நகர்வுகளும் 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் இருந்து அமுலில் உள்ள யுத்த நிறுத்தத்தினை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அவர்களை தள்ளி விட்டுள்ளது.

### பொதுக்கட்டமைப்பு

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை வடக்கும் – கிழக்கில் முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை விரைவில் உருவாக்குவதற்கு சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று ஜனாதிபதி சந்திரிக்கா அறிவித்து வாய் மூடமுன் பேரினவாதிகள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக பேயாட்டம் ஆடத் தொடங்கினர்.

தலதா மாளிகையில்; கோட்டை புகையிரத நிலையத்தின் முன் பௌத்த பிக்குமாரின் உண்ணாவிரதப் போராட்டம், அவர்களின் கண்டனப் பேரணிகள், ஊர்வலங்கள், இவற்றை முறியடித்து கூட்டத்தைக் கலைக்க பொலிஸாரின் கண்ணீர் புகை பிரயோகம், வீதித்தடை, தண்ணீர் பீச்சி அடிப்பு இப்படி எத்தனையோ அனாகரிகச் சம்பவங்கள் இந்த பொதுக்கட்டமைப்பு அறிவித்தலுக்கு எதிராக அரங்கேறின.

### தமிழ் மக்களுக்கான செய்தி

ஜனாதிபதியின் வார்த்தையில் கூறுவதானால் வலுவற்ற ஒரு அமைப்பு அது. – காத்திரமானதல்ல. இந்த அமைப்புக்கு எதிராக பொங்கி எழுந்த பேரினவாதம் தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தி ஒன்றே ஒன்றுதான். இந்த நாட்டில் தமிழ் மக்களின் இருப்புக்கே கொள்ளி வைக்க பேரினவாதம் ஆயத்தமாகிறது என்பது தான் அந்தச் செய்தி.

தமிழர் தாயக பூமியை தமது எனச் சொந்தம் கொண்டாடும் பேரினவாதத்தின் சார்பாக கண்டி தலதா மாளிகையில் உண்ணாவிரதம் இருந்த வண. ஓமல்பே சோபித தேரரின் உண்ணாவிரதத்தை ஆதரித்து 4 மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர். அந்த மகஜரில் உள்ளடக்கப்பட்டிருந்த முக்கியமான ஒரு விஷயம் என்னவென்று தெரியுமா?

வவுனியா, திருகோணமலை, கிழக்கு பிரதேசம் உட்பட நாட்டின் சில பகுதிகளில் புத்தர் சிலைகளுக்கு புலிகளால் இடைஞ்சல்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்றும்–

அதைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்–

ஜனாதிபதியிடம் அவர்கள் கேட்டுக் கொண்டதுதான் அது.

இப்படி பொதுக்கட்டமைப்புடன் சேர்ந்து நாட்டின் மூலை முடுக்கெல்லாம் வந்து அமரும் புத்தர் சிலைகள் தாம் அங்கு வந்து இருப்பதற்கு சரித்திரச் சான்றுகள் உண்டு என பேரினவாதிகளின் வாய்களின் ஊடாக கதை அவிழ்த்து விடுகின்றன.

### நாடாளுமன்றத்தில் அமளிதுமளி

திருகோணமலையில் திடீரென எழுந்தருளிய புத்தர் சிலையினால் கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குள்ளேயே பெரிய அமளிதுமளி ஏற்பட்டது. அந்தச் சிலையை அகற்றக்கோரியும் அங்கு குவிக்கப்பட்டுள்ள மேலதிக படையினரை வாபஸ் பெறக் கோரியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற அமர்வின்போது ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

புத்தர் சிலை சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்க்க உரிய வழிமுறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத்தினர் கட்டம் கட்டமாக அங்கிருந்து வெளியேற்றப் படுவர் என்றும் ஜனாதிபதி சார்பில் கூட்டமைப்பினருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியைத் தொடர்ந்து அவர்கள் தமது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.

அன்று சபையில் உரையாற்றிய திருகோணமலை மாவட்ட ஜே.வி.பி உறுப்பினர் ஜயந்த விஜயசேகர தமிழ்தேசியக் கூட்டமைப்பினருக்கு என்ன சொன்னார் தெரியுமா?


"நீங்கள் என்ன சொன்னாலும் எதுவும் நடக்காது. முதலில் புலிகளை அங்கிருந்து வெளியேறச் சொல்லுங்கள்." – இப்படி அவர் உரத்த குரலில் கூறினார்.

அந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச "புலிகள் தமக்கென தனி நிர்வாகம், தனியான கட்டுப்பாட்டுப் பிரதேசம், தனியான நீதித்துறை, விமானப் படை, கடற்படை, பொலிஸ்படை எல்லாவற்றையும் ஏற்படுத்திவிட்டார்கள். இப்போது நாட்டையும் அபகரிக்கப் போகிறார்கள்" – என்று பேசினார்.

### புலிகளின் விமானப்படை

தமிழரின் தாயக பூமியில் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக, புலிகள் ஒருபலமான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பது உண்மை தான். ஆனால் அவர்கள் விமானப்படை ஒன்றை வைத்திருக்கிறார்கள் என்பது வெறும் கதையாக மட்டுமே இதுவரை இருந்து வந்தது. இப்போது விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தமது தளபதிகளின் போக்குவரத்துக்கு அரசு தொடர்ந்தும் ஒழுங்குகளைச் செய்து தரத்தவறினால் புலிகள் அதற்கு தமது விமானப்படையையும் பயன்படுத்துவர் என்ற கருத்துப்படக் கூறி இதுவரை வெறும் கதையாக – வதந்தியாக மட்டும் இருந்த செய்தியை இல்லை இல்லைஅது உண்மை என்று ஏற்றுக்கொண்டுள்ளார்.

இவ்வாரச் செய்திகள்



கொழும்புக்கான நோர்வே தூதுவர் மற்றும் கண்காணிப்பு குழுத் தலைவர் ஆகியோர் கடந்த 8ஆம் திகதி தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் வைத்துச் சந்தித்தனர்.

அந்த சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளருடன் பேசிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார். அத்துடன் எமது போக்குவரத்து வசதிகளை நாமே செய்ய வேண்டிய நிலைக்கு அரசாங்கம் எம்மை தள்ளுமானால் யுத்த நிறுத்தத்தை தக்க வைப்பதற்கான சாதகமான சூழ்நிலையும் அதனால் பாதிக்கப்படும் என்றும் ஆணித்தரமாக அரசுக்கு அறிவித்துள்ளார்.

### புலிகளின் வான் பலம்

அண்மையில் ஜனாதிபதி மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது, இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வந்திருந்த போது எல்லாம் இந்த விஷயம் –அதாவது புலிகளின் வான் பலம் பாரதூரமான ஒரு விஷயமாக அலசப்பட்டு இருக்கிறது. அது மட்டுமன்றி ஏனைய உலக நாடுகளின் கவனத்தையும் இது சம்பந்தமாக ஈர்ப்பதில் எமது வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அதீத அக்கறை காட்டிவருகிறார்.

### நட்வார்சிங்

அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வார்சிங் "இந்தியா பாதுகாப்பு உடன்படிக்கை இறுதிக்கட்டத்தில் இருக்கிறது. தயாரிப்பு வேலைகள் முடிவடைந்ததும் கைச்சாத்திடப்படும்" என்று அறிவித்தார்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ இந்திய வெளியுறவு அமைச்சர் கூறிய கருத்துக்கள் அதிகார பூர்வமானவை அல்ல என்றும் அவர் அவ்வாறு கூறியது இலங்கை அரசை திருப்திப்படுத்தவே என்றும் கூறி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படமாட்டாது என்பதில் தமக்கு முழு நம்பிக்கை உண்டு என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

நட்வார்சிங் இலங்கையில் இருந்தபோது இவ்வாறு தமிழ் மக்களை சீண்டிவிடும் கருத்துக்களை வெளியிட்டது மட்டுமன்றி ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் பத்மநாபா பிரிவுத் தலைவர் சுகுசிறிதரன் ஆகியோரை அழைத்து அவர்களுடன் பேச்சுவார்த்தையும் நடத்தி உள்ளார்.

இந்தியா தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுகின்றதா?

### சந்திரிக்காவின் சந்திப்புகள்

புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான சந்திரிகாவின் சந்திப்புக்கள் சங்கிலித் தொடர்போல் இடம் பெறுகின்றன ஏனென்றால், அவரது தலைமையிலான அரசை இந்த பொதுக்கட்டமைப்பு ஆட்டம் காண வைத்துள்ளது.

### ஜே.வி.பி

அரசின் முக்கிய பங்காளியான ஜே.வி.பி, பொதுக்கட்டமைப்புககான தனது திட்டதை எதிர்வரும் 15ஆம் திகதி நள்ளிரவுக்கு முன் சந்திரிக்கா வாபஸ் வாங்காதுவிடின் அரசில் இருந்து தமது கட்சி வெளியேறும் என்று அறிவித்துள்ளது. அது மட்டும் அன்றி தேசப்பற்றுள்ள சக்திகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில பொதுவான ஒரு அபேட்சகரை நிறுத்துவதற்கான முயற்சியிலும் அது இறங்கி இருககிறது.

### ரணில் ஆதரவு

ஜனாதிபதி சந்திரிகா தமது கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழு என பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்.இது தவிர கடந்த செவ்வாய்க்கிழமை எதிக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது பொதுக்கட்டமைப்பு காரணமாக அரசு கவிழ ஐ.தே.க. இடமளிக்க மாட்டாது என்றும் இதுவிடயத்தில் ஜனாதிபதிக்கு முழு ஆதரவை ஐ.தே.க. வழங்கும் என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

சந்திரிக்கா நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் ஒன்றை நடத்துவது பற்றியும் தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. அவர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்காவை அழைத்து நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துவது உட்பட பல்வேறு விஷயங்கள் பற்றி அவருடன் கலந்து ஆலோசனை நடத்தி இருக்கிறார்.

இவ்வாறு பொதுத் தேர்தலில் கவனம் செலுத்தும் அவர் ஜனாதிபதி தேர்தலையும் மறக்கவில்லை.

"பிரதமர் மகிந்தராஜபக்சவை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்திய அவர், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிப் போகிறீர்கள் என்ற செய்தியையும் அவருக்கு தெரியப்படுத்தி இருக்கிறார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நடந்த கலந்துரையாடலின்போது பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்தின் தீர்மானத்துக்கு விட்டுவிடுங்கள் என்று பிரதமர் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூற அதைக் கேட்டுக் கொண்டு இருந்த ஜனாதிபதி "என்ன! ஜே.வி.பி.யினரைப்போல நீங்களும் பேச ஆரம்பித்துவிட்டீர்களே!" என்று அவரைப் பார்த்து சீறினாராம்.

### ஒப்பந்தம் பிற்போடப்பட்டுள்ளது

இப்படி பொதுக்கட்டமைப்பு படாதபாடு படுகிறது. ஜனாதிபதி சந்திரிக்கா பொதுக் கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தில் கைச்



சாத்திடுவதற்கான நல்ல தேதிகளாக ஜூன் 12 அல்லது 15ஐ சோதிடர்கள் தேர்ந்தெடுத்து கொடுத்துள்ள போதும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது பிற்போடப்பட்டுள்ளது

இப்போது ஜூலை மாதத்திலேயே அது கைச்சாத்தாகும் என்று செய்திகள் கசிந்துள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தையின் போது விரைவில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்றே தெரிவித்துள்ளார். திகதி குறிக்கப்பிடவில்லை. கடைசியாக வெளிவந்த செய்திகளின்படி ஜே.வி.பி. அரசை விட்டு வெளியேறினாலும் 30ஆம் திகதிக்கு முன்னர் புலிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மூர்த்தி

கையெழுத்திடும் திகதி பற்றி அவர் இன்னும் முடிவெடுக்கவில்லை என்பதையே இந்த முரண்பட்ட செய்திகள் வெளிப்படுத்துகின்றன. ஆம், எதிர்ப்பு அலைகள் அவரை ஈடாட வைத்துவிட்டன போலும்.



# அரசியல் வம்பு தும்பு



அம்பி

### அம்மணியின் காட்டம்

அரச தலைமைத்துவத்திலுள்ள அம்மணியாரின் செயற்பாடுகள் அந்தக் கட்சியில் உள்ளவர்கள் சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கின்றனவாம். அதே சமயம் இந்த அதிருப்தியாளர்கள் யார்? இவர்கள் ஜே.வி.பியினருக்கு எப்படியெல்லாம் வக்காலத்து வாங்குகிறார்கள்? என்பது பற்றி எல்லாம் பிரதியமைச்சர்கள் ஜனாதிபதியிடம் விலாவாரியாக விளக்கியுள்ளனராம்.

முன்னரெல்லாம் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயற்பாடுகளில் முன்னணியாக இருந்த அர்ஜுன ரணதுங்க இப்போது ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதும், அதற்காக பிரசாரம் செய்ய முன் வந்திருப்பதும் பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதியின் கை மேலோங்கியிருப்பதனால்தானாம்.

'கட்சிக்குள் இருக்கும் புல்லுருவிகள் யார் என்பது பற்றி அறிந்துள்ளேன். நேரம் வந்ததும் உரிய நடவடிக்கை எடுப்பேன்'' என்று கூறி வருகிறாராம் ஜனாதிபதி.

### முறைப்பாடு

ஊடகத்துறை அமைச்சுப் பதவியை மங்கள ராஜினாமாச் செய்தது ஜனாதிபதிக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லையாம். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முழுமையான ஆதரவுப் பிரசாரத்தை அரச ஊடகங்கள் முன்னெடுக்க வேண்டுமென்று ஜனாதிபதி பணிப்புரை ஒன்றை விடுத்த நேரத்தில்தான் மங்களவின் இந்த ராஜினாமா இடம்பெற்றது. இதனால்தான் அம்மையார் கடும் ஆத்திரத்தில் உள்ளாராம்.

அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அமைப்பாளர்களுடனான சந்திப்பின்போது மங்களவின் இந்த செயற்பாடு குறித்து அம்மையார் கடும் அதிருப்தியைத் தெருவித்தாராம். ஜேவி.பியினர் விடும் கயிற்றை மங்கள விழுங்கிக்கொண்டிருக்கிறார் என்று ஆத்திரமாகக் கூறினாராம் அம்மையார்.

அரச ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜே.வி.பியினருக்கு தேசிய தொலைக்காட்சியில் வழங்கும் முன்னுரிமைக்கெதிராக அம்மையார் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென இந்தச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டதாம்.

### அவசரப்பட்டோம்

அரசிலிருந்து விலகுவது தொடர்பில் ஜே.வி.பி முன்வைத்த காலக்கெடு அந்தக் கட்சியில் இருக்கும் தேசியப் பட்டியல் மற்றும் கீழ் மட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கின்றதாம்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சர்ச்சைகள் இருந்தால் கட்சி உயர்மட்டம் அதைப் பேசித் தீர்த்திருக்கலாம். அதை விடுத்து உடனடியாகக் காலக்கெடு விதித்து செயற்படுவதானது கூட்டுப்பொறுப்புகளை மீறும் செயல் என்று அந்த உறுப்பினர்கள் தமக்கு நெருக்கமானவர்களிடம் புலம்பித் திரிகின்றனராம்.

எப்படியும் அடுத்த பொதுத் தேர்தலில் ஜே.வி.பி தனித்துப்போட்டியிட்டால் குறைந்த எண்ணிக்கையானோரே சபைக்குச் செல்வர். தேசியப்பட்டியலில் வெட்டு விழும். தேர்தலில் நிற்பதற்கு நிதி வளம் எங்கே? இப்படியான பிரச்சினைகளால்தான் அந்த உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளார்களாம்.

### இராஜதந்திரம்

ஜனாதிபதிக்கு அடுத்தபடியான நிலையில் இருப்பவர் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ராஜதந்திரமாகத்தான் செயற்படுகிறாராம். ஒருபுறம் இதனைச் செய்தாக வேண்டுமென்பதுபோல் கூறிவிட்டு மறுபுறம் அது சம்பந்தமான எதிர்ப்புக்களைக் கொண்டுள்ளவர்களுடம் இரகசியமாகக் கை குலுக்கிக் கொள்கிறாராம்.

தேசப்பற்றுள்ள இயக்கத்துடம் அவர் கொண்டுள்ள தொடர்பு அந்நியோன்யமானது. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதி தொடர்ந்தும் தனது தீர்மானத்தைக் கைவிடாவிட்டால் பிரதமர் தனித்து செயற்பட முன்வர வேண்டுமென்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட பல சக்திகள் கோரியிருக்கின்றனவாம்.

ஆனால் இப்போது தன்னை சிங்கள பௌத்தனாக, அடிப்படைவாதியாக பிரகடனப்படுத்திக்கொண்டால் அது தனது ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்குமென்று ஜனாதிபதிக்கு அடுத்த படியில் உள்ளவர் கூறுகின்றாராம். சிறுபான்மையினர் குறித்துச் சிந்திப்பது அரசியல் நலன்களுக்காகத்தான்.

### புதிய பிரச்சினை

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதியைச் சந்தித்தபோது பொதுக்கட்டமைப்புக் குறித்தே விலாவாரியாகப் பேசப்பட்டதாம். யார் எதிர்த்தாலும் இதனைச் செய்யப்போவதாக ஜனாதிபதி கூறியபோது அவரின் துணிச்சலை நட்வர்சிங் பாராட்டினாராம்.

இலங்கையில் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கு இந்தியா முழு ஆதரவைத் தருமென்றும், அதேசமயம் இது விடயத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டுமென்றும் சிங் இங்கு வலியுறுத்திக் கூறினாராம்.

பொதுக்கட்டமைப்பில் முக்கிய பங்கொன்று, வடக்கிலிருந்து தெரிவாகி, தற்போது அமைச்சராக செயற்படுபவருக்கு வழங்கப்படுமென்று ஜனாதிபதி இங்கு உறுதியளித்தாராம்.ஜனாதிபதியின் இந்த யோசனையை புலிகள் ஏற்றுக் கொள்வார்களா?அதுதான் புதிய பிரச்சினை.

## வவுனியாவில் வெடித்த.....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத பொலிஸார் நீதிமன்றத்தில் மேற்படி விடயத்தை பாரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஈ.பி.டி.பிக்கு ஆள் பற்றாக்குறை

சில காலத்துக்கு முன்பு மட்டக்களப்பிலும் ஈ.பி.டி.பியினர் வரதர் அணியின் முகாமையும் சில உறுப்பினர்களையும் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். இதனையடுத்து மட்டக்களப்பு பொறுப்பாளர் துரைரத்தினம் சிறிது காலம் தமிழ் நாட்டில் சென்று தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி சமீப காலமாக தமது உறுப்பினர்களை இழந்து வருவதுடன் பல முக்கியஸ்தர்களும் முரண்பட்டு வெளிநாடுகளுக்கு தப்பி ஓடுகின்றனர். இதனால் ஈ.பி.டி.பி பெரும் ஆட் பற்றாக்குறையால் திணறுகிறது. அண்மைய காலங்களில் ஈ.பி.டி.பியின் யாழ்.அமைப்பாளர் ஜெகன், அம்பாறை அமைப்பாளர் சங்கர் உட்பட பலர் வெளிநாடுகளுக்குப் பணத்தையும் சுருட்டிக்கொண்டு தப்பி ஓடியுள்ளனர்.

இவற்றால் தமது கட்சியின் ஆட்பலத்தை அதிகரிக்க ஏனைய கட்சி உறுப்பினர்களை வலைவீசி வருகிறது ஈபிடிபி.

வவுனியாவில் இடம்பெற்ற மேற்படி நடவடிக்கையை அடுத்து வரதர் அணியின் விசுவாசிகள் சிலரும் ஈ.பி.டி.பியில் நுழைந்துள்ளனர். மேற்படி குருமண்காடு முகாமுக்கு தினமும் இராணுவப்புலனாய்வுப்பிரிவினர் வந்து புலிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி வருவதுடன் அந்த முகாமில் கரப்பந்தாட்டம் விளையாடுவதும் வழமையாகும். மேற்படி தாக்குதல் தினத்தன்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கிளைமோர் குண்டு ஒன்றை அந்த முகாமுக்கு கொண்டு வந்து அதை உபயோகித்து புலிகள் மீது தாக்குதல் நடத்துவது எப்படி என முகாமின் வேப்ப மர நிழலில் இருந்து விளக்கி விட்டு கதைத்துக்கொண்டிருந்தனர். இதையடுத்து மேற்படி கிளைமோர் குண்டை வரதரணி விசுவாசி ஒருவர் ஈ.பி.டி.பி உறுப்பினர்களை குறிவைத்து திடீரென வெடிக்க வைத்தார் எனச் சொல்லப்படுகிறது.

இதை அடுத்தே அத் தாக்குதலில் ஈ.பி.டி.பி உறுப்பினரும், இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த எட்வேட் என்பவரும்(எட்டு வருடங்களுக்கு மேலாக வவுனியா இராணுவ புலனாய்வுத் துறையில் கடமையாற்றி வருகிறார்) மேலும் 6 பேரும் காயமடைந்துள்ளனர். அதில் ஒரு வாரத்துக்கு முதல் ஈ.பி.டி.பியில் இணைந்த முகுந்தன் என்பவரும் அடக்கம்.

### டக்ளஸின் விஜயம்

இச்சம்பவத்தையடுத்து டக்ளஸ் தேவானந்தா அங்கு திடீரென விஜயம் மேற்கொண்டு முகாமை பார்வையிட்டு இரு கட்சி முரண்பாடுகள் பற்றிப்பேசியுள்ளார்.

கிழக்கிலும், யாழ்ப்பாணத்திலும் தமது முக்கிய சகாக்கள் கொல்லப்பட்டபோது கூட அங்கு செல்லாத தேவானந்தா வவுனியா சென்றது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

வரதரணியுடனான முரண்பாடு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதே இதற்குக் காரணம் எனவும் சொல்லப்படுகிறது. இதற்கு எல்லாம் சிகரம் வைத்தால் போல் டக்ளஸ் வந்து சென்ற மறுநாள் குருமண்காடு முகாமில் வரதர் அணி உறுப்பினர் ஒருவரை ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஜனநாயகத்துக்காகப் பாடுபடுவதாகப் பீற்றிக்கொள்ளும் இக் கட்சிகளின் மோதல் கிளைமோர் குண்டாக வெடித்துள்ளது. வவுனியாவில் புளொட் -- டெலோ மோதல், ஈ.பி.ஆர்.எல்.எவ்.பின் வரதர் அணி – சுரேஷ் அணி மோதல் ஆகியன பிரசித்தமானவை. இந்நிலையில் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி– ஈ.பி.டி.பி மோதல் மேலும் பல வன்முறைகளுக்கு வழி வகுக்கக்கூடும் என வவுனியா மக்கள் அஞ்சுகின்றனர்.

-கலன்-

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | மேஸ்க் கார்டுன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | உங்கள் சாய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டொப் 10 மூவீஸ் |
| 11.00 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | இப்படிக்கு நீங்கள் | இயக்குனர் பார்வை |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | மங்கையர் தெரிவு | மங்கை | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | றிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (ரொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி–மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | நகைச் சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சீன்ஸ் | நினைவுகள் | ருத்ர வீணை | சுப்பர் சீன்ஸ் |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இளந்தளிர் | சுயம் நிகழ்ச்சி | அறிவு | மின்னல் |
| 6.30 | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் திமி தக்க தா | 6.55 முதன்மைச் செய்திகள் மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | நாடும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | எஸ்.எம்.எஸ் ஷோ | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ராஜ ராஜேஸ்வரி | இளைய கானம் |

# தர்சினியின் பரதநாட்டிய அரங்கேற்றம்



செல்வி.தர்சினி அருளானந்தத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் நடைபெற உள்ளது.

இந்த அரங்கேற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பிரதம நீதியரசர் எச்.சரத் என் சில்வா, சட்டமா அதிபர் கமலசபேசன், கலைமன்ற அதிபர் திருமதி திரிபுரசுந்தரி யோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

தர்சினி அருளானந்தம், திருமதி. ஜெயசித்ரா சிவமயூரனின் மாணவியாவார். இவர் தனது ஆரம்பக்கல்வியை பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கற்றார். உயர்கல்வியை பொரளை தேவ பாலிகா வித்தியாலயத்தில் கற்று வருகிறார்.

தர்சினி, உதவி சொலிசிட்டர் ஜெனரல் எல்.கே.எம்.அருளானந்தம், பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி றோகினி அருளானந்தம் ஆகியோரின் புதல்வியாவார்.



# வாசுகி ஜெகதீஸ்வரனின் 75 ஆவது அரங்கேற்றம்

செல்வி புத்துலா பாராமியின் பரத நாட்டிய அரங்கேற்றம் இம் மாதம் 9ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அரங்கேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் சிறப்பு அதிதிகளாக சபாநாயகர் லொக்கு பண்டார, மேல் மாகாண ஆளுனர் அலவி மௌலானா, நாட்டியத்தாரகையும், நடிகையுமான சுகன்யா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

புத்துலா பாரமியின் அரங்கேற்றத்துக்கென பிரத்தியேகமாக இந்தியாவிலிருந்து சுகன்யா வருகை வந்திருந்தார்.

புத்துலா பாரமியின் அரங்கேற்றமானது அவரது குரு வாசுகி ஜெகதீஸ்வரனின் 75 ஆவது அரங்கேற்ற நிகழ்வு ஆகும். அதனையொட்டி வாசுகி ஜெகதீஸ்வரனின் சிரேஷ்ட மாணவ/மாணவிகள் வழங்கிய குரு வந்தன நிகழ்வு முதலில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து புத்துவா பாரமியின் அரங்கேற்ற நிகழ்வு ஆரம்பமாகியது.

அரங்கேற்ற நிகழ்வின் முதல் நிகழ்ச்சியாக அரங்க பூசை இடம்பெற்றது. அரங்க பூசையை மகேஸ்வர குருக்கள் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து புத்துலா பாரமியின் சகோதரி வந்தோரை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். கம்பீர நாட்டை இராகத்தில்அமைந்த. புஷ்பாஞ்சலியுடன் நாட்டிய நிகழ்வு ஆரம்பித்ததைத்தொடர்ந்து ஸ்லோகம், நாட்டை இராகத்தில் அமைந்த அலாரிப்பு இடம்பெற்றது.

அலாரிப்பை அடுத்து கனக மல்லிகை இராகத்தில் அமைந்த ஜதீஸ்வரம் நடைபெற்றது. இந்த ஜதீஸ்வரத்தை திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் தாயார் விஜயலக்சுமி சண்முகப் பிள்ளை உருவாக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜதீஸ்வரத்தை தொடர்ந்து கல்யாணி இராகத்தில் அமைந்த 'என்நெஞ்சில்' என்ற விஸ்ணு துதி இடம் பெற்றது. விஷ்ணு துதியை அடுத்து, நாட்டிய அரங்கேற்றத்



துக்கு இசை வழங்கிய செல்வன் அகிலனின் இசை விருந்தும் நடைபெற்றது.

இசை விருந்தை அடுத்து, நாட்டை குறிஞ்சி இராகத்தில் அமைந்த 'சுவாமி நான் உந்தன் அடிமை' என்ற வர்ணம் இடம்பெற்றது. வர்ணத்தின் முடிவில் கௌரவ சபாநாயகர் லொக்கு பண்டார உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து சிங்கள மொழியிலான பாடல்களுக்கு புத்துலாபார்மி நடனம் ஆடினார். 'வீனா' என்ற சரத்நந்தசிறி பாடிய பாடலுக்கு புத்துலாபாரமி நடனம் ஆடினார். அதனைத் தொடர்ந்து மோகன் ராஜ் இசை அமைத்து விசாரத நந்தா மாலினி பாடிய 'கோவிந்துனி' என்ற பாடலுக்கு புத்துலாபாரமி ஆடிய நடனம் பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்தது. பின்னர் 'பிலு' இராகத்தில் விசாரத எட்வேட் ஜெயக்கொடி பாடிய பாடலுக்கு புத்துலா பாரமி சிறப்பாக ஆடினார்.

அதனைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்துவந்து அரங்கேற்ற நிகழ்வில் பிரத்தியேகமாக கலந்து கொண்ட நடிகையும், நாட்டியத் தாரகையுமான சுகன்யா உரையாற்றினார். அவர் தனது உரையில் ''ஒரு குடும்பத்தில் ஒரு . குழந்தையை வளர்ப்பதற்கே எவ்வளவு சிரமப் படுகிறோம்! ஆனால் இவ்வளவு அழகாக 75 பிள்ளைகளுக்கு அரங்கேற்றம் கண்ட வாசுகி ஜெகதீஸ்வரனை பாராட்டுகின்றேன். குருவந்தனம் ஒரு சிறந்த நிகழ்வு. இசையமைப்பு, சிங்களப் பாடல்கள், சிங்கள பாடல்களுக்கான இசை, ஆரம்பத்திலிருந்து நடைபெற்ற ஒழுங்கு யாவும் சிறப்பானவை'' என்று கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், ''கலைக்கு மொழி வித்தியாசம் இல்லை. அரங்க அமைப்பு நன்றாகவும், வித்தியாசமான முறையிலும் அமைந்திருக்கிறது. தொழில்நுட்ப உதவியுடன் நடன அமைப்புகளுடன் சம்பந்தப்பட்ட தில்லை, சிதம்பரம் போன்ற இடங்களை பொருத்தமான வேளைகளில் திரையில் பிரதிபலித்தமை மனதிற்கு நிறைவை அளித்தது'' என்றார்.

அவரின் உரையை அடுத்து திருமதி சுமதி பாலா சுகன்யாவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெற்றது.

பாடல்:- ஸ்ரீ.எஸ்.அகிலன்.

மிருதங்கம்:- ஸ்ரீ.வி.ஜம்புநாதன்.

வயலின்:- ஸ்ரீ.எஸ்.திவாகரன்.

புல்லாங்குழல்:- ஸ்ரீ.குமார லியனகே.

தாளதரங்கம்:- ஸ்ரீ.ரட்ணம் ரட்ணதுரை.

சிங்கள பாடல்களுக்கு இசை வழங்கிய கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

தொடர்ந்து நிகழ்வில் கதன குதூகல இராகத்தில் அமைந்த தில்லானாவும் தொடர்ந்து மங்களத்துடன் பரதநாட்டிய நிகழ்வும் இனிதே நிறைவுபெற்றன.

செல்வி புத்துலா பாரமி பரத நாட்டியத்தில் மட்டும் அல்லாது கண்டிய நடனம், கிழைத்தேய இசை போன்றவற்றுடன், விளையாட்டில் 'வோர்டர் போலோ' வீராங்கனையாகவும் திகழ்கிறார். கொழும்பு புனித பிரிஜெட் கல்லூரியில் வர்த்தக பிரிவில் கல்வி கற்கும் இவர் பாடசாலை மாணவித் தலைவியாவார்.

மும்மொழிகளிலும் அரங்கேற்ற நிகழ்வை அறிவித்த ஸ்ரீ.விஸ்வநாதன், ஸ்ரீமதி. பஸ்தியாம் பிள்ளை, ஸ்ரீமதி.இந்துனில் திஸாநாயக்க மற்றும் வித்தியாசமான அரங்க அமைப்பை அமைந்த நீல் ரஞ்சன், 75ஆவது அரங்கேற்றம் அமைந்த வாசுகிஜெகதீஸ்வரன், அரங்கேற்றம் கண்ட புத்துலா பாரமி ஆகியோருக்கு பாராட்டுக்கள். இனிய மாலைப்பொழுதில் சிறந்த அரங்கேற்ற நிகழ்வை பார்வையிட்ட மகிழ்ச்சி.

நிமல்ஷி







நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அண்மையில் நடைபெற்ற திருநெறிய தெய்வீக ஞானசம்பந்தர் விழாவில் யாழ்.நாச்சிமார் கோயிலடி சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் குழுவினர் 'திருமுறை தந்த பெருமகனார்' என்னும் பொருளில் வில்லுப்பாட்டு நிகழ்த்தும்போது எடுக்கப்பட்ட படம்.

# கம்பியூட்டர் கஷ்டங்கள்



முன்பெல்லாம் வீடுகளில் ரேடியோ இருந்தது. பிறகு ரேடியோவின் இடத்தை டிவி அடைந்தது. இப்போது ஏறக்குறைய எல்லோரது வீட்டிலும் கம்பியூட்டர் நுழைந்து கொண்டிருக்கிறது. கம்பியூட்டரைப் பற்றிப் படிப்பவர்கள் மேலதிகமாகத் தெரிந்து கொள்ள, வீட்டிலுள்ள பெரியவர்கள் பல விஷயங்களை டைப் செய்ய, இன்டர்நெட் பார்க்க, குழந்தைகள் விளையாட என்று பல்வேறு காரணங்களுக்காக ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கம்பியூட்டரை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கம்பியூட்டர் என்பது மரியாதைக்குரிய பொருள் மட்டுமல்ல, அத்தியாவசியமான பொருளும்கூட. ஆனால் இது வந்த பிறகு நமக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி நமக்கு இன்னும் விழிப்புணர்வு வரவில்லை. காரணம் கம்பியூட்டரால் நம்முடைய உடலில் பலவிதமான பிரச்சினைகள் ஏற்படலாம் என்று நாம் நினைக்க ஆரம்பிக்கவில்லை.

வெளிநாடுகளில் கம்பியூட்டரால் என்னென்ன பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதைத் தெளிவாகக் கண்டுபிடித்து, அதற்கேற்ப மருத்துவ சிகிச்சைகளையும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். கம்பியூட்டரால் உடலுக்கு ஏதாவது பாதிப்பு வந்தால் உடனே டாக்டர்களை அணுகுவது அங்கே வழக்கமான விஷயமாக இருக்கிறது. தனிப்பட்ட மனிதர்களை மட்டும் நான் சொல்லவில்லை.

கம்பெனிகளில்கூட அதுமாதிரியான சூழ்நிலை இன்னும் வரவில்லை என்பதே உண்மை.

கம்பியூட்டர் துறையில் வேலை பார்ப்பவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தது எட்டு மணிநேரமாவது உழைக்கவேண்டிய கட்டாயம். இப்படித் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் பணிபுரிய வேண்டியதால் பல விதமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு அறுவை சிகிச்சைகளோ, மாத்திரைகளை விழுங்குவதோ அல்ல. சின்னச் சின்னதாக சில உடற்பயிற்சிகள், நம்முடைய உடலை ரிலாக்ஸ் ஆக்கிக் கொள்ளும் சில டெக்னிக்குகள், உட்கார்ந்திருக்கும் முறைகள்



இவற்றைத் தெரிந்து வைத்திருந்தாலே போதும், எளிதாக துன்பத்திலிருந்து எளிதாகத் தப்பித்து வந்துவிடலாம்.

முதலில், உங்களுக்கு முன் இருக்கும் கம்பியூட்டர் திரை, உங்கள் கண் பார்வையிலிருந்து இரண்டு அங்குலம் தாழ்வாக இருக்க வேண்டும். உங்கள் கண் பார்வையிலிருந்து கம்பியூட்டர் திரை உயரமாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் உங்கள் தலையைத் தூக்கித்தான் பார்க்க வேண்டும். அது உங்கள் கழுத்துக்கு அநாவசியமான வலியைக் கொடுக்கும். எனவே அந்த விஷயத்தில் அவதானமாக இருங்கள்.

**எப்படி இதைச் சரி செய்வது?**

உங்கள் மேசையின் உயரத்தைக் குறைத்துக் கொள்ளலாம் அல்லது நீங்கள் உட்கார்ந்திருக்கும் கதிரையின் உயரத்தை அதிகரிக்கலாம். கம்பியூட்டர் முன்பு உட்காரும் போது உருளும் கதிரையைப் பயன்படுத்தினால் நல்லது. உருளும் கதிரை மூலம் எளிதாக ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு நகர முடியும் என்பதோடு உயரத்தையும் அதிகப்படுத்தவோ, குறைக்கவோ முடியும். இந்த உயரத்தைச் சரிசெய்கிற விஷயத்தை நம்மில் பலரும் தெரிந்து கொள்வதே இல்லை. கம்பியூட்டர் பற்றி படித்தவர்கள் அனைவரும் இந்த உயரம் சரிசெய்கிற விஷயத்தை அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

கம்பியூட்டர் முன்பு உட்காரும்போது, கதிரையில் சாய்ந்து உட்கார வேண்டும். கதிரையில் சாயாமல் நேராக உட்காருவதோ, கூன் போட்டு உட்காருவதோ கூடாது. கம்பியூட்டரில் உட்கார்ந்து டைப்செய்யும் போது, கைகள் இரண்டும் கதிரையின் கைப்பிடியின் மீது வசதியாக இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும். சில இடங்களில் கைப்பிடி மிகவும் கீழே இருக்கிறது. அல்லது மிகவும் மேலே இருக்கிறது. இதனால் நமக்குத் தீமையே. இதைவிட, கைப்பிடி இல்லாமலிருப்பது நல்லது.

கம்பியூட்டரோடு பொருத்தப்பட்டிருக்கும் மௌஸ் பெரும்பாலும் அதற்குப் பக்கத்திலேயே இருக்கவேண்டுமே ஒழிய, டேபிளுக்கு மேலே தனியாக இருக்கக்கூடாது. மௌஸ் பக்கத்தில் இருந்தால்தான் அதை எளிதாக எட்டிப் பிடித்துப் பயன்படுத்த முடியும். மிக தூரத்தில் இருந்தால் கஷ்டப்பட்டு கையை நீட்டி மௌஸைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். அதனால் கைகளுக்கும், தோளுக்கும் பாதிப்புத்தான்.

இதேபோல கம்பியூட்டர் டைப் செய்ய உதவும் விசைப்பலகையும் மேல்பாகம் சற்று உயரமாகவும் கீழ்ப்பாகம் சற்று இறக்கமாகவும் இருப்பதைவிட, கீழ்ப்பாகம் சற்று உயரமாகவும் மேல்பாகம் சற்று இறக்கமாகவும் இருந்தால் நல்லது.

கம்பியூட்டரைத் தொடர்ந்து பார்ப்பதனால் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும். மிக அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், ஒரு நல்ல கண் மருத்துவரை அணுகுவதுதான் சரியான விஷயம். ஆனால், கம்பியூட்டரால் கண்களுக்குப் பிரச்சினைகள் வராமல் தடுக்க சில பயிற்சிகளை மேற்கொள்ளலாம். உதாரணமாக இருபது நிமிடங்களுக்கு கம்பியூட்டர் திரையையே நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தால் ஒரு பத்து வினாடிக்கு திரையிலிருந்து பார்வையை விலக்கி வேறு பக்கத்தில் உள்ள பொருளைப் பார்க்கலாம்.

ஏன் இப்படிச் செய்கிறோம் தெரியுமா?

"சாதாரணமாக, நாம் ஒரு பொருளைப் பார்க்கிறபோதே, புத்தகம் படிக்கிறபோதோ கண்களை மூடிமூடித்திறக்கிறோம். கண்களுக்குத் தேவையான குளிர்ச்சியும், எண்ணெய்ப்பசையும் கண் சிமிட்டலால் கிடைக்கின்றன. ஆனால், கம்பியூட்டர் திரைகளை நாம் பார்த்துக் கொண்டே இருக்கும் பட்சத்தில் இந்தக் கண்சிமிட்டல் நடப்பதில்லை. இதனால் கண் பாதிப்படைகிறது. இதைப் போக்கத்தான் வேறு ஒரு திசையில் பத்து வினாடிகள் பார்க்க வேண்டும் என்று சொல்கிறேன்.

தொடர்ந்து ஐந்து நிமிஷம் நீங்கள் கம்பியூட்டரில் பணிபுரிந்தால், ஒரு பத்து நிமிஷத்துக்கு வேறு ஒரு வேலையைச் செய்யலாம். உதாரணமாக, பைல்களைக் கொஞ்சம் அடுக்கி வைக்கலாம் அல்லது போன் பேசலாம். இலேசாக ஒரு நடைபோட்டுவிட்டு வரலாம்.

இது மாதிரியான சின்னச் சின்ன விஷயங்களை கவனித்தாலே போதும், கம்பியூட்டரால் எந்தக் கஷ்டத்தையும் வராமல் பார்த்துக் கொள்ளலாம்'' என்கிறார் பிரபல இந்திய டாக்டர் மது.




# கம்ப்யூட்டர் யுகம்

கம்ப்யூட்டர் யுகம் எப்போது ஆரம்பமானது? 1647 இல் ப்ளெய்ஸ் பாஸ்கல் என்ற பிரஞ்சுக்காரர் உலகின் முதல் கல்குலேட்டரைச் செய்து அறிமுகப் படுத்திய போது தான் கம்ப்யூட்டர் யுகம் தொடங்கியது. 1944இல் ஹோவாட் ஜக்கன் என்பவர் தான் முதல் கம்ப்யூட்டரை தயாரித்தார். அதன் நீளம் 51 அடி. உயரம் 8 அடி.

கம்ப்யூட்டரின் முதல் பாவனை காலகட்டம் 1942இல் இருந்து 1959 வரை என்று சொல்லலாம். இந்தக் காலத்தில் கம்ப்யூட்டர்களை இயக்குவதற்கு வால்வுகளை உபயோகித்தார்கள். இந்தப் படிமுறை வளர்ச்சியின் இரண்டாவது காலகட்டம் 1959 இல் இருந்து 1965 வரை என்று வரையறுக்கப் பட்டுள்ளது. இந்தக் காலத்தில் தயாரிக்கப்பட்ட கம்ப்யூட்டர்களுக்கு ட்ரான்சிஸ்டர்களைப் பயன்படுத்தினார்கள். மூன்றாவது பிரிவு 1965 – 1970 வரையான காலப்பகுதியில் அடங்கும். இக்காலப் பகுதியில் ட்ரான்சிஸ்டர்களை விடச்சிறிய இன்ரகிரேட்டட் சேகியுட் இணைப்புகளைப் பயன்படுத்தினார்கள். இவற்றை ஐசி என்று அழைப்பர். இந்த ஐசி இணைப்புக்கள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான ட்ரான்சிஸ்டர்களை நுட்பமாக இணைத்தார்கள். நான்காவது காலப்பிரிவு 1970 இல் தொடங்கியது. இன்று கம்ப்யூட்டர் துறையில் பிரமிக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

1944 இல் ஒரு அறையை நிரப்பிய 18 ஆயிரம் வால்வு கொண்ட கம்ப்யூட்டரை இன்று ஒரு சிறிய பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு போக முடியும்.



கம்ப்யூட்டரின் விலையும் சடசட என்று சரிந்துவிட்டது. அதன் சக்தியோ பன்மடங்கு அதிகரித்துக் கொண்டு போகிறது. இந்த தலைமுறையின் அபார முன்னேற்றத்தை கம்ப்யூட்டர் மூலம் எப்படி சமாளிப்பது என்று கம்ப்யூட்டர் தயாரிப்பாளர்களே திணறிக்கொண்டு இருக்கிறார்கள்.

1957இல் அதிக அளவில் சந்தைக்கு வந்த பின் அமெரிக்காவில் கோடிக்கணக்கான கம்ப்யூட்டர்கள் விற்பனையாகிவிட்டன. புதிய புதிய துறைகளுக்கு கம்ப்யூட்டர் கலை தெரிந்தவர்கள் ஏராளமானவர்கள் தேவைப் படுகிறார்கள்.

இன்று கம்ப்யூட்டர்களை குறைந்த விலையில் வாங்கமுடியும். இப்போது கம்ப்யூட்டர்கள் செய்யாத வேலைகளே இல்லை. விஞ்ஞானத்தில், விளையாட்டில், ஆராய்ச்சியில், கல்வியில், தொழில் துறையில் என்று எங்கும் எதிலும் கம்ப்யூட்டர்தான். கம்ப்யூட்டர் பொருத்தும் நிறுவனங்கள் பல இலங்கையிலும் இருக்கின்றன. இப்போது சின்னக் கிராமங்களில் கூட கம்ப்யூட்டர்கள் நுழையத் தொடங்கிவிட்டன.

இங்கே ஒரு கேள்வி. மனித மூளையைவிட கம்ப்யூட்டரின் சக்தி அதிகமானதா? இந்தக் கேள்விக்கான பதில் என்ன என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?

கம்ப்யூட்டர்களை விட மனித மூளை மிகவும் சிக்கலானது. எங்களது தலைகளுக்குள் அது பிடித்திருக்கும் இடத்தைவிட எவ்வளவோ நுட்பமானது. மூளையின் நிறை மூன்று இறாத்தல் என்று விஞ்ஞானம் சொல்கிறது. ஆனால், அதன் உள்ளே கோடிக் கணக்கில் செய்திகளை தாங்கிச் செல்லும் நியூட்ரோன்கள் இருகின்றன. இப்படி படு சுறுசுறுப்பாக இருக்கும் நமது மூளையின் மர்மத்தை இன்றைய விஞ்ஞானிகள் இன்னும் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை.

# உலகின் உயரிய சாதனைகள் ஏப்ரல் மாதத்தில்

உலகின் உன்னதமான சரித்திரப் படைப்புக்கள் ஏப்ரல் மாதத்தில் தான் அரங்கேறி இருக்கின்றன. இயற்கைக்கு சவால்விட்டு உலகை முன்நோக்கி இழுத்துச் செல்வதற்காக பரீட்சார்த்தமாக செய்து பார்க்கப் பட்டபோது வெற்றி கண்டவை இந்த சாதனைகள். அவற்றை தொகுத்து கீழே தருகிறோம். படித்துப்பாருங்கள்.

(1)1960 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி கால நிலை அவதானிப்புக்காக முதன் முதல் செய்மதி ஒன்று விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. ரிரோஸ் – 1 (TIROS - 1) என்று அதற்கு பெயரிடப்பட்டு இருந்தது.

(2) ஒரு வருடத்தின் பின்னர் – 12 ஏப்ரல் 1961 இல் செய்மதி மூலம் பூமியைச் சுற்றி வருவதற்கு ரஷ்ய நாட்டைச் சேர்ந்த யூரி ககாரின் அனுப்பப்பட்டார். செய்மதி ஒன்றை இயக்கி பூமியை வலம்வந்த முதலாவது மனிதன் இவர்தான்.

ஏப்ரல் மாதத்தில் அரங்கேறி வெற்றிபெற்ற ஏனைய உலக சாதனைகள் இதோ.



07 ஏப்ரல் 1795 – மெட்ரிக் முறை பிரான்சில் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. இந்தியக் கணித மேதைகள் தான் இந்த முறைகளை முதலில் கண்டு பிடித்தனர்.

29 ஏப்ரல் 1851 – மின்சார ரயில், பிரயாணிகளுடன் ஓடவிடப் பட்டது.

30 ஏப்ரல் 1897 – இலக்ட்ரோன்ஸ் பற்றிய முதலாவது அறிவிப்பு.

16 ஏப்ரல் 1912 – ஹரியட் குவிம்பி என்ற பெண் விமானி ஆங்கிலக் கால்வாயை விமானத்தில் கடந்தார்.

28 ஏப்ரல் 1914 – எயர்கண்டிசன் பொருத்தப்பட்ட விமானம் பறக்கவிடப்பட்டது.




18 ஏப்ரல் 1950 – அத்தலாந்திக் சமுத்திரத்தை ஜெட் விமானத்தில் கடந்து பிரயாணிகள் பயணம்.

10 ஏப்ரல் 1955 – போலியோ தடுப்பு ஊசி பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது.

04 ஏப்ரல் 1969 – செயற்கை இருதயம் மனித உடலில் பொருத்தப்பட்டது.

11 ஏப்ரல் 1969 – ஒருவரது கண் இன்னொருவருக்கு பொருத்தப்பட்டது.




# துவிச்சக்கர வண்டி

சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது மனிதன் இரு வழிகளில் தனது பயணங்களை மேற்கொண்ட கதைகளை நாம் படிக்கலாம் அவை.


1. கால்நடை

2. மிருகங்களின் முதுகில் ஏறி இருந்து பயணம் செய்வது.



கற்பனையில் வரையப்பட்ட துவிச்சக்கரவண்டி

அவனது பயணங்களை இலகுவாக்குவதற்கு மனித மூளை துவிச்சக்கர வண்டியைக் கண்டு பிடித்தது. முதன்முதலில் துவிச்சக்கர வண்டியை அறிமுகம் செய்த



முதலில் தயாரிக்கப்பட்ட துவிச்சக்கர வண்டி

வரது பெயரைப் பற்றியோ அல்லது அது பாவனைக்கு வந்த திகதி பற்றியோ சரியான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாது இருக்கின்றது. இவை சம்பந்தமாக பல குழப்பங்கள் நிலவுகின்றன. எனினும் துவிச்சக்கர வண்டி பற்றிய நம்பகமான சில தகவல்கள் இதோ.

1490 ஆம் ஆண்டு லியனாடோ டாவின்ஸி என்பவர்தான் முதன் முதல் துவிச்சக்கர வண்டிய ஒன்றை தனது கற்பனையில் வடிவமைத்து படமாக வரைந்தவர். இந்தக் கற்பனை வடிவமைப்பு உருப்பெறவில்லை.




1790 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சிவ்ரக் என்பவர் இரண்டு சக்கரங்கள் கொண்ட ஓடும் இயந்திரம் ஒன்றைத் தயாரித்தார். ஆசனத்தில் இருந்து கொண்டு ஒருவர் நிலத்தில் தனது கால்களை உதைக்க அதனால் உண்டாகும் விசையின் மூலம் அதை ஓட்ட வேண்டி இருந்தது.

இதில் இருந்து படிப்படியான மாற்றங்களுடன் அபிவிருத்தி செய்யப்பட்டதுதான் இப்போது பாவனையில் உள்ள துவிச்சக்கர வண்டி.

# குளோனிங் ( ஒரே மரபணு உள்ள ஒற்றுமை உருவம்)

குளோனிங் என்பது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உருவங்களை ஒரே மாதிரியாக அச்செடுப்பது போல் உருவாக்குவதுதான். குளோனிங்கில் NUCLEUS TRANSFER TECHNOLOGY எனப்படும் கருமாற்றும் தொழில் நுட்பம் கடைப்பிடிக்கப் படுகிறது.

ஒரு விலங்கில் உள்ள உடல் மரபணு எடுக்கப்பட்டு இன்னொரு விலங்கின் மரபணுவுடன் கலக்கப்படுகிறது.



இதனால் உருவாகும் கரு இன்னொரு அதாவது மூன்றாவது விலங்கின் சினைப்பையில் செலுத்தப்பட்டு வளர்க்கப்படுகிறது. எதிலிருந்து மரபணு எடுக்கப்பட்டதோ அதே போன்ற உருவம் அப்படியே உருவாகின்றது. இதையே ஒரே மரபணு உள்ள ஒற்றுமை உருவம் என்ற அர்த்தம் தரும் குளோனிங் என்ற வார்த்தையால் குறிப்பிடுகின்றோம்.

மனிதர்களை இந்த முறையில் உருவாக்கவே கூடாது என்று எல்லா நாடுகளும் தடைவிதித்து உள்ளன. குளோனிங் மனிதன் உருவானால் கைரேகை தவிர மற்ற அனைத்து அம்சங்களிலும் அவன் ஒன்றாகவே இருப்பான் என்று அறிவியல் கூறுகிறது. ஏன் அநேக ஹிட்லர்கள் கூட உருவாகலாம் என இந்த முறையை நன்கு அறிந்த நாடுகள் பல அஞ்சுகின்றன.

# லத்வியா

நாட்டின் பெயர்:– லத்வியக் குடியரசு.

அமைவிடம்:– கிழக்கு ஐரோப்பா. எஸ்தோனியா (Estonia) வுக்கும் லித்துவானியா (Lithuania) வுக்கும் இடையில் பால்டிக்கடலை எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது லத்வியா.

பரப்பளவு:– 64, 589 சதுர கி.மீ.

சனத்தொகை:– 2, 290, 237

மொழிகள்:– லத்வியன், லித்துவானியன், ரஷ்யன்.

தலைநகர்:– ரிகா

நாணயம்:– லத்வியன் லட் (LVL)

கிழக்கு ஐரோப்பிய நாடான லத்வியா பால்டிக் கடலின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக லத்வியா வெளிநாட்டவர்களின் கையிலேயே இருந்தது. இரண்டு உலகமாகா யுத்தங்களுக்கும் இடையில் ஒரு குறுகிய காலத்துக்கு இந்த நாடு ஜனநாயக சுதந்திர நாடாக இருந்தது. 1940 ஆம் ஆண்டு ஒரு குடியரசாக சோவியத் நாட்டுடன் இணைக்கப்பட்டது. இந்த நாட்டில் 56 சதவீதமானவர்கள் லத்வியர்கள். லத்விய மொழியை இவர்கள் பேசுகிறார்கள். ஏனையவர்கள் ரஷ்ய, லித்துவானிய மொழிகளைப் பேசுகிறார்கள்.

பெரும்பான்மையான மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்கிறார்கள். நாடு முழுவதும் கிராமியக் கொண்டாட்டங்கள் நடைபெறுவது வழக்கம். இந்த விழாக்களின் போது கிராமிய சங்கீத நடன விருந்துகள் இடம் பெறுகின்றன. இந்த விருந்துகளை வழங்கும் பாட்டுக்காரரும் நடனம் ஆடுவோரும், தமது நிகழ்சிகளின் போது கண்களைக் கவரும் வர்ணங்களாலான ஆடைகளை அணிந்து இருப்பர்.



# மாமல்லபுரம்

இப்போது தமிழ்நாட்டு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் கவனம் மாமல்லபுரத்தை நோக்கி திரும்பியிருக்கிறது. முன்பு, சுனாமிபோன்ற தாக்குதல்களினால் நமது பண்டைய நாகரீக வரலாறு அழிந்துபோயிருக்கலாம் என்ற கருத்து நிலவிவந்தது. அண்மையில் ஏற்பட்ட சுனாமியால் அந்த பழைய வரலாறு வெளிப்படத் தொடங்கி இருக்கிறது.

சுனாமிக்கு பின்னர் மாமல்லபுரம் கடற்கரையில் தோன்றியுள்ள கற்சிலைகள் மூலம் அங்கிருந்து பின்னர் அழிந்ததாக கருதப்படும் 7 கோபுரங்கள் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாமல்லபுரத்தில் ஒரு கோவில், மண்ணில் புதைந்த நிலையில் காணப்படுகிறது. இதில் ஒரு கோபுரம் மட்டும் முன்பு தெரிந்தது. சுனாமிக்கு பிறகு இரண்டாவது கோபுரமும் தெரிகிறது.



அங்கு 7 கோபுரங்கள் இருந்தன என்றும் அவற்றில் ஐந்து கோபுரங்கள் கடல் நீரால் சூழப்பட்டுள்ளன என்றும் கருதப்படுகிறது. 7 கோபுரங்களும் 7 கோவில்களா? என்பது பற்றியும் ஆராய்ச்சி நடந்துவருகிறது.

# பித்தன் பதில்கள்

*ச.அன்பழகன் — வவுனியா.*

**கேள்வி:—** பித்தா முடிவெட்ட 50 ரூபா எடுக்கிறார்கள். ஆனால், ஷேவ் செய்ய 30 ரூபா எடுக்கிறார்கள். நான் எனது தலையை ஷேவ் செய்துவிடும்படி கேட்டேன் அதற்கு 70 ரூபா கேட்கிறார்கள்... கணக்கு இடிக்கிறதே... எனது சந்தேகத்தை தீர்த்து வைப்பீரோ?



**பதில்:—** ஆஹா கிள[illegible] டாங்கையா.. கிளம்பிட்டாங்க[illegible] எ[illegible]ா கனநாளா ஒருத்தனையும் [illegible]லயே எண்டு பார்த்தன்.. வந்[illegible]யா.. வந்துட்டாங்க.. லொள்ளு[illegible]க்கெண்டே வந்திர்ராங்கய்யா நா[illegible]நக்கிற இடம்பார்த்து தேடித்தேடி வந்து கு[illegible]ம்பு குசும்பா பண்ணுறாங்கய்யா... என்னமோ தெரியேல்ல... ஊரில நாட்டில எத்தனைபேர் கேள்வி கேக்கிறாங்க... பதில் சொல்லுறாங்க.. ஆனா என்னை மட்டு[illegible] தேடித் தேடி வர்ராங்க, இழுத்து இழுத்து [illegible]ம்பில விழுத்திட்டுத்தான் அடுத்தவேலை பாக்கிறாங்க... ஏ... ராசா... என்னை பெத்த ராசா... விட்டுரு அய்யா... என் தலையை யாராவது ஷேவ் பண்ணாம காப்பாத்துய்யா... ஏ... ராசா.....

*து.வாகீசன் — சொய்சாபுர*

**கேள்வி:—** பித்தா ஜோக் ஒன்று தாரும் பிளீஸ்?

**பதில்:—** அந்த வீட்[illegible]காரர் வேலைக்காரியைப் பார்த்து [illegible]பமாகக் கத்தினார். "நான் நே[illegible] வெளியிலே சென்று




விட்டு எத்தனை [illegible]ரிக்கு வீடு திரும்பினே[illegible] என்று எனது மனைவி கேட்டா[illegible] சொல்லாதே என்று திரும்பத் திரும்ப உன்னிடம் சொல்லி இருந்தேனே ஆனால், நீயோ.. அதிகாலையில்தான் நான் வீடு திரும்பினேன் என்று எனது மனைவியிடம் போட்டுக் கொடுத்துவிட்டாய்... ஏன் இப்படிச் செய்தாய்...?''

வேலைக்காரி சொன்னாள்... "ஐயோ இல்லை ஐயா....! நான் அப்படி அம்மாவிடம் சொல்லவே இல்லை. நடந்தது இதுதான். அம்மா என்னிடம் வந்து ஐயா எத்தனை மணிக்கு வீடுதிரும்பினார் என்று கேட்டார். நானோ... ஐயா வந்தபோது நான் காலை உணவு தயாரிப்பதில் மும்முரமாக இருந்தேன் எனவே... மணி பார்க்கவில்லை என்று தான் சொன்னேனே ஒழிய.. நீங்கள் காலையில்தான் வீடு திரும்பினீர்கள் என்று நான் சொல்லவே இல்லை....'' என்றாள்.

*வ.சுவர்ணா, தாண்டிக்குளம்*

**கேள்வி:—** பித்தா! சின்ன வயதில் நடந்த மறக்க முடியாத சிரிப்புவரக் கூடிய அனுபவம் ஒன்று சொல்லுமேன்?

**பதில்:—** நான் 6—7 படித்துக் கொண்டிருந்தபோதென்று நினைக்கிறேன், எனது ஆங்கில ஆசிரியருக்குத் திருமணம். பள்ளிக் கூடத்தால் கூட்டிக் கொண்டு போனார்கள். திருமணத்திலே எல்லோரும் எனது ஆங்கில ஆசிரியரை வாழ்த்தினார்கள். எனக்கும் ஒரு உத்வேகம்... ஆசிரியரை நானும் வாழ்த்தினால் என்ன.. விறுவிறு என்று எழுந்து மணமக்களை நோக்கி நடந்தேன். ஆங்கில ஆசிரியரை ஆங்கிலத்திலே வாழ்த்தினால்தான் அவர் பெருமைப்படுவார் என்று நினைத்தபடி மணமகனான எனது ஆசிரியரிடம்சென்று அவரின்முன்னால்நின்று அவரின் கையை பிடித்துகுலுக்கியபடி சொன்னேன் Sir... Many Many Happy Returns Of The Day என்று.



*செ.தனலட்சுமி—வாகரை*

**கேள்வி:—** பித்தா! பொதுக் கட்டமைப்பு வருமா, வராதா?

**பதில்:—** வந்தால் இனவாத கட்சிகள் விடவேவிடாது. வராமல் விட்டால் வெளிநாடுகள் விடவே விடாது. ஆனால், ஒன்று மட்டும் விளங்குகிறது. ஒன்றுக்கும் உதவாத ஒரு பொதுக்கட்டமைப்பை தருவதற்கே இந்த இனவாதிகள் விடுகிறார்கள் இல்லையே. இவர்களா சமஷ்டி அல்லது நிரந்தர தீர்வு என்று எதையாவது தரப் போகிறார்கள்...? எல்லாம் சுத்த வேஸ்ட்.

*த.தாட்சாயினி—பெரியபுலம்*

**கேள்வி:—** பித்தா! உமது மனைவி உம்முடன் ஒரு மாதத்துக்கு அதாவது 30 நாட்கள் கதைக்கமாட்டேன், கோபம் என்று சொன்னால் கவலைப்படுவீரா? சந்தோஷப்படுவீரா?

**பதில்:—** மிகவும் கவலைப்படுவேன். அந்த மாதத்தின் கடைசி நாளில். அதாவது 30 ஆவது நாளில்.

*அ.நாகேஸ்வரன்—கிளிநொச்சி*

**கேள்வி:—** பித்தா! சில பெண்கள் தமது கணவருக்கு தாங்களே சம்மதித்து இரண்டாம் தாரமாக திருமணம் முடித்து வைக்கிறார்களே! என்ன காரணமாக இருக்கும்?

**பதில்:—** பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று தமது கணவரை தம்மால் மட்டும் சமாளிக்க முடியாமல் இன்னொருத்தியின் துணை தேவைப்பட்டிருக்கலாம். மற்றது. தமது மாமிமாரை தம்மால் மட்டும் சமாளிக்க முடியாமல் இன்னொருத்தியும் இருந்தால் சமாளிக்கலாம் என்ற எண்ணமாக இருக்கலாம்.

*வை.கார்த்திகேசு—காரைநகர்*

**கேள்வி:—** பித்தா! இப்போ பெண்டாட்டியை வைத்து ஒழுங்காக குடும்பம் நடத்த தெரியாத பிஞ்சிலே பழுத்ததுகள் எல்லாம் தொழில் துறை எதுவும் இல்லாமல் காதல் — கல்யாணம் எண்டு அவசரப்பட்டு முடிவெடுக்குதுகளே! இதுபற்றி உமது அபிப்பிராயம் என்ன?

**பதில்:—** ஓம்என்னத்தை அபிப்பிராயப்படுவது... தொழிலில்லை; இருக்க இடமும் இல்லை... ஏதோ அண்ணன் — தம்பி வெளிநாட்டிலே இருந்து அனுப்பும் பணத்தை வைத்து 'பந்தா' பண்ணிவிட்டு — பெட்டைகளை சுழற்றுவது.. பின்னர் கூட்டிக் கொண்டு ஓடுவது.. ஆசை 60 நாள் மோகம் 30 நாள் என்ற பழமொழிக்கு ஏற்றமாதிரி கொஞ்சநாளில் கையை கடிக்கேக்கைதான் எல்லாம் தெரியும். அதற்குப் பிறகு பெண்டாட்டியை வச்சு குடும்பம் நடத்த வழியில்லாமல் பின்னர் பெண்டாட்டியின்ர நகையை வச்சுத்தான் குடும்பம் நடத்திறது.. அதுவும் முடிஞ்ச பிறகு.. வாயில — வயிற்றில வந்த பிறகு ஒன்றுக்கும் வழியில்லாம தெருவழிய திரியிறது. இதுதான் இன்றைய இளைய சமுதாயத்தின்ர வேலைத்திட்டம்... உந்த வெளிநாட்டுக் காசு... எல்லாரையும் கெடுத்து குட்டிச்சுவராக்கிப்போட்டுது; காத்திகேசண்ணை.

*வே.கலைவாணி—நெல்லியடி*

**கேள்வி:—** பித்தா! உமது மனைவியை நான்பித்தி என்று அழைக்கலாமா?

**பதில்:—** அவள் அறிந்தால் உம்மை ஊதுபத்தி ஆக்கிவிடுவாள். நீர் அப்படி அழைக்க நான் சம்மதம் தந்தால் வீட்டுக்கு போனதும் கத்தி எடுத்து என்னைக் கொத்தி — பத்தி எரிய வைத்து விடுவாள். இவைகளிலெல்லாம் தத்தி — நானும் — நீரும் — பத்தி — ரமாக இருக்க வேண்டுமென்றால் இந்த வத்தி வைக்கும் வேலையை விட்டு விட்டு நீர் கொஞ்சம் வாயைப் பொத்தி இருப்பதே உமக்கும் நல்லது.. எனக்கும்.. மிக... மிக.. நல்லது.

*புவிதா — திருநெல்வேலி*

**கேள்வி:—** பித்தா! அரசியல் லாபத்துக்காக இனங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்திவிட்டு பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:—** அரசியலில் அவர்கள் லாபமடைய வேண்டுமாயின் சிலரை அவர்கள் நட்டப்பட வைக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் எத்தனை லட்சங்கள் — கோடிகளை கொட்டி தேர்தலில் நின்று வெற்றி பெற்றதில் அவர்களுக்கு என்ன லாபம்.

*அ.அஜந்தன்—முள்ளிவாய்க்கால்*

**கேள்வி:—** பழைய கால சினிமாப் படங்களுக்கும் — இன்றைய சினிமாப் படங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?

**பதில்:—** முன்னர் சாதாரண ஒலியமைப்பில், கறுப்பு வெள்ளையாக — 35 எம்.எம். சைஸில் வெளியாகின. இப்போ DTS ஒலியமைப்பில், கலரில் சினிமாஸ் கோப்பில் வெளியாகின்றன. இதுதான் வித்தியாசம் என்று சொல்லலாம். மற்றபடி No Comments. ஏனென்றால் இன்றைய சினிமாப் படங்களும் — இன்னும் சில காலத்தில் பழைய கால சினிமாப்படங்கள் ஆகி விடுமே!

> பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-
> பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-
>
> 
>
> பித்தன் பதில்கள்
> 'சுடர் ஒளி வார இதழ்'
> 85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
> கொழும்பு - 14

*ஆ.அமுதா—கோண்டாவில்*

**கேள்வி:—** பித்தா! நீர் வெளியூருக்கு போனால் உமது பிரிவை நினைத்து உமது மனைவி கவலைப்படுவாவா?



**பதில்:—** ஓ... சரியாகக் கவலைப்படுவா... ஏனென்றால் நான் வரும்வரை அவ தனியா இருந்து, தன்ர புடைவை எல்லாத்தையும் தானே தோய்க்கவேணும்; தானே சமைக்கவேணும் அப்ப கவலை தானே....!

*திருமதி. தணிகாசலம்—சுவி*


**கேள்வி:—** எனது தலைமுடி கட்டையாக — அழகில்லாமல் இருக்கிறது. ஆனால், சிலரின் தலைமுடி எவ்வளவு அழகாக — நீள வளர்ந்து — முழங்கால்வரை நீண்டு கிடக்கிறது... இவ்வாறு தலைமுடி அழகாக வர நாங்கள் என்ன செய்ய வேண்டும்?



**பதில்:—** ஒன்றும் பெரிய கஷ்டம் இல்லை. மிகவும் இலகுவான விடயம்தான். தினமும் காலையில் ஷம்போ போட்டு நன்றாக தேய்த்துக் கழுவவேண்டும். பின்னர் நன்றாக துடைத்து — இயற்கையான காற்றில் நன்றாக காயவைத்து மென்மையாக பராமரிக்க வேண்டும். நாள் முழுவதும் தூசுபடாமல் பாதுகாக்க வேண்டும். முக்கியமாக இரவிலே கழற்றி பத்திரமாக வைத்துவிட்டுத் தான் படுக்கவேண்டும்.

## குரங்கில் இருந்து மனிதன் வந்தது உண்மை என்றால் இப்போதும் குரங்குகள் மனிதர்களாக மாறாமல் இருப்பது ஏன்?

குரங்கில் இருந்து தான் மனிதன் தோன்றினான் என்கிறார்கள். குரங்கின் பரிணாம வளர்ச்சிதான் மனிதன் என்றும் நியாண்டர்தால் மனிதனில் இருந்து இப்போதைய மனிதன் வரையிலான தோற்றத்தை பார்த்தால் இந்த உண்மை புலப்படும் என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



உயிரினங்களிலேயே மனிதனைப்போன்ற முகம், உடல், தோற்ற அமைப்பு மற்றும் அவனைப்போன்ற செயற்பாடுகளைக் கொண்டு இருப்பது குரங்குதான். குரங்கில் இருந்து தான் மனிதன் தோன்றினான்



என்ற கருத்துக்கு இவை வலு சேர்ப்பவையாக உள்ளன. சிம்பன்சி குரங்குகளைப் பார்த்தால் அவற்றின் செயற்பாடுகள் கிட்டத்தட்ட மனிதனை ஒத்து இருப்பது தெரியும்.

சிம்பன்சி குரங்கில் இருந்து தான் மனிதன் தோன்றினான் என்றால், தற்போது உலகில் இருக்கும் சிம்பன்சிகள் எல்லாம் ஏன் அப்படியே இருக்கின்றன? அவை ஏன் மனிதனாக மாறுவது இல்லை? என்ற கேள்வியை இந்த கூற்றுக்களை நிராகரிப்போர் எழுப்புகிறார்கள்.

கென் ஆபிரிக்காவில்சுமார் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பூமிக்கு அடியில் புதைந்து மக்கிப்போன சில உயிரினங்களின் உடல் பகுதிகள் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றை ஆராய்ந்ததில் மனிதனும் சிம்பன்சி குரங்கும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் போன்ற உறவுகொண்டவர்கள் என தெரியவந்து உள்ளது.

அதாவது மனிதன் சிம்பன்சியின் முதாதையர் தான் என்றும் ஆனால் நாளடைவில் அந்த தலைமுறைகள் கிளைகளாக பிரியும்போது காலப்போக்கில் மனிதனும் சிம்பன் சியும் தனித்தனி உயிரினங்களாக மாறிவிட்டார்கள் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

# உலக வரலாறும் 5 மனித விடுதலையும்

மூலதனத்தின் ஆய்வில் முதலாளியத்தின் உண்மை முகத்தை கார்ள் மாக்ஸ் கண்டு கொள்ளவில்லை. உலகத்தின் வளங்களையும் உழைப்பாற்றலையும் சுரண்டிக்கொழுக்கும் அதன் உற்பத்தி வலுவையும் அவர் செம்மையாக எடைபோடவில்லை என்பது சில பொருண்மிய ஆய்வாளர்களது கருத்து.

தொழில்நுட்பத்தின் தன்மையை, அதன் பேராற்றலை கார்ள் மாக்ஸ் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது இன்னொரு சாராரது வாதம். உற்பத்தி சக்தியின்

> **தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை – பக்கத்தை – அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை – வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.**

முக்கிய கூறாக விளங்கும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது உற்பத்தி உறவுகளில் முரண்பாட்டையும், நெருக்கடியையும் தோற்றுவிக்கும் எனக் கருதுவது தவறு. தொழில்நுட்பமானது மனிதத் தேவையின் நிர்ப்பந்தத்தால் பிறக்கிறது. பொருள் உற்பத்தியைச் செழுமைப்படுத்துகிறது. முழு உலகத்தையுமே ஒரு புதிய தொழில்நுட்ப யுகத்தை நோக்கி நகர்த்திச் செல்கிறது. முதலாளிய உற்பத்தியின் மூச்சாக விளங்கும் இந்த தொழில்நுட்பத்தின் வீச்சை கார்ள் மாக்ஸ் சரியாக மதிப்பாய்வு செய்யவில்லை என்பது இவர்களது நிலைப்பாடு.

சோசலிச சமூக உருவாக்கம் பற்றி மாக்சின் எதிர்பார்ப்புகளும் நிறைவுபெறவில்லை. முதலாளித்துவம் பாரிய அளவில் வளர்ச்சி கண்ட பிரிட்டன் அல்லது ஜேர்மனியில் வர்க்க முரண்பாடு கூர்மையடைந்து, சமூகப் புரட்சி வெடித்து, சோசலிசம் உருவாக்கம் பெறும் என கார்ள் மாக்ஸ் எதிர்பார்த்தார். ஆயினும், அவர் எதிர்பார்த்ததுபோல இந்நாடுகளில் சமூகப் புரட்சிகள் நிகழ்ந்து சோசலிச சமூகம் உதயம் பெறவில்லை. மாறாக, சமூகப் புரட்சிகள் வேறு எங்கோ நிகழ்ந்தன. அதுவும் முதலாளியம் முதிர்ச்சி காணாத, நிலமானியத்தில் திளைத்து நின்ற ரஷ்யாவிலும், பின்பு சீனாவிலும் புரட்சிகள் நிகழ்ந்தன. இந்தச் சமூகப் புரட்சிகளும் இயங்கியலின் தவிர்க்கமுடியாத நியதிகளின் நிர்ப்பந்தத்தால் நிகழவில்லை. இங்கு சமுதாயப் புரட்சிகள் திட்டமிட்டு நடத்தப்பட்டன. மனித செயற்பாட்டின் திண்ணியமான முனைப்பாக இங்கு மாபெரும் சமூக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

லெனினும், மாவோவும் இயங்கியல் ஆய்வு முறைமையைக் கையாண்டனர். முரணியக் கோட்பாட்டின் அடிப்படையில் சமூக வெய்யுலகை ஆழமாக ஆராய்ந்தனர். ஆயினும், கோட்பாட்டு விளக்கத்துடன் நின்றுவிடாது செயற்பாட்டிற்கும் முதன்மை கொடுத்தனர். கோட்பாட்டுடன்

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

செயற்பாடு கைகோத்து நிற்கும் பொழுதுதான் புரட்சி சாத்தியமாகுமென்பதை வலியுறுத்தினர். கோட்பாடும் செயற்பாட்டு அனுபவத்தில் நெறிக்கப்பட வேண்டும் என்பதை லெனின் சுட்டிக்காட்டினார். 'வெகுசனப் புரட்சி இயக்கத்தின் நடைமுறைச் செயற்பாட்டுடன் ஒன்றிணைந்து நிற்கும் பொழுதே ஒரு புரட்சிகரக் கோட்பாடு முழுமையான வடிவத்தை எடுக்கிறது' என்கிறார் லெனின்.

*1917* ஆம் ஆண்டு நிகழ்ந்த அக்டோபர் புரட்சியை அடுத்து ரஷ்யாவில் சோசலிச அரசு நிறுவப்பட்டது. அதன்பின்னர் இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவிலும் சோசலிச அரசுகள் உருவாக்கம் பெற்றன.

உலகமுதலாளியத்திற்குப் போட்டியாக எழுந்த சோசலிச அரசுகளும் சோசலிசப் பொருண்மிய உற்பத்தி வடிவங்களும் நிலைத்து நிற்கவில்லை. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் இறுதியிலும், தொண்ணூறுகளின் ஆரம்பத்திலும் ஏற்பட்ட அரசியற் பூகம்பங்கள் காரணமாக சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிச அரசுகள் தகர்ந்து விழுந்தன. *1989* ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கும் டிசம்பருக்கும் மத்தியில் ஆறு கிழக்கு ஐரோப்பிய சோசலிச அரசுகள் சிதைவுற்றன. இதே ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் புரட்சிகரமான அரசியற் சீர்திருத்தங்கள் நிகழ்ந்தன. இறுதியில் *1991* ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டதை அடுத்து சோவியத் ஒன்றியத்தின் சோசலிச ஆட்சி கவிழ்ந்தது.

சீனாவில் *1980* ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்தே சோசலிசப் பொருளாதாரக் கட்டுமானத்தில் அடிப்படையான சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசின் ஆதிக்கத்தின் கீழிருந்த கூட்டுறவு விவசாய முறை நீக்கப்பட்டு, தனிப்பட்ட முறையில் உணவு உற்பத்தியில் ஈடுபடவும், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும் சீன விவசாயிகளுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது. எண்பது விகிதமான சனத்தொகையைக் கொண்ட சீன விவசாய சமூகம் முதலாளிய உற்பத்தி முறையைத் தழுவிக் கொண்டது. அப்பொழுது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகப் பதவி வகித்த டெங் சியா பிங், தனியார் சொத்துடமையை அனுமதித்ததுடன் முழு நாட்டையுமே முதலாளிய பொருளுற்பத்தி முறைக்குத் திறந்து விட்டார். சீனக் கம்யூனிஸ்ட் தலைமை ஆட்சியதிகாரத்தை இறுகப் பற்றிக் கொண்டு முதலாளியத்தைத் தழுவிக்கொண்டதால், அரசியல் நெருக்கடியைத் தவிர்த்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு வருகிறது. எனினும், சீனாவில் சோசலிசம் தோல்வி கண்டது என்பதுதான் உண்மை.

முதலாளியம் தகர்ந்து விழும் என்றும் அதன் சமாதியிலிருந்து பொதுவுடமை சமுதாயமாக சோசலிசம் தோன்றி வளர்ந்து, உலகெங்கும் பரவி, அதன் உயர்நிலைப் பரிணாம வளர்ச்சியாக கம்யூனிச சமூகம் தோன்றும் என்றும் அந்த உன்னதமான சமூக வடிவத்தின் உதயத்துடன் மனிதர்கள் முழுமையான விடுதலை பெறுவதுடன் மனித வரலாறும் முழுமைபெற்று முடிவுக்கு வருமென மாக்சியத்தின் தந்தையார் கண்ட கனவு பலிக்கவில்லை.



சோசலிசத்தின் சிதைவுக்கான காரணங்களை ஆழமாக, விரிவாக ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமல்ல. எனினும், சில மூலகாரணிகளை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பாவிலும் சோசலிச அரசுகள் சிதைவுற்றதற்குப் பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணம். இந்த நாடுகளின் பொருளாதார வாழ்வு மைய அரசின் இரும்புப் பிடிக்குள் இருந்தது. மைய அரசே பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி அவற்றை இறுக்கமாக நடைமுறைப் படுத்தியது. சோவியத் ஒன்றியத்தைப் பொறுத்தவரை அரச பொருளாதாரத் திட்டங்கள் பொதுமக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்வனவாக அமையவில்லை. மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குப் பதிலாகக் கனரக தொழிற்சாலைகள் நிறுவும் திட்டங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. உலக முதலாளிய வல்லரசுகளுடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்ததால் தேசிய வருமானத்தின் பெரும் பங்கு ஆயுத உற்பத்தியிலும், அணு ஆராய்ச்சியிலும், விண்வெளி ஆய்விலும் செலவிடப்பட்டது. இத்தகைய தவறான அணுகுமுறையால் சோவியத் ஒன்றியம் பாரிய உணவுத் தட்டுப்பாட்டைச் சந்திக்க நேர்ந்தது. பண வீக்கம் அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியின் விகிதாசாரம் படிப்படியாக வீழ்ந்து பூஜ்யத்தை அடைந்ததாக சோவியத் பொருளாதார நிபுணர்கள் சிலர் கூறுகிறார்கள். மக்களின் வாழ்க்கைத் தரமும் வெகுவாகக் குறைந்தது. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. சோவியத் மக்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டனர். முதலாளிய உலகிலிருந்து உணவுத் தானியங்களை இறக்குமதிசெய்ய சோவியத் அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. சோசலிசப் பொருளாதார உற்பத்தி முறையில் மக்களுக்கு நம்பிக்கை தளர்ந்தது. கம்யூனிசக் கட்சியின் ஆட்சியமைப்பை மாற்றியமைக்க மக்கள் திடசங்கற்பம் பூண்டனர்.

சோவியத் ஒன்றியத்திலும் சரி, கிழக்கு ஐரோப்பாவிலும் சரி, சோசலிசத்தின் சிதைவுக்கு பொருளாதார நெருக்கடி மட்டும் முக்கிய காரணி அல்ல. ஒரு கொடூரமான சர்வாதிகார ஆட்சிமுறையும் அதன் கீழ் பொதுமக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுமே கம்யூனிச நிர்வாகம் சிதைந்து போனதற்கு பிரதான காரணமாகும்.

ஒக்டோபர் புரட்சியை அடுத்து சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி பீடம் ஏறியது. கட்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார ஆட்சிமுறையில் உண்மையான சனநாயகம் பேணப்படுமென லெனின்



கூறிவந்தார். ஆனால், நடைமுறையில் அப்படி நிகழவில்லை. லெனினின் மறைவுக்குப் பின்னர் ஆட்சிப்பீடம் ஏறிய ஸ்டாலின் மிகவும் கொடூரமான சர்வாதிகார ஆட்சிமுறையை நிறுவினார். அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. இரவுக் கைது, சித்திரவதை, கொலைகளாக பொது மக்கள் மீது கொடுமை கட்டவிழ்த்து விடப்பட்டது. சைபீரிய பனிமண்டல சிறைகளில் பல லட்சம் மக்கள் மரணத்தைத் தழுவ நேரிட்டது. ஸ்டாலினின் மறைவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த குருசேஷ் *1956* ஆம் ஆண்டு விடுத்த பிரகடனத்தில், ஸ்டாலின் ஆட்சிக்கால அட்டூழியங்களைப் பகிரங்கப்படுத்தினார். ஆயினும், அரச பயங்கரவாதம் முடிவுக்கு வரவில்லை.

எதிர்ப்புகளை நசுக்கி, குடிமக்களை இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தீர்மானித்த அரசு கடுமையான அடக்கு முறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனால் சாதாரண மக்களின் சாதாரண சமூக வாழ்வு சிதறடிக்கப்பட்டது. குடும்பம், மத வழிபாடு, பண்பாட்டு வாழ்வு போன்ற சமூக வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் மனித உறவுகளைப் பாதிக்கும் வகையில் அரச சர்வாதிகாரம் மக்களின் வாழ்வில் தலையிட்டது. அன்புறவுகளுக்கு அப்பால் அரச விசுவாசத்திற்கும், கீழ்ப்படிவிற்கும் முதன்மை அளிக்கப்பட்டது. மக்களின் சிந்தனையை நெறிப்படுத்தி அவர்களை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் நோக்கில் ஊடகங்களையும், கல்வி முறையையும், கட்சிச் சித்தாந்தத்தையும் அரசு தனது கட்டுப்பாட்டில் இயக்கியது. ஆயினும், யதார்த்த உண்மைகளை ஊடகங்கள் வாயிலாகவும், திட்டமிட்ட பரப்புரைகள் மூலமாகவும் சோவியத் சர்வாதிகாரம் மூடி மறைக்க முனைகிறது என்பதை மக்கள் உணரத் தொடங்கினர். நீண்ட காலமாக, பல பரம்பரைகளாக சர்வாதிகார ஆட்சியின் அட்டூழியங்களைச் சகித்து வந்த சோவியத் மக்கள், எண்பதுகளின் இறுதிப் பகுதியில் கோர்பச்சேவின் ஆட்சிக் காலத்தில் பொறுமையின் எல்லையை அடைந்தனர். சோவியத் சோசலிச ஆட்சியைக் கட்டிக்காக்க விழைந்த கோர்பச்சேவ் சில அடிப்படையான அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். ஆனால், அவை மக்களின் கொதிப்புணர்வையோ, சோசலிச ஆட்சியை சிதைத்து விட வேண்டுமென்ற அவர்களது உறுதிப்பாட்டையோ தணித்துவிடவில்லை.

தனியார் சொத்துடைமையை பொதுவுடைமையாக ஆக்கிவிட்டால், சொத்துடைமையால் எழும் வர்க்க பேதங்கள் நீங்கி சமத்துவ சமுதாயம் உருவாகும் என மாக்சியத்தின் மூலகர்த்தாக்கள் கண்ட கனவு நிறைவேறவில்லை. மாறாக சோசலிச நாடுகளில் ஒரு புதிய ஆளும் வர்க்கம் தோற்றம் எடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் பிரமுகர்களும் முக்கிய உறுப்பினர்களுமாக அரச நிர்வாகத்தைக் கைப்பற்றி புதிய ஆளும் வர்க்கமாக உருவெடுத்தனர். இப் புதிய ஆளும் வர்க்கமானது சர்வ அதிகாரமும், சகல வசதிகளும், சலுகைகளும் பெற்றதாக மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாக இயங்கியது. ஊழலும் நிர்வாகச் சீர்கேடும் ஒழுக்கக் கேடும் இப் புதிய ஆட்சியாளரிடம் குடிகொண்டதால் இவர்கள் வெகுசன விரோதிகளாக மாறினார்கள். சோசலிச உலகில் தோற்றமெடுத்த இப்புதிய அதிகார வர்க்கத்தின் அநீதிகளும், அட்டூழியங்களும் சோசலிசத்தின் வீழ்ச்சிக்கு புறநிலையை அமைத்துக் கொடுத்தன எனலாம்.

சோசலிச ஆட்சியில் சமத்துவமும் சுதந்திரமும் சம உரிமைகளும் நிலைநாட்டப்பட்ட ஓர் உன்னத சமுதாயம் பிறக்கும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் சமத்துவத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக அவை தனி மனித அபிலாசைகளை நசுக்கி, சமூக அநீதிக்கு வழி வகுத்தன. எல்லா மனிதர்களும் தமது ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவே ஆவல் கொண்டனர். மனித ஆற்றலுக்கு மதிப்பளிக்காமல், தேவையின் அடிப்படையில் வருமானத்தை நெறித்து அரசினால் திணிக்கப்பட்ட சமத்துவமானது மனித உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் விரோதமாக அமைந்தது. பிற தலையீடுகள் எதுவுமின்றி தமது தனிப்பட்ட வாழ்க்கையை, தமது சொந்த அபிலாசையைத் தாமாக நிர்ணயித்துக் கொள்ளவே மனிதர்கள் விரும்பினார்கள். பொது உடமை என்றும், பொதுவான கூட்டுறவு வாழ்க்கை என்றும் தேவைக்கு ஏற்றதான ஊதியம் என்றும் சோசலிசம் வழங்கிய சமத்துவத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அடிப்படையான மனித உரிமைகளோடு, தமது தலைவிதியைத் தாமாகத் தெரிவு செய்யும் சுதந்திர மனிதர்களாக வாழ்வதையே எல்லா மனிதர்களும் விரும்பினார்கள். தனி மனிதர்களின் இந்த அடிப்படையான அபிலாசைகளுக்கு சோசலிச ஆட்சிமுறை இடமளிக்கவில்லை. சோசலிசத்தின் சிதைவுக்கு இதுவும் ஒரு பிரதான காரணியாக அமைந்தது.

மானிடத்தின் வரலாறு பற்றிய ஹேகலதும், கார்ள் மாக்சினதும் சிந்தனை உலகங்களைத் தரிசித்தோம். வரலாற்றியலில்

## விடுதலை

இயங்கியல் தத்துவத்திற்கு ஹேகல் அளித்த முக்கியத்துவம் பற்றியும், சமூக வரலாற்றுத்துறையில் இயங்கியல் ஆய்வு முறையைக் கார்ள் மாக்ஸ் தழுவிக் கொண்டதையும் பார்த்தோம். 'மூலதனம்' என்ற தனது பிரதான நூலில் முதலாளித்துவ உற்பத்தி வடிவம் பற்றி கார்ள் மாக்ஸ் நிகழ்த்திய ஆழமான ஆய்வு பற்றியும் விளக்கினோம். முதலாளித்துவத்தின் தவிர்க்கமுடியாத வீழ்ச்சி பற்றியும், கம்யூனிச சமூகத்தின் உதயத்துடன், முரண்பாடுகள் நீங்கிய அந்த உயர் நிலை சமுதாய வளர்ச்சியுடன் வரலாற்று அசைவியக்கம் முடிவுக்கு வருமென மாக்ஸ் கூறிய தீர்க்க தரிசனம் பலிக்கவில்லை என்பது பற்றியும் விவரமாக விளக்கினோம்.

சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவிலும், சோசலிச உற்பத்தி வடிவங்கள் சிதைவடைந்து அங்கெல்லாம் முதலாளித்துவ பொருளுற்பத்தி பெருவளர்ச்சி கண்டு வருகிறது. சோசலிசத்தின் வீழ்ச்சியுடன் முதலாளித்துவம் எழுச்சி கண்டுள்ள இப் புதிய சூழ்நிலையில் மாக்சிய சிந்தனை மறுபரிசீலனைக்கு ஆளாகி வருகிறது. நவீன வரலாற்றியலில் மாக்சிய சிந்தனை எத்தகைய பங்கை வகிக்கமுடியும்? மாக்சிய சமூகவியலை ஒரு அறிவியற் கோட்பாடாக நிறுவமுடியுமா? மாக்சியச் சிந்தனையிலுள்ள பலவீனங்கள் என்ன? சிறப்பம்சங்கள் என்ன? மனித விடுதலை நோக்கிய வரலாற்றின் அசைவியக்கம் முடிவு நிலை எய்துமா? இன்றைய வரலாற்றியல், சமூகவியல் சிந்தனையாளர்கள் மத்தியில் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய கேள்வி பற்றி இனி நோக்குவோம்.

(வளரும்...)

# பவளக்கொடி

சுடர் ஒளி சிறுகதை

-பர்குணன் அம்பிகாபதி-



கொழும்பிலிருந்து புறப்பட்ட அந்த அரைச்சொகுசு பேருந்து வவுனியா மையப் பகுதியை ஒருமுறை வட்டமிட்டு நின்றது. பயணிகள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக முட்டி மோதிய வண்ணம் இறங்கிக் கொண்டிருந்தனர். இறங்கிய பயணிகளுள் ரஞ்சித்தும் ஒருவன். சுமார் 12 வருட கால இடைவெளிக்குப்பின்பு ரஞ்சித் வெளிநாட்டிலிருந்து தனது சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். ரஞ்சித்தின் சொந்த ஊர் வவுனியாவுக்கு வடக்கே அமைந்திருந்தது. எனவே அவன் வடக்கே நோக்கிப் புறப்படவிருந்த பேருந்தில் ஏறி அமர்ந்துகொண்டான். பயணிகள் அனைவரும் ஏறிக்கொள்ளவும் பேருந்து மெல்ல மெல்ல நகரத் தொடங்கியது. நேரம் செல்லச்செல்ல அது தனது வேகத்தை அதிகரித்த வண்ணம் சென்று கொண்டிருந்தது.

ஜன்னல் வழியாக வந்த வெளிப்புறக் காற்று அவனை உறக்கத்துக்கு இழுத்துச் செல்ல எவ்வளவோ முயன்றும் தோற்றுக் கொண்டிருந்தது. காரணம் பழைய நாள் நினைவுகள் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்ததால் அவனது ஊர் எல்லையை பேருந்து நெருங்க நெருங்க அவன் உள்ளத்தின் உணர்வுகள் உயிர் பெற்று எழத் தொடங்கின. எவ்வளவுதான் அவன் தனது மனதினைக் கட்டுப்படுத்த நினைத்தாலும் அவனையும் மீறி மீண்டும் மீண்டும் அந்த நாள் நினைவுகள், உணர்வலைகளால் மீட்டல் பெறத் தொடங்கின.

***

பெற்றோருக்கு ஒரே பிள்ளையாகப் பிறந்த ரஞ்சித் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தவன். எனவே வீட்டிலும் அவனுக்குச் செல்லம் அதிகம். கல்வியிலும் ரஞ்சித் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தான். அவ்வளவு திறமையாகக் கற்றதினால் தான் அவன் இன்று ஒரு வைத்தியப்பட்டம் பெற்ற திறமையான வைத்தியர் என்று புகழ் பெற்றிருந்தான். ரஞ்சித்தின் இளமைக்காலங்களில் அவன் மிகவும் கண்ணியமாக வாழ்ந்தவன். படிக்கும் காலங்களிலும் கூட அவன் தனது சொந்த மச்சாள் பவளக்கொடியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் நிமிர்ந்துகூடப் பார்க்க மாட்டான்.

பவளக்கொடி. அந்தப் பெயரை உச்சரிக்கும்போதே அவனது நா வறண்டு கண்கள் குளமாகத் தொடங்கின. காரணம் இளமைக் காலத்தில் ரஞ்சித் பவளக்கொடியை தன் உயிரிலும் மேலாக நேசித்தவன். பவளக்கொடிக்கும் ரஞ்சித்துக்கும் ஒரே வயது. அவனும் பவளக்கொடியும் உயர்தரம் வரை ஒரே வகுப்பில் கல்வி கற்றனர். பவளக்கொடி தனது முறை மச்சாள் என்பதால் அவள் பருவமடைந்த காலத்தில் இருந்து அவளை தன் மனக் கூண்டுக்குள் பூட்டி வைத்துக் குளிர் காய்ந்துகொண்டிருந்த ரஞ்சித் எப்போதோ ஒருநாள் சந்தர்ப்பம், சூழ்நிலை வரும்போது நிச்சயம் பவளக்கொடியிடம் தனது காதலைத் தெரிவிப்பது என்று எண்ணியிருந்தான். அதற்கான நாளும் அன்று வந்து சேர்ந்தது.

ஆம். உயர்தரத்தில் ரஞ்சித்துக்கும், பவளக்கொடிக்குமே அந்தப் பாடசாலையில் திறமைச் சித்தி கிடைத்திருந்தது. எனவே இருவருமே பல்கலைக்கழகத்துக்கான அனுமதியினையும் பெற்றிருந்தனர். விடயம் அறிந்த ரஞ்சித் பவளக்கொடியின் வீடு நோக்கிக் காற்றாகப் பறந்தான். இந்த நல்ல செய்தியுடன் தனது காதலையும் பவளக்கொடிக்குத் தெரிவித்து அவளை இன்பக் கடலில் ஆழ்த்த வேண்டும் என்று எண்ணினான்.

'ப...வளக்...கொடி' என்று உரக்க அழைத்தவாறு அவளது வீட்டு வாசலில் கால் பதித்து நின்றவன் வாயடைத்துப்போய் சிலையானான். காரணம் பவளக்கொடி அழுது வழிந்த முகத்துடன் ஆறாத் துயரில் அமர்ந்திருந்தாள். ''பவளக்கொடி ஏய் பவளக்கொடி நான் உன் அத்தான் ரஞ்சித் வந்திருக்கிறன். ஏன் உன்ர முகம்; என்ன நடந்தது உனக்கு? பவளக்கொடி எங்கட ரிசல்ட் வந்திட்டுது தெரியுமா உனக்கு?'' என்றவனிடம் ''ஓம் தெரியும் அத்தான். அதுதான் நான் அழுதுகொண்டிருக்கிறன்.'' என்றாள் அவள்.

''பவளக்கொடி... பவளக்கொடி நீ என்ன சொல்லுற? எனக்கு விளங்கேல்லை''

''அத்தான். விளங்கிற மாதிரிச் சொல்லுறன் கேளுங்கோ.'' என்றவள் சிறு விம்மலுடன் ''அப்பா என்னை மேல படிக்க வேண்டாமாம். எங்கேயோ எனக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கிறாராம். கல்யாணம் செய்யட்டாம்'' என்றாள்.

ரஞ்சித் இடி மின்னல் தாக்கியதுபோல் அசையாமல் நின்றான். எவ்வளவு நேரம் அவன் அப்படிநின்றான் என்று அவனுக்கே தெரியாது. அவன் மீண்டும் தனது வீடு நோக்கி நடைப்பிணமாகச் சென்றான்.

காலங்கள் காற்றாகப் பறக்க ரஞ்சித் பல்கலைக்கழகம் போகும் நாளும் வந்தது. தனது உடைமைகள் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொண்டவன் யாழ். பல்கலைக்கழகம் நோக்கிப் பயணம் ஆனான். போகும் போது பவளக்கொடியிடம் சென்று சொல்லி விட்டுப்போக அவன் மனம் துடித்தாலும் அவன் அவளிடம் சொல்லாமலே சென்றான்.

கல்வி எனும் பாதை வழியே அவன் பயணித்துக்கொண்டிருந்தாலும் இடையிடையே பவளக்கொடியை நினைத்து நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டுதான் இருப்பான். வீட்டுக்கு மடல் வரையும் போதெல்லாம் தாயிடம் பவளக்கொடி பற்றி உருக்கத்துடன் விசாரித்து எழுதுவான்.

அன்று பல்கலைக்கழக விடுமுறை நாள் வந்தது. ஒருமாத விடுமுறை என்பதால் ரஞ்சித் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான். வீட்டை அடைந்த ரஞ்சித்திடம் அவனது தாயார் ''பவளக்கொடிக்கு கல்யாணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. நாளைக்கு அவளுக்குக் கல்யாணம். நல்ல நேரத்தில்தான் வந்திருக்கிறாய்'' என்றாள்.

ரஞ்சித்தின் உள்மனது ஒரு முறை அதிர்ந்துபோய் நின்றது. 'பவளக்கொடி நான் நினைவு தெரிந்த நாள் முதல் உன்னையல்லவா என் மனதுக்குள் வைத்துப் பூஜித்துக்கொண்டிருந்தேன். அப்படி இருக்கையில் நீ எப்படி இன்னொருவன் மனைவி ஆவது? இது எப்படி சாத்தியம்' என்று உள்ளுக்குள்ளேயே அழுதவன் என்ன நினைத்தானோ தெரியவில்லை பவளக்கொடி வீடு நோக்கிப் புறப்பட்டான்.

ரஞ்சித்தைக் கண்ட பவளக்கொடி எதுவித சலனமுமின்றி ''அத்தான் வாங்கோ'' என்று கூறிவிட்டு தனது அலுவல்களில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். வீடு கலியாண மேடையாகக் களை கட்டியிருந்தது. எல்லோரும் ஒரே பரபரப்பில் மூழ்கியிருந்தார்கள். சிறிது நேரம் அமர்ந்திருந்த ரஞ்சித்துக்கு தொடர்ந்து அங்கு அமர்ந்திருக்கப் பிடிக்கவில்லை. யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் எழுந்து தனது வீடு நோக்கிப் புறப்பட்டான்.

விடிந்தால் பவளக்கொடிக்குத் திருமணம். அவளுக்கு ஏதாவது அன்பளிப்புப் பொருள் கொடுக்க நினைத்தான். நீண்ட சிந்தனையின் இடைவெளிக்குப் பின்பு அவளுக்காக ஒரு ஊதா வர்ணச் சேலையை வாங்கி வைத்துக்கொண்டான்.

திருமண வீடு திருவிழாவாகக் களை கட்டியிருந்தது. ஆண்கள், பெண்கள், சிறுவர்களென வீடு நிறைந்து வழிந்தது. ரஞ்சித்தின் மனநிலை மட்டும் வேதனையின் விளிம்பில் நின்று தவித்துக்கொண்டிருந்தது. இருந்தும் அவன் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டவனாக உறுதியான முடிவொன்றை எடுத்தான். 'இன்றிலிருந்து பவளக்கொடியை மனதளவில் கூட நினைக்கக் கூடாது. அவள் மாற்றான் மனைவி அல்லவா? எனவே பவளக்கொடியை தாயாக நினைத்துக்கொள்ள வேண்டும்'' என்று ஏதோவெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தவன் நாதஸ்வர இசை ஆரவாரமாக ஒலிக்க மணவறையைப் பார்த்தான். மாப்பிள்ளை அழைத்து வரப்பட்டு மாங்கல்யம் அணிவிக்கும் நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

பவளக்கொடிக்குப் பக்கத்தில் மாப்பிள்ளை மாதவன் கம்பீரமாக தனது நெஞ்சை நிமிர்த்திய வண்ணம் அமர்ந்திருந்தான். மாப்பிள்ளையின் பருத்த உடல் அவனைப் பணக்காரன் என்ற பச்சை குத்தியிருந்தது. பவளக்கொடியின் மெல்லிய உடல்வாகுக்கு மாப்பிள்ளை மாதவன் கொஞ்சம் கூடப் பொருத்தமில்லை. இருந்தும் மனப்பொருத்தமிருந்தால் சரி என்று ரஞ்சித் நினைத்துக் கொண்டான். கெட்டிமேளங்கொட்ட மாப்பிள்ளை மாதவனின் கரங்களால் பவளக்கொடிக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

மண மக்களை வாழ்த்தி வாழ்த்தி ஒவ்வொருவராக மண்டபத்தை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர். ரஞ்சித்தும் தனது பங்குக்கு பரிசுப் பொதியை வழங்கியபோது பவளக்கொடி மாப்பிள்ளையிடம் ரஞ்சித்தை தனது மாமா மகன் என்று அறிமுகப்படுத்தி வைத்தாள். மணமக்கள் இருவரையும் வாயார வாழ்த்திவிட்டு ரஞ்சித்தும் வெளியேறிக் கொண்டிருந்த சமயம் சபையில் ஒரே பரபரப்பு. நெரிசல்களைத் தாண்டி என்ன என அவன் அறிய முற்பட்டபோது மணவறையில் மாப்பிள்ளை மயங்கி விழுந்து விட்டதாக கதை பரவத் தொடங்கியது. வைத்தியர் ஒருவர் வரவழைக்கப்பட்டு மாப்பிள்ளை பரிசோதிக்கப்பட்டார்.

'மாரடைப்புக் காரணமாக மணவறையில் மாப்பிள்ளை மரணம், மறுநாள் பத்திரிகையில் வெளிவந்த செய்தி அது. பவளக்கொடி கொடியிழந்த மலராக வாடி வதங்கிப்போய் நின்றாள். பூவோடு அவளது பொட்டும் சேர்த்துப் பறிக்கப்பட்ட பாவையாக அவள் பரிதவித்து நின்றாள். ரஞ்சித்துக்குப் பவளக்கொடியை நிமிர்ந்து பார்க்கக் கூட முடியவில்லை. அவனது மனம் மீண்டும் மீண்டும் குழப்பத்தில் தவியாய்த் தவித்தது. எனவே அவன் பல்கலைக்கழகம் தொடங்குமுன்பே மன அமைதி தேடி ஆறுதலடைய பல்கலைக்கழகம் நோக்கிப் புறப்பட்டான்.

காலம் தனது நேரத்தை மட்டும் கணக்காகக் கணித்ததால் நான்கு வருட காலப் படிப்பு முடிந்து ரஞ்சித் நிரந்தரமாகவே ஊருக்கு வந்தான். வீட்டில் அவனுக்குப் பொழுது போவதே மிகவும் கஷ்டமாக இருந்தது. அவன் தினமும் பவளக்கொடி வீட்டிலேயே தன் பொழுதைக் கழித்து வந்தான்.

பவளக்கொடி சிறிது சிறிதாக மனம் மாறிவரத் தொடங்கினாள். தனது திருமண நாள் அதிர்ச்சியில் இருந்து விடுபட்டு எல்லோரிடமும் சகஜமாகப் பேசவும் கலகலவெனச் சிரிக்கவும் தொடங்கினாள். அத்தான் அத்தான் என்று ரஞ்சித்தையே சுற்றி வரத் தொடங்கினாள். ரஞ்சித்தும் பவளக்கொடியிடம் முன்னையதை விட மிக நெருக்கமாகப் பழக ஆரம்பித்தான். இருவருக்குமிடையே ஏதோவொரு உறவு பலம் பெற்றிருப்பதாக இருவருமே உணர்ந்து கொண்டனர்.

இனிமேலும் பவளக்கொடியைக் கண் கலங்க விடக்கூடாது. எனவே வெகு விரைவில் அவளை மணம் முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தனது தாயாரிடம் விடயத்தைக்கூறி அதன் பின் பவளக்கொடியை சம்மதம் கேட்போம் என்று எண்ணினான்.

''அம்மா அம்மா'' என்று குரல் கொடுத்தவாறு சமையல் அறை நோக்கிச் சென்றான். அவனைக் கண்ட தாயார் அவன் பெயருக்கு வந்திருந்த மடலை அவன் முன் நீட்டினாள். பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றதால் அவனுக்கு அமெரிக்காவில் இலவசக் கல்வியைத் தொடர்வதற்காக அழைப்பு வந்திருந்தது.

ரஞ்சித் அமெரிக்கா புறப்படும் நாளும் வந்தது. அவன் பெற்றோரிடமிருந்து விடை பெற்று பவளக்கொடியின் முன் வந்து கல்லாக சமைந்து நின்றான். பவளக்கொடி நான் உன்னைக் காதலிக்கிறேன். நான் படிப்பு முடிந்து மீண்டும் நாடு திரும்பு மட்டும் நீ எனக்காகக் காத்திருப்பாயா? நிச்சயம் நான் உன் கரம் பிடிப்பேன்'' என்றான். அவளும் விடைகொடுத்தாள்.

அமெரிக்கா சென்றடைந்த ரஞ்சித் பவளக்கொடிக்கு மடல் வரையத் தொடங்கினான். எனக்காக நீ எத்தனை வருடமும் காத்திருப்பாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு.'' என்று ஆரம்பித்து மனதில் அடக்கி வைத்த அனைத்தையும் மடலாக வரைந்து உறையிலிட்டவன் அருகில் இருந்த வானொலிப் பெட்டியைத் திருகினான். இலங்கையில் வடபுலத்தில் கடும் யுத்தம். மக்கள் இடம் பெயர்வு'' அவ்வளவுதான் அவன் காதில் கேட்டது.

அவனது குடும்பத்தைப் பற்றியோ இல்லை பவளக்கொடி பற்றியோ இன்று வரை எதுவித தகவலும் இல்லை. யுத்தத்தின் காரணமாக இலங்கை திரும்ப முடியாதிருந்த ரஞ்சித் இந்த 12 வருட இடைவெளிக்குப்பின்பு இன்றுதான் தனது உறவுகளைத்தேடி ஊர் வந்துகொண்டிருக்கிறான்.

''என்ன தம்பி கற்பனையில் மிதக்கிறீர் போல. நீ இறங்க வேண்டிய இடம் வந்திட்டுது 'இறங்கேல்லையோ?'' என்று நடத்துனரின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்த ரஞ்சித் அவசர அவசரமாக தனது பொதிகளுடன் இறங்கிக் கொண்டான்.

ரஞ்சித்துக்கு தனது ஊரையே அடையாளம் காண முடியவில்லை. கட்டிடங்கள், மதில்கள் எல்லாம் இடிந்து எங்கும் வெட்ட வெளிகள் வெறும் சுடுகாடு போன்றிருந்தது. ஆங்காங்கே சிறு சிறு குடிசைகளில் ஏழை வாசிகள். அவர்கள் எல்லாமே அவனுக்குப் புதுமுகங்களாகத் தெரிந்தனர்.

இருந்தும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எதிரே வந்த ஒரு பெரியவரிடம் தனது பெற்றோரைப் பற்றி விசாரித்தான். ரஞ்சித்தை அடையாளம் கண்டுகொண்ட பெரியவர் ''அட தம்பி நீயே அப்பு ராசா உன்ர அம்மா அப்பா அவை எல்லாம் இங்கே நடந்த கலவரத்தில அகப்பட்டு எப்பவோ மண்ணோடு மண்ணாப் போட்டினம்'' என்றார். ரஞ்சித் அழுதான். அவன் தனது பவளக்கொடி, மாமா, மாமி பற்றி பெரியவரிடம் விசாரித்தான். அதற்கு அவர் அவர்களைப்பற்றிய எந்த விடயமும் தெரியாது என்று கூறிச் சென்றுவிட்டார்.

ரஞ்சித் ஊர் ஊராக அலைந்து திரிந்து பவளக்கொடியைத் தேடினான். எதிர்பாராமல் பழைய நண்பன் ஒருவனைச் சந்தித்தான். அவன் தனது திருமணத்துக்கு வரும்படி அழைப்பு விடுத்தான்.

திருமண வீட்டில் மணப் பெண்ணைக் கண்டதும் ரஞ்சித் அதிர்ச்சி அடைந்தான். மணப் பெண் வேறு யாருமல்ல. பவளக்கொடியேதான். ரஞ்சித்தின் நண்பனான மாப்பிள்ளை சொன்னான். ''யுத்தத்தில் பவளக்கொடியின் பெற்றோர் இறந்துவிட்டனர். இவள் பார்வையை இழந்துவிட்டாள். எனக்கும் இங்கு வந்த பிறகு உறவு என்று சொல்ல என்ட சொந்த பந்தம் எதுவுமில்லை. அதனால தான் நான் ஒரு அனாதை மடத்துக்குச் சென்று இவளைப் பார்த்த உடனேயே 'இந்தப் பவளக்கொடிக்கு வாழ்க்கை கொடுக்கோணும்' எண்டு நினைச்சு இங்க அழைச்சுட்டு வந்து திருமணம் முடிச்சன்'' என்றான்.

ரஞ்சித்தின் கண்களில் உருண்டு திரண்ட கண்ணீர்த்துளிகள் கரைபுரண்டு ஓடின. மாப்பிள்ளை திடுக்கிட்டவனாக, நீ ஏன் மச்சான் அழுகிறாய்? என்றான்.


அதற்கு ரஞ்சித் ''இல்லை மச்சான். உன்ர பெருந்தன்மையை நினைச்சன். அதுதான் எனக்கு அழுகை வந்திட்டுது.'' என்றான்.

எங்கிருந்தாலும் பவளக்கொடி சந்தோஷமாக வாழட்டும் என்று நினைத்து தனது கால் போன போக்கில் நடைப்பிணமாக ரஞ்சித் சென்றுகொண்டிருந்தான்.

# ச்சீய்க்




# ஐடியா



செல்போனாகவும் பாவிக்கலாம் - றபர் பான்டை கொழுவி எதிரே வரும் பெண்ணுக்கு அம்பு விடவும் பாவிக்கலாம்.....

# விந்தை உலகம்

உலக சாதனை செய்வது என்பது பலருக்கு ஒரு பைத்தியம் போன்றது. ஏதாவது ஒரு காரியத்தை செய்து (அது படு பைத்தியக்காரத் தனமாக இருந்தால் கூட பரவாயில்லை) உலக சாதனையாளர் பட்டியலில் தங்களது பெயரையும் பதித்துக் கொள்ள வேண்டும் என்று தவியாகத் தவிப்பார்கள்.



அதேபோல் ஒரு ஆசை மெடிட்ரேரியன் பகுதியில் உள்ள கைப்பசில் என்ற தீவிலே உள்ள இங்கிலாந்துப் பெண்களுக்கும் எழுந்துள்ளது.

இதற்காக இவர்கள் தெரிவு செய்துள்ள சாதனை முறை விநோதமானது. அதாவது பெண்கள் அணியும் மார்புக் கச்சைகள் (பிரா) 90 ஆயிரத்தைத் திரட்டி அவைகளை சங்கிலித் தொடர்போல் இணைக்க திட்டமிட்டுள்ளனர். 10 மாத கால அவகாசத்தில் இந்த சங்கிலித் தொடரை ஏற்படுத்தி சாதனையை ஏற்படுத்த இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஏற்கனவே சிங்கப்பூரில் 79 ஆயிரம் மார்புக் கச்சைகள் மூலம் ஒரு சங்கிலித் தொடர் இணைக்கப்பட்டு உலக சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அதனை முறியடிக்கவே இந்த புதிய முயற்சியில் இவர்கள் இறங்கியுள்ளனர். இதற்காக, பாவித்து பயனற்றுப்போன மார்புக் கச்சைகளை அதிக எண்ணிக்கையில் தந்து உதவும்படி பெண்களிடம் கோரிக்கையும் விடுத்திருக்கிறார்கள்.

ஏன் இந்த மார்புக் கச்சை சங்கிலிச் சாதனை என்றுகேட்கிறீர்களா? பெண்களுக்கு ஏற்படும் மார்பு புற்று நோய்த் தடுப்பு ஆராய்ச்சிக்காக நிதி திரட்டவும் - மார்பக புற்று நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவுமே இந்த சாதனையில் அவர்கள் குதித்துள்ளனர்.

அது சரி இதனைக் கேள்விப்பட்டதும் தமது உறுப்பில் ஏற்படும் கோளாறுகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு ஆண்களும் கழட்டிக் கொண்டு கிளம்பாமல் இருந்தால் சரி.

# சத்தமில்லாத சிரிப்பு...




இவர் எப்ப தண்ணி ஊற்றி - இது எப்ப வளர்ந்து - இவர் எப்ப தூக்கில தொங்கி......

# நெட் கற்பனை



கம்பியூட்டரை கண்டுபிடிப்பதற்கு முன்னர் இப்படித்தான் ரி.வியை மொனிட்டராகவும் ரைப்ரைட்டரை கீ போர்ட் ஆகவும் பிறின்டராகவும் பாவித்திருப்பார்களோ.....?

# நெட் குறும்பு



# இன்ஹேலர் பாவனையும் ஆஸ்துமா நோயாளிகளும்

கேள்வி:- ஆண். வயது 28. சிறுவயதிலிருந்தே ஆஸ்துமா Asthma வியாதியால் அவஸ்தைப்படுகிறேன். இந்த வியாதியைக் குணமாக்க முடியாது. ஆனால் மருந்துகளோடு சுகமான வாழ்க்கையை நடத்தலாம் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். சமீபத்தில் கொழும்பு வந்து ஒரு சுவாச நோய் விசேட நிபுணரைச் சந்தித்தபோது அவர் மாத்திரைகளுக்குப் பதில் உறிஞ்சும் மாத்திரை உபகரணத்தை (Inhaler) உபயோகிக்க ஆலோசனை தந்தார். அதனை உபயோகித்தால் பலன் கிடைக்கிறது. ஆனால் ஊரில் உள்ளவர்கள் இந்த வருத்தம் உறிஞ்சும் மாத்திரைகளுக்கு பழக்கமாகிவிடும், பின்னால் இவை இல்லாமல் வருத்தம் தீராது என்று பயமுறுத்துகின்றார்கள். உங்கள் ஆலோசனையை வேண்டுகிறேன்.

பதில்:- ஆஸ்துமா, தொய்வு, இளைப்பு என்று பல பெயர்களால் அழைக்கப்படும் Bronchial Asthma நோய் இலகுவில் குணமாக்க முடியாத ஒன்றுதான்.

பரம்பரையாக வரும் நோய் என்றும் இது கருதப்படுகிறது. குணமாக்க முடியாத கன்ம நோய் என்று ஆயுள்வேத மருத்துவத்தில் கூறப்படுகின்றது.


ஆனால் சரியான சிகிச்சை முறையையும் வாழ்க்கை முறையையும் பின்பற்றினால் ஆஸ்துமா நோயோடு நீண்ட நாட்கள் கஷ்டப்படாமல் வாழலாம்.

எனக்குத் தெரிந்த பெரிய மனிதர்கள், டாக்டர்கள், விஞ்ஞானிகள் என்று பலர் இந்த நோயுடன் நீண்டகாலம் சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அடுத்ததாக Inhalers எனப்படும் ஆஸ்துமாக்குரிய மாத்திரைகளை உறிஞ்சும் சிகிச்சை, தற்போதுள்ள நன்கு பயனளிக்கக்கூடிய சிகிச்சை முறையாகும்.

ஒரு மருந்தை நாம் சாப்பிடும்போது அது குடலில் இருந்து இரத்தத்தில் கலந்து இரத்தம் மூலம், நாம் எந்த உறுப்பில் உள்ள நோய்க்கு மருந்தாக எடுத்துள்ளோமோ அந்த உறுப்புக்குச் சென்று வேலை செய்வது மட்டுமல்லாமல் அந்த மருந்தே தேவைப்படாத மற்ற உறுப்புகள் மேலும் பகுதிகள் மேலும் வேலை செய்கின்றது. மருந்தின் வேண்டப்படாத செயல்பாடு – பக்க விளைவு (Side effects) என்று கூறப்படுகிறது. இந்தப் பக்க விளைவு அநேகமான வேளைகளில் இருக்கின்ற நோயை விட பயங்கரமான சுகநலக் குறைவை தரக்கூடியது.

இப்படியான பயங்கர விளைவுள்ள ஒரு மருந்து Corticosteroids எனப்படும் ஹார்மோன் சம்பந்தப்பட்ட இரசாயனமாகும். அநேகமாக இந்த வகை மருந்துகள் Prednisolone, Dexamethasone என்ற பெயர்களில் ஆஸ்துமா நோய்க்கு கொடுக்கப்படுகின்றன. ஆஸ்துமா நோயைப் பொறுத்தமட்டில் இந்த வகை மருந்துகளை ஒரு உயிர் காக்கக்கூடிய கைகண்ட மருந்துகள் என்று கூடக் கூறலாம். ஆனால் இந்த மருந்துகளின் பக்க விளைவுகளோ படுபயங்கரமானவை. அவற்றில் முக்கியமானவை நீரிழிவு (Diabetes), எலும்பு நீர்த்துப்போதல் (Osteoporosis), கண்புரைநோய் என்கின்ற Cataract (கண்களில் பூ விழுதல்) என்பவை.

ஆஸ்துமா நோய்க்கு இந்த மருந்துகளை நீண்டகாலம் உபயோகிக்கும்போது இந்த பக்க விளைவுகள் கட்டாயம் ஏற்படுகின்றன. இதனைப் போன்றே ஆஸ்துமா நோய்க்கு உபயோகமாகும் Salbutamol (Ventolin) Turbutaline (Bricanyl) போன்ற மருந்துகள் கூட ஆஸ்துமா நோயை அடக்கி கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும் அதன் பக்கவிளைவுகள் இருதயம் மற்றும் உடல் செயற்பாடுகளைத் தாக்கக் கூடியவை. எனவே இந்த ஆஸ்துமா நோயாளர்களின் உயிர் காக்கும் மருந்துகளை – குழிசைகளாக விழுங்கி ஊசி மருந்துகளாக ஏற்றி பாரிய பக்க விளைவுகளைத் தராமல் நேரடியாக இந்த மருந்துகள் செயற்பட வேண்டிய நுரையீரலுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாகச் செய்யும் வகையில் உருவாகியதே Inhalers என்கின்ற உறிஞ்சிகள்.



இந்த உறிஞ்சி சிகிச்சை முறை, ஆஸ்துமா வியாதிக்காரர்கள் மருந்துகளை எடுக்கும்போது – எங்கே இந்த மருந்துகள் செயற்படவேண்டுமோ, அந்த நுரையீரலில் நேரடியாக இவற்றின் தாக்கம் ஏற்படுகிறது. இதனால் மருந்துகள் காலதாமதம் இன்றி உடனடியாக வேலை செய்ய ஆரம்பிப்பதால் நோயாளி விரைவாக நிவாரணம் பெறும் நிலை ஏற்படுகிறது. அத்துடன் இந்த மருந்துகள் நுரையீரலில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தி அங்கிருந்து இரத்தோட்டத்துள் செல்லும் நிலை தவிர்க்கப்படுகிறது.

மேற்கூறிய மூன்று காரணங்களின் நிமித்தம் இன்று உறிஞ்சிகள் ஆஸ்துமா சிகிச்சையில் பிரதான இடம்வகிக்கின்றன. எந்த மாத்திரை மருந்துகளை இதுவரை ஆஸ்துமா நோயாளி உபயோகித்து வந்தாரோ அதே மருந்துகள் தான் உறிஞ்சிகள் மூலம் உறிஞ்சப்படுவதால் இந்தப் பழக்கத்துக்கு அடிமையாகும் நிலை எப்படி ஏற்படும்? எனவே Addict ஆகிவிடுவோமோ என்ற எதுவித பயமும் இல்லாமல் உறிஞ்சிகளை உபயோகிக்கலாம்.

ஆனால் ஒரே ஒரு பிரச்சினை தான். இந்த உறிஞ்சிகளில் உபயோகிக்கப்படும் மாத்திரைகள் சற்று விலை அதிகமானவை. ஆனால் சந்தைப்படுத்தல் விதியின் (Marketing principle)படி தேவை பெருகும்போது உற்பத்தி அதிகமாகும். அதனால் இவற்றின் விலைகளும் குறையும். அந்தப் பொன்னான நாள் வெகு தூரத்தில் இல்லை. எனவே எதுவித பயமும் இன்றி Inhalers உபயோகிக்கலாம்.

கேள்வி:- ஆண். திருமணமாகி 5 வருடங்களின் பின்னர் ஒரு குழந்தை பிறந்தது. தற்பொழுது அந்தக் குழந்தைக்கு வயது 14. எனது மனைவிக்கு இன்னொரு குழந்தை பெற ஆசை. ஆனால் எவ்வளவு முயன்றும் வைத்தியம் பார்த்தும் கோவில்களுக்குச் சென்றும் ஒருவித பலனும் தெரியவில்லை. சில மருத்துவர்கள் மாத்திரை தந்தார்கள். அதனாலும் பலன் ஏற்படவில்லை. மனைவிக்கு மாதவிலக்கு ஏற்பட்டாலும் இரண்டு நாட்கள் தான் இருக்கும். குழந்தை கிடைக்க வேண்டும் என்பதற்காக மாதவிலக்குக்காலங்களில்கூட உடலுறவு கொள்வோம். உடலுறவு முடிந்தவுடன் விந்து பெண்ணுறுப்பை விட்டு வெளியேறிவிடுகிறது. எமக்குக் குழந்தை கிடைக்காததற்கு இதுதான் காரணமா? எமக்கு இன்னொரு குழந்தைப் பாக்கியம் கிட்டுமா?


பதில்:- உங்கள் வினாவுக்கு பதில் அளிக்க முக்கியமான ஒரு விடயம் தேவை. உங்கள் மனைவியின் வயது. உங்கள் மனைவி 40 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பின் அவருக்கு Menopause என்கின்ற மாதவிலக்கு நிற்கும் பருவம் ஆரம்பித்திருக்கக் கூடும். இந்தப் பருவத்தின் ஆரம்பத்தில் மாதவிலக்குக் குறைவாகப் போகலாம் அல்லது சாதாரணமாகப் போகலாம் ஆனால் சூலகத்திலிருந்து கருத்தரிக்க ஏற்ற முட்டைகள் உற்பத்தியாவது நின்று போயிருக்கும். இதனால் குழந்தைக்கு கரு தங்குவது என்பது கஷ்டம்.

எனவே முதலில் உங்கள் மனைவிக்கு கருவளம் உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். இதற்கு நீங்கள் வீட்டில் செய்யக் கூடிய பரிசோதனை ஒன்று உள்ளது. ஒரு Thermometer உஷ்ணமானியை வாங்கி மாதவிலக்கின் பின்னர் தினம் காலையில் எழுந்தவுடன் மனைவியின் உடல்வெப்ப நிலையைக் குறித்துவரவும். சூலகத்தில் இருந்து முட்டை வெளிப்படும் தினத்திலிருந்து மனைவியின் உடல் வெப்ப நிலை ஒரு டிகிரி வரை அதிகரிக்கும். இப்படி அதிகரித்தால் அவருக்குக் கருவளம் உள்ளது என்று அறிந்துகொள்ளலாம். இப்படி தொடர்ந்து மூன்று மாதவிலக்கு வட்டங்களுக்குச் செய்து வந்து சூலகத்திலிருந்து முட்டை வெளிவரும் தினங்களை ஓரளவு சரியாக அறிந்துகொள்ளலாம்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்  
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி  
இலவச மருத்துவ ஆலோசனை  
'சுடர் ஒளி'  
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை  
கொழும்பு - 14

முட்டை வெளியேறிய தினத்திலிருந்து அடுத்த ஐந்து நாட்களுக்குள் உடலுறவு கொண்டால் உங்கள் விந்தணுக்கள் முட்டையினைக் கருவுறச் செய்வது மிகசாத்தியம். அதைவிடுத்து முட்டாள்தனமாக கருவுறாத முட்டையினால் – ஏற்படும் மாதவிலக்கு காலங்களில் உறவு கொள்வதால் எதுவித பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. அடுத்தது மாத விலக்குக் காலங்களில் உறவு கொள்வது சுத்தம், சுகாதாரத்துக்காக தவிர்க்கப்பட வேண்டியது என்று மருத்துவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

மேலும் பெண் உறுப்புகளின் அமைப்பினால் சில பெண்களின் கருப்பை பின் வளைந்து இருக்கும். இதனை Retroverted uterus என்று கூறுவர். இப்படியான பெண்களுக்கு உடலுறவின் பின்னர் விந்து வெளியேறுவதுண்டு. இவர்கள் உடலுறவின் பின்னர் முகம் குப்புறப்படுத்தால் இந்த வெளியேற்றம் தடைப்படும்.



கருவுறுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

அத்துடன் முன்னர் உங்களிருவருக்கும் குழந்தை ஒன்று கிடைத்திருப்பதால் நீங்கள் இருவரும் கருவளம் உள்ள தம்பதிகள் என்பது நிரூபணமாகின்றது. எனவே உங்களுக்கு இன்னொரு குழந்தை கிடைக்க வாய்ப்பு உண்டு.

# இயற்கை ஆரோக்கியம்

நீங்கள் அன்றாடம் உண்ணும் பொருட்கள் எந்தெந்த வகையில் உங்களுக்கு ஆரோக்கியத்தைத் தருகின்றன தெரியுமா?

### பழங்கள்

1. அப்பிள்:- கொலஸ்ட்ரோலைக் குறைக்கிறது. புற்றுநோய்க்கு எதிராகப் போராடுகிறது. நார்ச்சத்து அதிகம் என்பதால் மலச்சிக்கலை தவிர்க்கிறது.

2. வாழைப்பழம்:- 'அன்டி பயடிக்' வேலை செய்கிறது. அமிலச்சுரப்பு மற்றும் அல்சர் பாதிப்பிலிருந்து, வயிற்றைக் காக்கிறது. பொட்டாசியம் அதிகம் உள்ளதால் உயர் இரத்த அழுத்தத்தைச் சீராக்குகிறது.

3. திராட்சை:- அடிக்கடி திராட்சை சாப்பிடுவோர்களுக்கு புற்றுநோய் வரும் வாய்ப்பே கிடையாதாம்.

4. வத்தகப்பழம்:- இரத்தக் கட்டிகளை சரியாக்கக்கூடியது. கொலஸ்ட்ரோல் சேர்வதைத் தவிர்க்கும்.

5. ஆரஞ்சு:- வயிறு மற்றும் மார்பகப் புற்றுநோய் வரும் வாய்ப்புகளை பெருமளவில் குறைக்கக்கூடியது. ஆஸ்துமா வராமல் காக்கும். பல் ஈறுகளில் நோய் வராமல் காக்கும். விட்டமின் 'சி' சத்து நிரம்பியது.

### காய்கள்

1. போஞ்சி:- தினம் அரை கப் வேகவைத்த போஞ்சி சாப்பிடுவதால் கொலஸ்ரோல் அளவு பத்து சதவீதம் குறையுமாம். இரத்தத்தில் சர்க்கரையின் அளவையும் ஒழுங்குபடுத்துமாம்.

2. கோலி ஃபிளவர்:- கல்லீரல் மற்றும் மார்பகப் புற்று நோய்க்கு எதிராகப் போராடும் சக்தி கொண்டது.

3. கரட்:- இது மாரடைப்பு, புற்றுநோய், கண்பார்வைக் கோளாறுகளை வரவிடாமல் செய்யும். தினம் ஒரு கப் கரட் சாப்பிடும் பெண்களுக்கு வலிப்பு நோயும், மாரடைப்பு வரும் வாய்ப்புகளும் மிகக் குறைவாம். தீவிரப் புகைப்பழக்கம் இருந்தால் தினம் ஒரு கப் கரட் சாப்பிட புற்றுநோய் வரும் வாய்ப்பு ஐம்பது சதவிகிதம் குறையுமாம்.



4. கத்தரிக்காய்:- கொலஸ்ரோலை குறைக்கிறது. கொழுப்பு அதிகமான உணவுகளை உண்பதால் ஏற்படும் பிற உபாதைகளையும் குறைக்கிறது.

5. வெங்காயம்:- புற்றுநோயைத் தடுக்கக் கூடியது. இரத்தக்கட்டிகளை கரைக்கவும், வைரஸ் மற்றும் பாக்டீரியா தாக்குதல்களில் இருந்து காப்பாற்றவும் உதவுகிறது.

6. தக்காளி:- சிறுநீரகக் கோளாறுகளைச் சரி செய்யக் கூடியது.

7. [illegible]:- பொட்டாசியம் அதிகமுள்ளது. புற்றுநோய் வராமல் நம்மை காக்கும் சக்தி படைத்தது.

# ஜனவரியில் திருமணம்



-சோனியா அகர்வால்-

கட்டைப் பிரம்மச்சாரியாகவே காலத்தை ஓட்டிவிடுவார் என்று கிசுகிசுக்கப்பட்ட செல்வராகவனின் வாழ்க்கையில் கல்யாண மேளத்திற்கு வேலை வந்தாச்சு. ஜனவரி 6 ஆம் திகதி செல்வராகவனுக்கு டும் டும் டும்மாம்!

கடந்த சில தினங்களுக்கு முன் பத்திரிகை ஒன்றிக்கு பேட்டியளித்த செல்வராகவனின் அப்பா கஸ்தூரிராஜா, சோனியா எங்க குடும்பத்தின் இரண்டாவது மருமகள். ஜனவரிக்குள் ஒப்புக்கொண்ட படங்களை முடித்துக் கொடுத்துவிட்டு திருமணத்திற்கு தயாராகி விடுவார் என்று கூறியிருந்தார். திருமணத்தை தள்ளி போட்டுக் கொண்டே வந்த இருவரும், தற்போது திருமணத்திற்கு நாள் குறிக்க சம்மதம் சொல்லி விட்டார்களாம். ஏன் இப்படி திடுதிடுப்பென்று சம்மதம் சொன்னார்கள்?

கடந்த சில வாரங்களுக்கு முன் சென்னையில் உள்ள பிரபல நட்சத்திர ஹோட்டல் ஒன்றிற்கு சென்றது இந்த ஜோடி. அங்கு மிதமிஞ்சிய போதையை ஏற்றிக் கொண்ட சோனியா மயங்கி விழ, வரவேற்பறையிலேயே போதையை தெளிய வைக்க முயன்றார்கள் ஹோட்டல் ஊழியர்கள். இந்தச் செய்தி மெல்ல கசிந்து மீடியாக்களில் பரவ ஆரம்பித்தது. கஸ்தூரிராஜாவின் வருங்கால மருமகள் இப்படி அசிங்கப்படுவதை விரும்பாத ரஜினி இருவரையும் அழைத்து சீக்கிரம் திருமணம் செய்து கொள்ள சொல்லி ஆலோசனை வழங்கினாராம். இதைத் தொடர்ந்துதான் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள் இருவரும்.

தற்போது சோனியா வசம் உள்ள படங்கள் 'ஒரு நாள் ஒரு கனவு', 'புதுப்பேட்டை', 'ஒரு கல்லூரியின் கதை'.

# சினி பிட்ஸ்

• தமிழில் ரஜினியுடனும், மலையாளத்தில் மம்முட்டியுடனும் ஜோடிசேர்ந்த நயன்தாரா, தெலுங்கில் சிரஞ்சீவியுடனும் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

• தமிழில் 'மதராஸி' என்ற பெயரில் அர்ஜுன் இயக்கும் இப்படத்தில் தெலுங்கு நடிகர் ஜெகபதி பாபு நடிக்கிறார். இந்த படம் தெலுங்கிலும் தயாராகிறது.

• சதாவுக்கு போன் செய்தால் அதை அவருடைய அப்பாதான் எடுத்துப் பேசுகிறார்.

• பருத்தி வீரன் படத்தின் நாயகன் கார்த்தி அவரது அப்பா சிவகுமாரின் ஆலோசனைப்படி தமிழை தெளிவாக பேச கற்று வருகிறார்.

• 'இங்கிலீஷ்காரன்' படத்தில் விடிவேலுவின் பெயர் தீப்பொறி ஆறுமுகமாம்.

• 2005 படத்தில் கலாபவன் மணி மும்பை தாதாவாக நடிக்கிறார். அவருக்கு பாத்திரத்தின் பெயர் வரதராஜப் பெருமாள்.

• 'அ.... ஆ.....' படநாயகி நிலாவுக்கு தெலுங்கில் பங்காரு என்ற படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்து உள்ளது.

• அறிந்தும் அறியாமலும் படத்தில் கமெடியில் கலக்கிய கிருஷ்ணாவுக்கு தாஸ் படத்தில் முஸ்லிம் வேடம்.

• சிம்புவை செல்போனில் தொடர்புகொண்டால் அவர் ஏற்கனவே பதிவுசெய்துவைத்த அவரது குரல் ஒலிக்கிறது.

• விஜயகாந் நடித்த பேரரசு முடிந்துவிட்டது. அடுத்த படம் முழுக்க முழுக்க அரசியல் வாசனங்களுடன் தயாராகும் என்கிறார்.

• நடிகை தேவயானியின் கணவர் ராஜகுமாரன் சின்னத்திரைத் தொடரை தயாரிக்க திட்டமிட்டுள்ளார்.

• 'கற்க கசடற' நாயகன் விக்ராந்த் நடிக்கும் அடுத்த பட தொடக்க விழாவை மலேசியாவில் நடத்த முடிவு செய்துள்ளார்.

• 'கலையாத நினைவுகள்' படத்தில் 'ராஜா சின்ன ரோஜா' படத்தில் இடம்பெற்ற சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா என்ற பாடலை ரீமிக்ஸ் செய்து சேர்த்துள்ளனர். இசை சந்தோஷ்போஸ்.

# தனுஜா மீதும்

தலைப்புச் செய்தியாகியிருக்கிறார் தனுஜா. அனாமிகா ஸ்டைலில் இன்னொரு வழக்கு இவர் மீது. வழக்கு தொடர்ந்திருப்பவர் 'ரத்னா', 'முள்ளில் ரோஜா' படங்களின் தயாரிப்பாளர் குல்தஜா.

வழக்கின் கதைச்சுருக்கம் இதுதான்....



-தனுஜா-

குல்தஜாவிடம் சென்ற வருடம் தனுஜாவை அறிமுகப்படுத்தியிருக்கிறார் நடிகரும் இயக்குனருமான பாபுகணேஷ் (இந்த பாபு கணேஷ், மும்தாஜ் சரியான 'ஒத்துழைப்பு' தரவில்லையென அவருக்குப்போட்டியாக கும்தாஜை கோடம்பாக்கத்துக்கு கொண்டு வந்தவர்)

குல்தஜாவிடம் தனுஜா தன்னை சட்டக் கல்லூரி மாணவி என்றும், மிஸ். மெட்ராஸ் என்றும் கூறி மொட்டையடித்திருக்கிறார். டான்ஸ் மாஸ்டர் லாரன்ஸை எனக்குத் தெரியும். அவர் மூலமாக விஜய்யும் எனக்குப் பழக்கம். விஜய்யின் கால்ஷீட்டை என்னால் வாங்கித் தரமுடியும் என தனுஜா கூற வழுக்கிவிட்டார் குல்தஜா.

இவர் கூறுகிறபடி இந்த உதவி செய்ததற்கு தனுஜாவிடம் இவர் இழந்த பணம் பத்துலட்சங்கள்.

சட்டக்கல்லூரி விழாவில் தலைமை தாங்க வரவேண்டும் என வாங்கியது 50,000. செல்போனுக்கு செலவானது 24, 000. உடைவாங்கியது 25,000. உடல் 'ஜம்'மென்று வைக்க 'ஜிம்'முக்...

நான்கு ...
டுக்கு நன்...
ஆக மொ...
காட்டுகிற...

ரம் தெரிந்...
ஏமாந்து ...
படுத்துகிற...
உள்ளா, 'த...
வீழ்த்தினா...
றாக தங்கி...

வழக்கு...
ஆகவே இத்...

சக நடிகர்கள் வயிற்றில் சாம்பிராணி போடும் செய்தி.... சூப்பர்ஸ்டாரை எட்டிப் பிடிக்கிறார் விஜய்.

எப்படி? இவரும் இமயமலைக்கு கிளம்பி விட்டாரா? நக்கல் செய்யும் நண்பர்களே.. விஷயம் அதுவல்ல.

ரஜினியின் 'சந்திரமுகி' மதுரை ஏரியாவில் விலை போன தொகை இரண்டரைக் கோடி.. விஜயின் 'சிவகாசி' எட்டிப்பிடித்தது இரண்டு கோடி.. அப்படியும் ஐம்பது லட்சம் பின்னால் தானே என்கிறீர்களா?

சரிதான்! ஆனால், விஜய் அடுத்து நடிக்கப் போகும் படத்திற்கான பூஜை போடுவதற்கு முன்னரே தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா என சகல பகுதிகளிலும் விற்றுத் தீர்ந்துவிட்டது என்று ஒரு செய்தி கசிந்திருக்கிறது.

பெட்ரோல் தீர்ந்த பியட் காராக ஊர்ந்து கொண்டிருந்த விஜய்யின் மார்க்கெட்டில் ஜெட் என்ஜின் பொருத்திய படம் 'திருமலை'. விஜய்யே இதை பல முறை பேட்டிகளில் ஒத்துக்கொண்டுள்ளார். அந்தப் படத்தின் இயக்குநர் ரமணாவுக்காக இன்னொரு படம் நடித்துக்கொடுக்கப் போகிறார் விஜய். ரமணாவின் கதையை கேட்ட எஸ்.ஏ.சந்திரசேகரன் படத்தை தானே தயாரிக்க முன்வந்திருக்கிறார்.

சரி, படத்தின் பெயர் என்ன? கதாநாயகி யார்? தொழில்நுட்பவியலாளர்கள்? அட, கதையாவது என்ன?

எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில், தெரியாது! என்பதுதான்.

இப்படத்தின் உரிமையைதான் ரவுண்ட் கட்டி விநியோகஸ்தர்கள் வாங்கியிருப்பதாக செய்தி கிளம்பியிருக்கிறது.

# அடுத்த படத்திற்கு தயாராகும் விக்ரம்

சேது, பிதாமகன், தூள்,சாமி, தில், காசி போன்ற படங்களில் மாறுபட்ட வேடங்களில் நடித்து தனது திறமையை நிலைநாட்டியுள்ள விக்ரம், படத்துக்குப் படம் புதிய கெட்—அப்பில் வந்து எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வருகிறார். ஒரு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு விக்ரம் நடித்து வெளியாக இருக்கும் அந்நியன் படம் மீண்டும் விக்ரம் பற்றிய புதிய பரிணாமத்தை எதிர்நோக்க வைத்திருக்கிறது. விக்ரம் மனநிலை எப்படி இருக்கிறது. அவரே கூறுகிறார். நான் எந்த சூழ்நிலையிலும் என்னை ஒரு ஹீரோவாக நினைத்துக் கொள்வதில்லை. எனது முன் உதாரணமாக யாரையும் நினைக்கவும் இல்லை. நான் சினிமா உலகில் நுழைவதற்கு எனது மனத்தைரியம்தான் உதவியது. முதலில் நான் ஹீரோவாக நடிப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை.

சேதுவில் எனது நடிப்பை பார்த்த பிறகுதான் டைரக்டர் ஷங்கர் என்னை அணுகினார். அதேநேரம் மணிரத்னமும் அவரது 'பாம்பே' படத்துக்காக என்னை அழைத்து ஸ்டில் எடுத்தார். ஆனால் அந்த படத்துக்கு நான் பொருத்தம் இல்லை என்பதால் அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. நான் உணர்ச்சியையும், ஆக்ஷனையும் காட்டி நடிக்கும் ஹீரோ. இளம் பெண்கள் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் கவர்ச்சியான நாயகன் அல்ல. எனவேதான் எனக்கு பொருத்தமான பாத்திரத்தை தேர்வு செய்து நடிக்கிறேன்.

அந்நியன் படம் வெளியானதும் எனது அடுத்த படம் தீபாவளிக்கு ரிலீஸ் ஆகும். இதற்கு நான் தயாராகிவிட்டேன்.

# சிவாஜி பிலிம்ஸி... படத்தில் கமல் ...

12 ஆண்டுகளுக்குப் பிறகு சிவாஜி பிலிம்ஸ் சினிமா ... பேறுதான் சந்திரமுகி. சிவாஜி பிலிம்ஸ் இனி வருடத்து... வேண்டும் என ரஜினிகாந்த் கோரிக்கை விடுத்தார். ரஜினி...

சிவாஜி பிலிம்ஸ் அடுத்த படத்துக்கான பேச்சுவார்த்தை... படத்தின் ஹீரோ கமல்ஹாசன். சிவாஜி பிலிம்ஸிலிரு... தயக்கமும் காட்டாமல் கமல் ஒப்புக்கொள்... என்பது ... பிரபு கேட்டதும் கமல் ஒத்துக்கொண்டுள்ள...

இப்போது கௌதம் இயக்கத்தில் வே...டையாடு விளை... கமல். இப்படம் முடிந்ததும் தனது சொந்த பேனரில் ஒ... தெரிவித்தார். இப்போது அந்த திட்டத்தை மாற்றிக்கொண்டு... படத்தில் நடித்துவிட்டு, தனது சொந்தப் படத்தை எடுக்க உ... நடிக்கும் படத்தை இயக்கப்போவது பெரும்பாலும் கே.எ... எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திரமுகி போல் கமெடிக்கு முக்கியத்துவம் அளித்து... இயக்கும் வாய்ப்பு கே.எஸ்.ரவிக்குமாருக்கு கிடைத்தால் இ... யாடு விளையாடும் ஆகிய இரு படங்களையும் ஒரே நேர... தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



'ஆணை'
-அர்ஜுன், நமிதா-

# ஆன்மீகவாதியா...

துணிச்சலுக்கு பெயர் போனவர் எம்.ஆர். ராதா. அதுவும் ஆன்மீகத்தை வாரிவிடும்... ரது பேச்சுக்கள் ஒரு தனி ரகம். மேடையில் எம்.ஆர்.ராதா, கடவுள் என்று தொடங்குவார். அதுபோதும் ஜனங்களுக்கு. கடவுளைப் பற்றி பேசாதே என்று காட்டுக் கூச்சல் கிளப்புவார்கள். எம்.ஆர். ராதா பொறுமையுடன் தொடர்ந்து பேசுவார். ''நான் கடவுள் இல்லை என்று சொன்னால் கடவுள் இல்லாமல் போய்விடுவாரா? அப்படி போய் விடுவாரென்றால் அவர் என்ன பெரிய கடவுள்'' என்ற ரீதியில் தொடரும் அவர் பேச்சு.

சீர்திருத்தம் பேசுகிறவர்களுக்கு திருநெல்வேலி இருட்டுகடை அல்வா போன்றது ஆன்மீகம். அதனால்தான் காமெடியன்கள் கையில் கடவுள் படாதபாடு படுகிறார்.

சமீபகாலங்களில் அப்படி பிரபலமானவர் விவேக். மூடநம்பிக்கைகளை சாடும் இவரது சீர்திருத்த காமெடி இவருக்கு 'ஜனங்களின் கலைஞன்' என்ற பட்டத்தை பெற்றுத்தந்தது. இலவச இணைப்பு 'சின்ன கலைவாணர்' பட்டம். எம்.ஆர்.ராதாவைப் போல் செய்து இவர் பேசிய வசனங்கள் வெகுவாக குஷிப்படுத்தியவை.

ஆனால் நிஜத்தில் எம்.ஆர். ராதாவாக இருப்பது அத்தனை சுலபமல்ல என்பதை புரிந்து கொண்டிருக்கிறார் விவேக். திரையில் வாஸ்துவை கிண்டல் செய்துவிட்டு அதே வாஸ்து சாஸ்திரப்படி. தன் வீட்டைக் கட்டிக் கொண்டார் என்றொரு புகாரும் இவர்மீது உண்டு.

இந்நிலையில் ''நான்' ஆன்மீக

வாதிதா...
விடுத்தி...
போதோ...
காரண கா...

தனது...
விளக்கம்...
எதிரியல்...



# மீதும் வழக்கு

ார் தனுஜா.
ஒக்கு இவர்
ளா', 'முன்
ாளர் குல்

'ஜிம்'முக்கான செலவு 26,000. கார் வாங்க நான்கு லட்சம். இது தவிர விஜய் கால்ஷீட்டுக்கு நன்கொடையாக கொடுத்தது 5 லட்சம். ஆக மொத்தம் பத்து விரல்களை விரித்துக் காட்டுகிறார் குல்தஜா.



ஜா-

புகாரின் கடைசிப்பகுதிதான் வில்லங்கமானது. ''பணத்தைத் திருப்பிக் கேட்டால், எனக்கு மந்திரியை தெரியும் என மிரட்டுகிறார்'' என்று கண்ணீர் விடுகிறார் குல்தஜா. தனுஜாவும், ''ஆமாம், நான் அந்த அமைச்சரின் ஆசைநாயகிதான்'' என பேட்டி கொடுக்கிறார்.

இதில்கவனிக்கப்பட வேண்டிய விஷயம்பத்துவருடம் தொழிலில் இருக்கும்ஒரு தயாரிப்பாளர் சினிமாவில் பால் போச்சி பேபி அளவுக்கே விவரம் தெரிந்த அறிமுக நடிகையிடம் இப்படியா ஏமாந்து போவார்? இந்த சந்தேகத்தை வலுப்படுத்துகிறது குல்தஜாவின் ஸ்டேமென்டில் உள்ள, 'தனுஜா தன் வலையில் என்னை வீழ்த்தினார். நட்சத்திர ஹோட்டலில் ஒன்றாக தங்கினோம்' போன்ற வரிகள்.

ர.
சய்ததற்கு
ந்துலட்சங்
மை தாங்க
00. செல
டைவாங்
வைக்க

வழக்கு இப்போது இருப்பது கோர்ட்டில். ஆகவே இத்துடன் முடித்துக் கொள்வதே அழகு.

# லிம்ஸின் அடுத்த கமல் நடிக்கிறார்

ாஜி பிலிம்ஸ் சினிமா தயாரிப்பில் ஈடுபட்டது. அதான் பெறு
லிம்ஸ் இனி வருடத்துக்கு இரண்டு படங்களைத் தயாரிக்க
கை விடுத்தார். ரஜினியின் ஆசை நிறைவேறப்போகிறது.
க்கான பேச்சுவார்த்தை விரைவில் தொடங்க உள்ளது. இப்
வாஜி [illegible]லிம்ஸிலிருந்து நடிக்க அழைத்தால் எந்தவிதத்
காள்[illegible]ர் என்பது பலரும் அறிந்தது. எனவே ராம்குமார்,
டுள்ள[illegible]
ல் வே[illegible]டயாடு விளையாடு படத்தில் நடித்து வருகிறார்
சொந்த பேனரில் ஒரு படம் இயக்க இருப்பதாக முன்பு
தை மாற்றிக்கொண்டுள்ளார். சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கும்
தப் படத்தை எடுக்க உள்ளார். சரி, சிவாஜி பிலிம்ஸில் கமல்
பெரும்பாலும் கே.எஸ்.ரவிக்குமாராக இருக்கலாம் என

க்கியத்துவம் அளித்து எடுக்கப்பட உள்ள இப்படத்தினை
ாருக்கு கிடைத்தால் இவரின் காட்பாதர், கமலின் வேட்டை
ங்களையும் ஒரே நேரத்தில் முடித்துவிட்டு புதிய படத்தை
டுகிறது.

# ாதியாயிட்டேன்!

ர் எம்.ஆர்.
விடும்
டயில் எம்.
வார். அது
றி பேசாதே
ர். எம்.ஆர்.
பேசுவார்.
ன்னல் கட
படி போய்
கடவுள்''

திருநெல்
ஒது ஆன்

வாதிதான்'' என்று அப்ரூவராக அறிக்கையும் விடுத்திருக்கிறார் விவேக். ஒன்றை மறுக்கும் போதோ அல்லது ஏற்றுக் கொள்ளும் போதோ காரண காரியங்களை விளக்குவதுதானே முறை?

தனது திடீர் மாறுதலுக்கு விவேக் தரும் விளக்கம்.... ''நான் கடவுளைக் கும்பிடுவதற்கு எதிரியல்ல. மைல் கல்லை கடவுளாக்குவதற்குத்தான் எதிரி.'' என்றார்.

சின்னக்கலைவாணர்இப்போது மீண்டும் கமெடி சீன்களில் நடிக்க ஆரம்பித்துள்ளார்.



-விவேக்-



'திருடிய இதயத்தை'
-ரோஹான், சுபா-

# சூப்பர் ஸ்டாரின் இடம் விஜய்க்கு!



-விக்ரம்-

சமீப காலமாக சூப்பர் ஸ்டார் நாற்காலிக்கு போட்டிபோடும் நடிகர்களின் நண்டு சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் விக்ரம்.

சமீபத்தில் நடந்த 'கில்லி' விழாவில் பேசிய ரஜினி 'விக்ரமையும் விஜயையும் பார்க்கும் போது அந்தக் காலத்தில் நானும் கமலும் இருந்ததுபோல் உள்ளது'' என்று பேச்சில் ஒரு முடிச்சுப் போட்டு முடித்தார்.

விக்ரம், விஜய் இருவரில் யார் ரஜினி யார் கமல் என்ற முடிச்சை அவிழ்ப்பதற்காக 'அந்நியனை'யும், 'கில்லி'யையும் துரத்தாத பத்திரிகையாளர்களே இல்லை.

'மஜா' படப்பிடிப்பில் இருந்த விக்ரமிடம் தாஜா செய்து கேள்வியை சமர்ப்பித்த போது தயக்கமில்லாமல் பதில் சொன்னார்.

''சூப்பர் ஸ்டார் எதையும் சும்மா சொல்ல மாட்டார். 'கில்லி'விழாவில் எங்களுக்கு அவர் அப்படியொரு சர்டிபிகேட் கொடுப்பார்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. அவர் ஒரு பெரிய நடிகர். தன் மனசில் இருக்கிறதை வெளிப்படையாக பேசுவதே பெரிய விஷயம். எங்க விஷயத்தில் அது நடத்திருக்கு''

அதுசரி சார் உங்கள் இருவரில் ரஜினி யார்?

'விஜய் விஜயாகவும் நான் நானாகவும் இருந்துவிட்டு போறோம்'' என நிறுத்தியவர் கொஞ்சம் யோசித்துவிட்டு, ''விஜய் ரஜினியாக இருக்கட்டும். நான் கமலாக இருக்கிறேன். நான் ரஜினி சாரோட ரசிகன். ஆனால் கமல்தான் என் குரு போதுமா.''

விஜய் சூப்பர் ஸ்டார் ரஜினிபோல கொமடியான படங்களிலும் சிறப்பாக நடிக்கும் திறமை உடையவர். அதேபோல் நான் எனது கெட்—அப்புக்களை மாற்றி நடிக்க வேண்டும் என்பது எனது ஆசை என்று அந்நியன் முடித்தார்.

அவரின் எண்ணம் நிறைவேற எமது வாழ்த்துக்கள்.

# ஜெய் ஆகாஷின் 'கற்றுள்ளவரை'

ஜெய் ஆகாஷ் – பிரணதி நடிக்கும் வித்தியாசமான கதை அம்சம் கொண்ட படம் காற்றுள்ளவரை.

'வைகாசி பொறந்தாச்சு' வெள்ளிவிழாப் படத்தை இயகக்கிய ராதாபாரதி இந்தப் படத்தை இயக்குகிறார். 'காற்றுள்ளவரை' படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் ராதாபிராதி இளைஞர்களை கவரும் வகையில் இளமையான கதையாக மட்டுமின்றி, நகைச்சுஜவ கலந்த ஜனரஞ்சகமான படமாகவும் இந்தப் படத்தை உருவாக்கி இருக்கிறார்.

இன்றைய இளைஞர்களின் தேடலுக்கு தீனி போடும் வகையில் காட்சிக்குக் காட்சி புதுமையான அம்சங்களை புகுத்தி 'காற்றுள்ளவரை' படத்தை இளைஞர்களுக்கான படமாக உருவாக்கி வருகிறார்.

திரையுலகப் பின்னணியில் நடக்கும் புதுமையான காதல் கதை. பிரணதிக்கு இந்தப் படத்தில் பிரபல நடிகை வேடம். நடிகையின் வாழ்க்கையை பின்னணியாகக் கொண்ட கதை என்பதால் படத்தில் இசைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

படத்தின் கதாநாயகனாக ஜெய் ஆகாஷுக்கு இதில் சங்கீத ஆர்வம் கொண்ட இளைஞன் வேடம். சங்கீதத்தில் சாதிக்க விரும்பும் அவரோ சரளமாக பேச்சுவராத திக்குவாய். இசையை விரும்பும் இவர் திக்குவாயாக மாறியது ஏன்? இதற்கான விடை காண வருகிறது 'காற்றுள்ள வரை' படம்.

இந்தப் படத்தில் இன்னொரு கதாநாயகன் தயாரிப்பாளர் சுரேஷ். பிரணதியின் ரசிகராக, அவரை காதலிக்கும் தீவிர ரசிகராக அறிமுகமாகிறார் சுரேஷ். கதையில் திருப்பங்களுக்கு காரணமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் கிச்சாஸ். இப்படத்திற்கு பரணி இசையமைக்கிறார்.

ஜெய் ஆகாஷ் நடித்து தொடர்ச்சியாக வெளிவரும் படங்கள் அனைத்தும் குறுகிய காலமே தாக்குப்பிடிக்கின்றன. எனவே 'காற்றுள்ளவரை' எப்படி போகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# கலக்கப்போகும் கவர்ச்சி மாமி

கவர்ச்சி ரோலா? கண்ணை மூடிக்கொண்டு டயல் செய்கிறார்கள் நமிதா'செல்'லுக்கு. அப்படியொரு கிராக்கி வந்திருக்கிறது அம்மணிக்கு.

பிரஷாந்த் நடிக்கும் தகப்பச் சாமியில் ஒரு கிளாமர் கேரக்டர் வருகிறது. இதில் யாரைப் போடுவது என்ற யோசனைக்கே இடமில்லாமல் முழு மெஜாரிட்டியில் ஜெயித்திருக்கிறார் நமிதா.

ஆனாலும் இந்தப்படத்தில் இவர் நாயகி இல்லையாம். 'காதல்' சந்தியா தான் நாயகி. தமிதா வெறுமனே தியேட்டரில் சூடு கிளப்ப மட்டுமே என்கிறார்கள்.

இதில் பெரிய கூத்து, ''இந்தப் படத்தில் நான் கிளாமரா நடிக்க தடை சொல்லக்கூடாது'' என்று நமிதா கேட்டுக் கொண்டதுதான். இவர்களும் அதற்காக தானே மேடம் உங்களை நடிக்க வைக்கிறோம்'' என்று சொல்ல நமிக்கு முகமெல்லாம் பரவசம்.



## மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

இவர் செய்த தவறுதான் என்ன? ...க்கு வந்த விருந்தினரை உபசரித்து ...வளித்த ஒரே குற்றத்துக்காக கிட்டத் ...ஆண்டுகள் சிறைக் கொடுமைகளை அனுபவித்துவிட்டு, இன்று, 'நீ குற்ற ...வர் போய் வா' - என சொல்லிவிட் ...எல்லாம் முடிந்ததா? வாழ வேண்டிய ...தில் கணவரையும் பிள்ளையையும் ...து நின்ற இவரது அந்த 8 ஆண்டு கால ...க்கையை திருப்பித்தர முடியுமா ...த்தால்? இந்த சிறைவாசம் தாயையே ...யாமல் பிள்ளையை மாற்றியிருக் ...க.... அந்த பிள்ளைப் பாசத்தை மீட்டு ...டியுமா? இழந்த இவர்கள் வாழ்க்கைக் ...ட்டமும் இந்த சமுதாயமும் என்ன பதில் ...போகின்றன. 26 பேருக்கும் தூக்கு ...றவுடன் ராஜீவ் கொலைக்கு பழிவாங்கி ...டதாக கூறினாரே சி.பி.ஐ. அதிகாரி ...ய அதிகாரி. இன்று இந்த 26 பேரும் அவர் ...குடும்பமும், இன்னமும் விசாரணை என்ற ...யரில் துன்புறுத்தப்பட்டவர்கள், உயிரிழந் ...ர் இவர்களுக்காக எல்லாம் யாரை பழி ...ங்குவது?

இதோ இங்கு நிற்கிறாரே ரங்கநாத். அவ ...மனைவியை அவரிடமிருந்து பிரித்து ...ட்டி, விவாகரத்து வாங்கி, ஒரு பொலிஸ் ...திகாரியை அவர் மறு திருமணம் செய்த ...கச் சொல்லி நம்ப வைத்து, ரங்கநாத்துக்கு ...திராக சாட்சி சொல்ல வைத்தார்களே! ...வர்கள் உண்மையில் மனிதர்கள்தானா? ...ன்று தனி மரமாய் நிற்கும்போது இவரது ...ாழ்க்கை சீரழிந்ததற்கு யார் பொறுப்பு?

சி.பி.ஐ. அதிகாரிகள், காவல்துறையினர் ...ன் அப்படி என்றால் துளி அளவும் மனி ...பிமானமற்ற முறையில் நடந்துகொண்ட ...திகாரிகளை என்னவென்று சொல்வது! ...ற்கொடுத்தாலும் சட்டத்தைக் காரணம் ...ட்டி மனித உணர்வுகளை மிதித்த அவர் ...ளை யார் கண்டிப்பது?

நம் தோழர் இரும்பொறையின் தாயார் ...ல்நிலை சரியின்றி மிகவும் மோசமான ...லையில் உயிருக்குப் போராடிக்கொண்டி ...ந்தபோது தன் மகனை காண விரும்பினார். ...னால், இந்த அதிகாரிகள் என்ன ...சான்னார்கள் தெரியுமா?

"இறந்தால்தான் பரோல்தரமுடி ...யும். உடம்பு சரியில்லாதவர்களைப் ...பார்ப்பதற்கெல்லாம் பரோல் தர ...முடியாது."

ஈரமற்ற வார்த்தைகள். இறுதி ...வரை தன் மகனின் முகத்தைப் பார்க் ...காமலேயே அந்தத் தாயும் மாண்டு ...போனார். இறப்பிற்கு சென்று வர வலிய ...வந்து அனுமதி அளித்த அதிகாரிகளிடம் ...தேவையில்லை என மறுத்துவிட்டார் ...தோழர் இரும்பொறை. "உயிரோடு உள்ள ...போது அவரை மகிழ்விக்க முடியாத நான் இறந்த பிறகு போய்ப்பார்த்து என்ன சாதித்து ...விடப் போகிறேன்" - என்று கேட்டு தன் ...துக்கத்தை அடக்கிக்கொண்டார் அவர்.

இது மட்டுமா? நம் சகோதரி நளினிக்கு ...நேர்ந்தது இன்னும் கொடுமையானது.

நளினிக்கு பூந்தமல்லிச் சிறப்பு நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தவுடன், அவரது மகளை இலங்கைக்கு, தன் கணவர் குடும் ...பத்தாரிடம் அனுப்ப முடிவெடுத்தார். இலங்கைக்குச் செல்லும் முன் தன்னைக் காணவந்த மகளைத் தொடவும் அனுமதிக்கவில்லை சிறை அதிகாரிகள். "நீ உன் மகளைக் கொன்று விடுவாய். அதனால் சட்டப்படி அவளை உன் அருகில் அனுமதிக்க முடியாது என" நிர்த்தாட்சண்யமாக மறுத்து விட்டனர் அதிகாரிகள்.

"ஐயா நான் இனிமே எப்ப என் பிள்ளையைப் பார்க்கப் போறேனோ, இல்ல ஒருவேளை நான் பார்க்கமலேயே கூட போயிரலாம். அதனால ஒருதடவை தொட்டுத் தூக்கி உச்சி முகர்ந்துக்கிறேனே. தயவு செஞ்சு அதுக்கு மட்டும் அனுமதி கொடுங்கையா. ஒரே ஒரு முறை ஐயா" - என்று காலைப்பிடித்து கெஞ்சிக்கதறிக் கேட்டபோதும் மனம் இரங்கவில்லை. அந்த அதிகாரிகள் இறுதிவரை தாயையும் மகளையும் தொடவிடாமலேயே செய்துவிட்டனர். அந்தப் பாவிகள்.

இதுதான் சட்டமா? மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத சட்டம் எந்தவகையில் உயர்வானது?

இப்படி ஒரு சட்டத்தின் பெயரால் தங்களின் குரூர ஆசைகளுக்கு வடிகால் தேடிக்கொள்ளும் அதிகாரிகளிடம் இருந்து நமக்கு விடிவு வரப்போவது என்றோ தெரியவில்லை.

"26 பேருக்கும் தாயாய் இருந்து உறுதியுடன் உழைத்த உழைக்கிற இந்த தாயைப் பாருங்கள். மகனோ தூக்குமேடையில். அறிவும் அழகும், குணமும் நிரம்பியிருந்தும் அண்ணன் வரும்வரை திருமணமே வேண்டாமென வாழும் மகள். இந்த துயரங்களெல்லாம் காரணம் நமது கொள்கைப்பிடிப்புத்தானே என்று வெறுக்கவில்லை அவர். தன் குடும்பத்தைக் காக்க எத்தனையோ வழிகளில் சமரசம் செய்துகொண்டு வாழ்ந்திருக்கலாம் அவர். ஆனால், அவர் செய்தது என்ன? இத்தனைக்குப் பிறகும் தமிழ் வழிக் கல்விக்கான பட்டினிப் போராட்டமென்ன, ஈழ ஆதரவு போராட்டங்களென்ன என தமிழ், தமிழர் சார்ந்த எல்லாவற்றிலும் முன்நிற்கும் அவரிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை அநேகம். நாம் வாழும் காலத்திலேயே வாழும் ஒரு வீரத்தாய் என நாம் பெருமைகொள்ளலாம். ஆனால்.... தன் இனத்துக்காக, மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்த ஒரே காரணத்துக்காக ஒரு குடும்பம் பழிவாங்கப்படுமானால், அப்படி சிலகுடும்பங்களைப்



சொன்னவை போக,
இன்னும் அவர் மனதிற்குள்
புதைந்து கிடப்பவை எத்தனையோ?

# தொடரும் தவிப்பு

அறிவுமதியின் கரங்கள் அற்புதத்தை நோக்கி நீண்டன.

"ஆசை ஆசையாய் பெற்று அருமையாய் வளர்த்த மகனின் உயிர் இன்னமும் சட்டத்தின் பிடியில். தன் உள்ளத்தின் வேதனைகளையெல்லாம் மறைத்து, விடுதலையானவர்களின் மகிழ்ச்சியில் பங்கெடுக்கும் அவரின் பெருந்தன்மையைப் பாருங்கள்."

இன உணர்வுடன் வாழ்ந்த ஒரே காரணத்திற்காய் பழிவாங்கப்பட்டு நிற்கிறது அந்தக் குடும்பம். இத்தனை ஆண்டுகளாக சொல்லொன்னா துன்பங்களுக்கு ஆளான போதும், கொண்ட கொள்கைகளை விட்டு விலகாமல் மன உறுதியுடன் நிற்கும் இந்தத் பழிவாங்குவதன் மூலம் இனஉணர்வை அழித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் ஒரு கூட்டமே செயல்படுமானால், அவர்களுக்கு நமது பதில்தான் என்ன? அவர்களது அச்சுறுத்தல்களுக்குப் பயந்து ஒடுங்கப்போகிறோமா அல்லது தளராத இந்த தாயைப்போல் நாமும் தளராது முன்செல்லப் போகிறோமா? சொல்லுங்கள்...."

கேட்டு நிறுத்திய உடனே "முன்செல்வோம்" - என்ற குரல்கள் எங்கும் எழுந்தன.

இப்படி உணர்ச்சியும் எழுச்சியும் நிரம்ப நடந்த சுற்றுப்பயணம் இறுதி நாளை எட்டியது. ஜூலை 28, 1999 அன்று திண்டிவனத்திலிருந்து கிளம்பி செங்கல் பட்டு, காஞ்சிபுரம் வழியாக சென்னை அடைவதாகத்திட்டம்.

> தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.
>
> நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைந்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

செங்கல்பட்டு நோக்கி செல்லும் பயணத்தில் வழியிலேயே அற்புதத்திற்கு பழைய நினைவுகள் வந்துவிட்டன.

முதன் முதலாக மகனை இந்தச் செங்கல்பட்டுச் சிறையில்தானே கைதி உடையில் பார்த்தார்.

அந்தமுறை பூந்தமல்லி சென்று விசாரித்துவிட்டு செங்கல்பட்டுக்கு மாற்றி இருப்பதாக அறிந்து இங்கு வந்து சேருவதற்குள் நேரமாகிவிட்டது. 5 மணிக்கு மேலாகிவிட்டதால் விடமுடியாது என சிறை அதிகாரிகள் மறுத்துவிட்டனர். பின்னர் கெஞ்சி 10 நிமிடம் பார்த்துவிட்டு சென்று விடுகிறேன் என்று கூறி அனுமதி பெற்று உள்ளே சென்றார்.

சிறிது நேரத்தில் வந்த அறிவை பார்த்தவுடன் திகைத்துவிட்டார். வண்ண வண்ண உடைகளில் சிங்காரமாக இருக்க வேண்டிய மகன் இப்படி கைதி உடையில் நிற்கிறானே என்று அவர் மனம் பொருமியது.

தாயின் முக மாற்றத்தை கவனித்த அறிவின் முகமும் வாடியது.

"அம்மா என்னை இப்படி சிறையில் வந்து பார்க்கிறது அவமானமாக இருக்குதாம்மா?.."

பதறிவிட்டார் அற்புதம். "கண்ணு ஏன் இப்படியெல்லாம் பேசுற. அந்த எண்ணத்தையே விட்டுரு. என்றைக்குமே நானோ அப்பாவோ, அன்போ, அருளோ அப்படி நினைக்கவே மாட்டோம்... நீ இப்படியெல்லாம் யோசிச்சு மனச குழப்பிக்காதப்பா" – என்று ஆறுதல் கூறிவிட்டு விடை பெற்றுக் கிளம்பி நேரே சென்னை வழக்கறிஞர் வீட்டுக்குச் சென்றார்.

'விசாரணைக்கைதியாக இருக்கும் போது கைதி உடை கிடையாது' – என்று முன்பொரு முறை அவர் கூறியிருந்தது நினைவுக்கு வந்தது.

அதன் அடிப்படையில் வழக்குப் போட முடியுமா எனக் கேட்டு உடனடியாக வழக்கும் போட்டார். அதன்பிறகே கைதி உடையை மாற்றினர். இப்படி பல வழக்குகள்... அனைவருக்காகவும்...

பூந்தமல்லியில் ஒருமுறை கண்ணாடிக் கூண்டில் வைத்துத்தான் பார்க்க வேண்டும்... இண்டர்கொமில்தான் பேச வேண்டும் என்பதை எதிர்த்து, ஒரு நாளைக்கு 22 மணி நேரம் தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருந்ததை எதிர்த்து, விளையாட்டுப் பொருட்கள் – கரம், செஸ் போன்றவை கொடுக்க மறுத்ததை எதிர்த்து... என பல வழக்குகள்.

அற்புதத்திற்கு சில நேரம் தோன்றும். ஒருவேளை இப்படி பல வழக்குகள் போட்டு தொல்லை கொடுத்ததால்தான் அதிகாரிகளுக்கு அறிவு மீது இப்படி ஒரு கோபமும் வெறுப்பும் ஏற்பட்டதோ என்று.

செங்கல்பட்டை வந்தடைந்தவுடன் மெதுவாகக் கூட்டத்தைவிட்டு விலகி எனக்குப் பழக்கமான பகுதிகளில் நடந்தார்.

(தவிப்பு தொடரும்.....)


**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# டீ — பால் நோ மிக்ஸிங் ப்ளீஸ்!

தண்ணீருக்கு அடுத்த படியாக மக்கள் அதிகம் விரும்பி அருந்தும் ஒரே பானம் 'டீ' தான்! இந்த 'டீ'யில்தான் எத்தனை வகையான சத்துக்கள் இருக்கின்றன! இருந்தாலும், இந்தச் சத்துக்களை எல்லாம் நாம், நமக்கே தெரியாமல் வீணடித்துக் கொண்டிருக்கிறோம். டீயைச் சுவையாக மாற்றுவதற்கு நாம் டீ'யில் சேர்க்கும் பால், 'டீ'யில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் உறிஞ்சி எடுத்து சீர்குலைத்து விடுகிறது.

தெருவெங்கும் வாகனங்களின் புகை, ஆங்காங்கே நவிந்து கிடக்கும் குப்பைகளில் இருந்து வெளியாகும் வாயுக்கள், பீடி, சிகரெட் புகை, சூரியக்கதிர்கள் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் போன்றவற்றால், உடலுக்குள் பல ...ரசா... மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால், 'ப்ரீரேடிக்கல்' என்ற விஷப் பொருட்கள் உடலில் உருவாகின்றன. இந்த ... அளவு அதிகமானால், ஆஸ்துமா முதல் புற்றுநோய் ... பலவிதமான நோய்கள் வரலாம் எனக் ...டுள்ளது.


... விஷப் பொருட்களை முறியடித்து அழிக்கும் ... எனும் அற்புதமான பொருள், டீயில் அதிக ... இருக்கிறது. உடல் வளர்ச்சிக்கு ஆதாரமான ...ல்லைப் பாதுகாக்கும் விட்டமின் – ஏ, சத்துக்களை உணவுகளில் இருந்து பிரிக்கும் விட்டமின் பி – 1, பி – 2, பி – 6 போன்றவைகளும் டீயில் உள்ளன. புற்றுநோய்க்குக் காரணமான அதீத செல் வளர்ச்சிகளை (கட்டிகளை) தடுக்கும் பைட்டோ கெமிக்கல் என்ற பொருளும், இதயத் துடிப்பை சரிசெய்து, இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, இதய நோய்களைத் தடுக்கும் சக்திவாய்ந்த பொட்டாசியம் மற்றும் மெக்னீஷியம் போன்றவையும் டீயில் உள்ளன.



டீயில் சர்க்கரை அல்லது எலுமிச்சை ஜூஸ் சேர்ப்பதால், இந்தச் சத்துக்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், பால் சேர்க்கும் பொழுது இந்தச் சத்துக்கள் யாவும் முற்றிலும் முறியடிக்கப்படுகின்றன. இதனால்தான், பால் சேர்க்காத டீயை அருந்தும் மேலைநாடுகளில் புற்றுநோய்ப் பாதிப்பு குறைகிறது. பால் கலந்த டீயை அருந்தும் இந்தியர்களுக்குபுற்றுநோய் ஆபத்து அதிகம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

டீத்தூளை மூன்று நிமிடங்கள் மட்டுமே கொதிக்க வைத்து டீயைத் தயாரித்தால்தான், அதன் முழுச் சத்துக்களையும் பெற முடியும். சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள் ஒன்று அல்லது இரண்டு நிமிடங்கள் மட்டுமே டீத்தூளை கொதிக்க வைக்க வேண்டும். டீயில் உள்ள சத்துக்கள் மீது ஆசை இருந்தால் அதில் பாலைச் சேர்க்கவே கூடாது. ஒரு நாளைக்கு மூன்று கப் பால் சேர்க்காத டீயை அருந்தினால், உடலின் நோய் எதிர்ப்புத் தன்மை அட்டகாசமாக உயர்ந்து விடும்!

# அன்று நிதி திரட்டியவர்களை அழிக்க இந்திய வான்படையா?




தணிகாசலம் அண்ணனின் அழைப்பை ஏற்று கதிரேசன் துரையும், பணிப்பாளர் இராசாத்தியும் தணி அண்ணன் வீட்டுக்கு வந்திருந்தனர். இருவரையும் வளர்த்து ஆளாக்கி அவர்களுக்கு திருமணமும் செய்துவைத்துவிட்டவர் தணி அண்ணன். இன்று அவர்களை அழைத்து சாப்பாடு போடுவதற்காகத்தான் கூப்பிட்டிருந்தார்.

இந்தத் தம்பதிகளுக்கு கதிரேசன் அண்ணன் வீட்டுக்கு வருவதென்றால் தாய் வீட்டுக்குப் போவது போல் ஒரு உற்சாகம்.

வீட்டிலிருந்து வராந்தாவுக்கு வந்த தணி அண்ணன், ''வாங்க, வாங்க, எங்கடா வராமல் இருந்து விடுவீர்களோ என்று பார்த்தேன். நல்ல வேளை வந்துவிட்டீர்கள். அம்மா யாரு வந்து இருக்கா பாருங்க'' என்று இருவரையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்றார். சிவகாமி அம்மாவுக்கும் ஒரே சந்தோஷம்.

''வாடி என் ராசாத்தி'' என்று உச்சி மோந்து அப்படியே அணைத்துக்கொண்டுக் கொண்டார்.

இதைப் பார்த்த கதிரேசன், ''என்ன ராசாத்தி மட்டும் தான் வேண்டுமா? இந்தக் கதிரேசனை மறந்துவிட்டீர்களா? என சிவகாமி அம்மைவை பார்த்து சிணுங்கினான்.

''என்னடா ராசா அப்படிச் சொல்லி புட்டே. எப்பவுமே நீ என் கண்ணுதானேடா'' என்றார் சிவகாமி அம்மா. வந்த களைப்புத் தீரவே தேநீர் பலகாரங்களை வழங்கி உபசரித்தார்.


''ரெண்டு நாளைக்கு எங்கேயும் போகக் கூடாது. இங்கேயே இருந்து ரெஸ்ட் எடுத்துக் கொண்டு போக வேண்டும்'' என்று கட்டளை போட்டுவிட்டு குசினிக்குள் போய்விட்டார் சிவகாமி அம்மாள்.

மூவரும் அன்று வந்த தினசரி பத்திரிகைகளை ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டனர்.

பத்திரிகை வாசித்துக்கொண்டிருக்கும் போது இடையில் அமைதியை குலைத்தான் கதிரேசன்.

''அண்ணன் இந்தக் கொடுமையைப் பார்த்தீங்களா? இந்தியா இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்யப் போகுதாம்'' என்றார் கதிரேசன்.

''ஆமாம் தம்பி! நானும் பார்த்தேன். ஆரம்பத்தில் புலிகள் வான் படை அமைப்பதற்கு விசனம் தெரிவித்தது இந்தியா. இப்ப இலங்கைக்கு உதவ தனது வான் படையை வழங்கப்போவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங் சொல்லி இருப்பதுதான் கவலையாக இருக்கு''




''அண்ணன் இந்த அமைச்சர் நட்வார்சிங் சொன்னது இலங்கையில் உள்ள எல்லாத் தமிழர்களுக்குமே பெரிய வேதனையைக் கொடுத்துள்ளது.''

''தம்பி நீங்க எல்லாம் சின்னக் குழந்தைகள். இந்தியா மீது சீனா படை எடுத்த போது யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வநாயகம் சீனாவுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். அத்தோடு நின்றுவிடவில்லை. இந்தியாவுக்கு யுத்த நிதியும் திரட்டினாரே''

''அப்படிங்களா அண்ணே! இந்த விடயம் எங்களுக்கு இப்ப நீங்க சொல்லும் வரை தெரியாதே. தனிப்பட்ட முறையில் தந்தை செல்வா, துணிச்சலாக நிதி திரட்டி இருக்காரே! இலங்கை அரசாங்கம் என்ன செஞ்சிச்சி''

''அதை ஏன் கதிர் கேட்கிற. அப்ப நம்ப ஜனாதிபதியோட அம்மாதான் பிரதமரா இருந்தாங்க''

''அப்படிங்களா அண்ணே! நம்ம ஜனாதிபதியோட அம்மாதான் ஆரம்பகாலம் முதலே நேரு குடும்பத்தோட ஒட்டி உறவாடினாங்களே! அதுனால இவங்களும் இந்தியாவுக்கு ஆதரவாகப் பேசி இருப்பாங்களே.''

''உண்மையாகவே மனச்சாட்சி உள்ளவர்களாக இருந்தால் அப்படித்தான் செய்து இருக்க வேண்டும். ஆனால் நடந்தது தலைகீழா அல்லவா போச்சு''

''என்னங்க அண்ணன் சொல்லுறீங்க?''

''ஆமாம் தம்பி! இந்த அம்மா கப்சிப் என்று வாயை மூடிக்கொண்டு இருந்ததோடு மறைமுகமாக சீனாவையும் அல்லவா ஆதரிக்க ஆரம்பித்து விட்டார்''

''என்னங்க அண்ணே! அன்னைக்கு சீனா போர் தொடுத்த போது ஆதரவாக குரல் கொடுத்தவர்களுக்கும் நிதி திரட்டியவர்களுக்கும் எதிராகக் குண்டு போடுவதற்கும், தமிழர்களை அழிப்பதற்கும் அல்லவா இப்ப இந்தியா வான்படையை கொடுத்து உதவப் போகுதாம். என்னங்க அண்ணே இந்தக் கொடுமை.''

''ஆமாம் தம்பி. என்னதான் இருந்தாலும் இந்தியா இப்படி நடந்துக்கக் கூடாது. கொஞ்சமாவது சிந்திக்க வேணும்''

''உண்மைதாங்க அண்ணே! இப்ப வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களை கொன்று குவிப்பதற்காக வான் படையை அனுப்பும் இந்தியா நாளைக்கு மலையகத்தில் ஒரு போராட்டம் என்றால் அதை அடக்கவும் படையை அனுப்பி விடுமோ?''

''இந்தப் பயம் எல்லோருக்கும் இருக்குங்க அண்ணே! அதுநால நாமளும் துணிச்சலா மகஜர் கொடுக்க வேண்டும்'' என்றார் கதிரேசன் துரை.

இந்த நேரத்தில் ''சாப்பாடு ரெடி எல்லோரும் வாங்க'' என்று சபையை குழப்பிவிட்டார் சிவகாமி பாட்டி.''

# கைக்கூலிகளாக மாறிவிடாமல் கடந்த காலத்தை பாருங்கள்




நாட்டில் மீண்டும் ஒரு இனக்கலவரத்தையோ, இரத்தக்களரியையோ ஏற்படுத்தவிடமாட்டோம் என்பதில் அரசாங்கம் மிகவும் தீவிரமாகவே இருக்கிறது.

அதேவேளை வாழையடி வாழையாக இனத்துவேசம் ஒன்றை மட்டுமே அரசியல் முலதனமாகக் கொண்டு அரசியல் நடத்திவரும் ஜே.வி.பி.யினரும் புதிதாக உருவான ஜாதிக ஹெல உறுமயவினரும் நாட்டில் மீண்டும் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

வழமையாகவே அண்மைக்காலங்களில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் போராட்டம் என்று ஆரம்பித்த கிளர்ச்சிகள் அனைத்தும் தமிழர்களின் உயிர்களிலும் உடமைகளிலுமே முடிவடைந்துள்ளன என்பது மறக்கமுடியாத ஒன்று.

இவர்களுடைய போராட்டத்தின் போது தீவைத்து கொளுத்தப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் எத்தனை? பல ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் தேசிய அட்டைகள், வாக்காளர் அட்டைகளை எல்லாம் பறித்துச் சென்றனர். மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்தனர். தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்கே வேட்டு வைத்தனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இவ்வளவு கொடுமைகளையும் செய்தவர்கள், கோயில்களுக்கு தீ வைத்து சூறையாடி ரசித்தவர்கள் இப்பொழுது தொழிற்சங்கம் என்ற பெயரில் மலையகத்தில் காலடி எடுத்து வைத்துள்ளனர். அதாவது தோட்டங்கள் தோறும் தொழிற்சங்க அமைப்புகளை ஏற்படுத்திவருகின்றனர். அவர்கள் போடும் பிச்சைக்காசுக்காகவும், சில அற்ப சலுகைகளுக்காகவும் மலையக இளைஞர்கள் சிலரும், ஓரம்கட்டப்பட்ட பழைய தொழிற்சங்க வாதிகளும் மலையகத்தில் இவர்களுக்கு கூடாரம் அமைத்துக் கொடுக்கின்றனராம்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சுனாமி அனர்த்த நிவாரணம் அளிக்கப் போகின்றோம், வீடு கட்டிக் கொடுக்கப் போகின்றோம் எனக் கூறிக் கொண்டு சென்ற இவர்கள் அங்கே புத்தர் சிலைகளை அமைத்து காணிகளைக் கைப்பற்ற முனைகின்றனர். இதனால் இந்த நாடே இன்று குழம்பிப்போயுள்ளது.

இப்படியான சந்தர்ப்பதில்தான் தொழிற்சங்கம் என்ற பெயரில் தோட்டங்களில் காலடி எடுத்து வைத்துள்ளனர்.

இவர்களின் கடந்தகால சரித்திரம் இந்த மலையக இளைஞர்களுக்கும் அடிவருடிகளுக்கும் தெரியாதா என்ன?

எல்லாம் புரிந்து கொண்டும் இவர்களின் பின் செல்வதற்கான நோக்கம் என்ன? உங்களுடைய சமுதாயத்துக்கு செய்த கொடுமைகள் உங்களைப் பாதிக்கவில்லையா?

இப்பொழுது இந்த ஜே.வி.பியினருக்கு குடைபிடித்து கூடாரம் அமைத்துக் கொடுக்கின்றீர்களே அந்த கூடாரத்துக்குள் நுழைந்த ஒட்டகம் போல் உங்களையே அங்கிருந்து விரட்டிவிடமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

ஜே.வி.பியினர் மலையகத்தில் காலூன்றிய பின் ஏற்பட்டுள்ள மாற்றங்களை சிறிது திரும்பிப் பாருங்கள். கினிகத் தேன முதல் நுவரெலியா வரை உள்ள தோட்டச் சந்திகளில் எத்தனை புத்தர் சிலைகள் இப்போது அமைக்கப்பட்டுள்ளன.

நாங்கள் எப்போதும் புத்தமதத்திற்கோ அல்லது சிங்கள சகோதரர்களுக்கோ விரோதமானவர்கள் அல்ல. எல்லா மதங்களையும் மதிக்கின்றோம்.

அதேவேளை தொழிற்சங்கம் என்ற பெயரில் தோட்டங்களுக்குள் புகுந்து தோட்டத் தொழிலாளர்களின் அமைதி வாழ்க்கையை சீர்குலைக்கக்கூடாது.

தோட்டத் தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாகவே காந்திய வழியில் அஹிம்சைப் போராட்டங்களையும், சத்தியாக்கிரகங்களையும் நடத்திப் பழக்கப்பட்டவர்கள்.

அமைதியான மலையகத்தில் வன்முறைகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்திவிடக் கூடாது.

மலையகத்தில் உள்ள சில இளைஞர்கள் ''காலம் காலமாக மலையகத்தில் இருக்கும் தொழிற்சங்கங்களும், அரசியல் தலைவர்களும் எம்மை ஏமாற்றிவிட்டனர். விரக்தியின் எல்லையில் இருக்கின்றோம். அதனால்தான் புரட்சிகரமான ஒரு இயக்கத்தை வளர்க்கப் போகின்றோம்'' என்று காரணம் கூறுகின்றனர். நியாயம் கற்பிக்கின்றனர்.

உங்களுடைய ஆதங்கம் நியாயமானதுதான். அதை மறுக்கவில்லை. அதற்காக நெருப்புக்குப் பயந்து கொதிக்கும் எண்ணெய் கொப்பராவுக்குள் விழுந்துவிடக் கூடாது. மலையகத்தில் புரட்சி செய்யப் போகின்றோம் என்று நினைத்தால் நீங்கள் எல்லோரும் ஐக்கியப்பட்டு சேவை மனப்பான்மையுடன் ஒரு பொது அமைப்பை ஏற்படுத்துங்கள்.

இளைஞர்களே அது நீங்கள் உங்கள் சமூகத்திற்கு செய்யும் ஒரு சேவையாகும். அற்பசலுகைகளுக்கு இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கைகூலிகளாகி விடாதீர்கள்.

# ஆபிரிக்காவை சுரண்ட விரும்பும் ஆத்ம நண்பர்கள்

மத்திய கிழக்கின் எண்ணெய் வளத்தில் கண்வைத்து ஜனநாயகத்தின் பெயரால் ஈராக்கில் நுழைந்த ஆத்ம நண்பர்களான பிரிட்டிஷ்பிரதமர் டோனிபிளேயரும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் உதவி எனும் போர்வைக்குள் மறைந்து நின்றுகொண்டு தமது நவ காலனித்துவ நலன்களுக்காக இப்போது ஆபிரிக்காவை சுரண்டுவதற்குத் தயாராகிறார்கள். உதவி என்ற முகமூடி அணிந்து கொண்டு பிளேயர் ஆபிரிக்கா மீது காட்டும் அக்கறையை புஷ் முழு மனதுடன் அங்கீகரிக்கவில்லை என்றாலும் தனது ஆத்ம நண்பர் பிளேயருடன் இந்த விடயத்தில் கைகோத்து நிற்கவே அவர் விரும்புகிறார்.

*கறை படிந்த கண்டம்*

ஆபிரிக்கா என்றதும் எமது கண்முன் பஞ்சம், பசி, பட்டினி, தொற்று நோய்கள், உள்நாட்டு யுத்தங்கள், ஊழல் மலிந்த அரசுகள் ஆகியவையே விரிந்து நிற்கும். இந்த கறை படிந்த கண்டத்தின் மீது நிதி உதவி என்ற கண்கவர் வர்ணத்தைப் பூசி உலகை ஏமாற்றுவதில் முன்நிற்கிறார் பிரிட்டனின் கதாநாயகன் டோனிபிளேயர்.

ஆபிரிக்காவைக் காலடியில் போட்டு வைப்பதற்கான தனது விருப்பத்தை லாவகமாக நிறைவேற்றுவதற்கு பிளேயருக்கு ஒரு துணை வேண்டாமா? எனவே இது சம்பந்தமான கருத்துகளை தனது அமெரிக்க நண்பருடன் விலா வாரியாக பகிர்ந்துகொள்வதற்காக அண்மையில் வாஷிங்டனுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு இருந்தார் அவர்.

இரு நாடுகளின் தலைவர்களும் ஆபிரிக்காவுக்கான நிதி உதவி பற்றிய தமது கருத்துகளை பரிமாறிக் கொண்ட பின்னர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

அதில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ''வறுமையின் கோரத் தாண்டவம், அதனால் லட்சக் கணக்கான உயிர் இழப்புகள்—இவற்றில் இருந்து ஆபிரிக்காவை விடுவிப்பது தான் எமது வெளிநாட்டுக்கொள்கைகளில் ஒன்று'' என்று தெரிவித்தார்.

தேவையற்ற உயிர்ப்பலிகள், வறுமையின் கோரப்பிடி ஆகியன பற்றிய ஞானம் இவர்கள் இருவருக்கும் ஏற்கனவே உதித்திருக்குமானால் ஈராக்குக்கு எதிரான பொருளாதாரத்தடைகளை அமெரிக்காவும், பிரிட்டனும் ஒன்றிணைந்து அமுல்படுத்தியது ஏன்? அதன்காரணமாக இலட்சக்கணக்கான ஈராக்கியர்களின் உயிர்கள் அநியாயமாகப் பலியானது பற்றி இவர்களுக்கு எதுவும் தெரியாதா?

இன்னும் ஒருபடி மேலே சென்று நாம் சிந்திப்போமானால் இவர்கள் இருவரும் நினைத்திருந்தால் ஈராக் யுத்தம் தவிர்க்கப்பட்டு இருக்கும் என்பதும் தெரிய வரும்.

*நவ காலனித்துவம்*

ஈராக் உட்பட எண்ணெய் வளம் மிக்க நாடுகளில் இவர்கள் வைத்திருக்கும் 'நேசம்' போலியானது என்ற பின்னணியில் நாம் ஆபிரிக்காவைப் பார்ப்போமானால்

இந்த வாஷிங்டன் விஜயத்தின் போது ஆபிரிக்காவை மீட்கக வேண்டுமானால் 250 கோடி டொலரை திரட்டியே ஆகவேண்டும் என்று புஷ்ஷிடம் கூறினார் பிளேயர். ஆனால், இந்த விடயத்திலும் அவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. ஏனென்றால் அவர் எதிர் பார்த்ததைவிட மிகக் குறைந்தளவு தொகையே அதாவது 6,740 இலட்சம் டொலர்களை மட்டும் வழங்க வாஷிங்டன் முன்வந்துள்ளது.

ஆபிரிக்காவில் இன்னும் சுரண்டப்படாமல் பாரிய அளவில் குவிந்து கிடக்கும் மூல வளங்களைச் சுரண்டிக்கொள்வதற்கான தந்திரோபாயத்தின் மறு வடிவம் தான் அவரது இந்த தளராத முயற்சிகள்.

*சுரண்டல் நாடகம்*

இந்தச் சுரண்டல் நாடகத்தின் முதல் கட்டம் 19ஆம் நூற்றாண்டில் மேடையேற்றப்பட்டது. அப்போது பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி இந்த மூன்று நாடுகளும் சேர்ந்து ஆபிரிக்காவைத் துண்டுபோட்டு காலனிகளாக மாற்றிக்கொண்டன.



*வெள்ளை மாளிகையின் கிழக்குப் புறமாக அமைந்துள்ள அறை ஒன்றில் பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயரும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், கூட்டாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின்போது தமது சந்தேகம் ஒன்றை தெளிவுபடுத்துமாறு பிரிட்டிஷ் பிரதமரிடம் கேட்கிறார் அமெரிக்க ஜனாதிபதி.*

அதன்மீது இப்போது இவர்கள் காட்டும் 'பரிவு'ம் பொய்யானது, தன்னலமானது என்பது எளிதில் புரியும்.

பசுத்தோல் போர்த்த புலியின் கதை அனைவரும் அறிந்த ஒன்றே. அதுபோலத்தான் அமெரிக்க ஜனாதிபதியும், பிரிட்டிஷ் பிரதமரும் தமது நவ காலனித்துவ கொள்கைகள் முன்தள்ள ஆபிரிக்காவை நோக்கி உதவிக்கரம் நீட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல டோனி பிளேயருக்கு இன்னொரு எண்ணமும் உண்டு. சர்வதேச ரீதியாக சரிந்துபோயுள்ள தனது செல்வாக்கை இந்த நன்கொடைமூலம் நிமிர்த்திவைக்கலாம் என்றும் யோசிக்கிறார் அவர்.

இந்தக் கதைக்கு இன்னொரு பக்கமும் உண்டு. அதாவது நீங்கள் மத்திய கிழக்கை உங்கள் வசம் வைத்துக்கொண்டு ஆபிரிக்காவை என்னிடம் விட்டுவிடுங்கள் என்று புஷ்ஷிடம் பிளேயர் கேட்பது தான் அந்தக் கதை.

ஆனால் பிளேயரைத் தடவிக்கொடுப்பதற்காக வறிய ஆபிரிக்க நாடுகளின் லட்சக்கணக்கான டாலர் பெறுமதியுள்ள கடன் தொகையை ரத்துச் செய்வதாக புஷ் கூறி இருக்கிறார்.

*ஜி-8 நாடுகள்*

பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் ஜி—8 என அழைக்கப்படும் செல்வந்த நாடுகளின் மாநாடு ஒன்று விரைவில் ஸ்கொட்லாந்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. தனக்கு வேண்டிய பெருந்தொகையை அந்த மாநாட்டில் திரட்டிக்கொள்ளலாம் என்று பிளேயர் எதிர்பார்க்கிறார். அதுவும் கூட வெற்றி அளிக்கப்போவது இல்லை.

இங்கே ஒரு கேள்வி எழுகிறது. டோனி பிளேயர் ஆபிரிக்காவுக்கு உதவி செய்ய படாதபாடு படுவது எதற்காக என்பதே அந்தக் கேள்வி.

இப்போது இரண்டாவது காட்சி மேடை ஏற்றப்பட்டுள்ளது. இந்தக் காட்சியில் நலிந்து போயிருக்கும் ஆபிரிக்காவின் செல்வம் நிறைந்த மூல வளங்களை சுரண்டிச் செல்வதில் பிரிட்டனின் பல்தேசியக் கம்பனிகள் முன்நின்று செயல்படுவது தெரிகிறது. அவை ஆபிரிக்காவின் அப்பாவி மக்களின் முதுகில் சவாரி செய்கின்றன.

பிரிட்டனின் பல்தேசிய நிறுவனம் ஒன்று கினியாவின் ஜனாதிபதி தியோடோரா ஒபியாங்குடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. அந்த ஒப்பந்தத்தின் மூலம் அந்த நாட்டில் கிடைக்கும் எரிவாயுவை 17 ஆண்டுகளுக்குப் பெற்றுக் கொள்வதற்கான தனி உரிமை அந்த நிறுவனத்துக்கு வழங்கப் பட்டுள்ளது.

கினி நாட்டின் எண்ணெய் வளத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் பெரும் பகுதியை ஜனாதிபதி ஒபியாங் கள்ளத்தனமாகச் சைப்பிரஸுக்கு அனுப்புவதற்கு பிரிட்டனின் பெயர் பெற்ற சர்வதேச வங்கி ஒன்று உதவி செய்துள்ளது.

ஆபிரிக்காவில் உள்ள இன்னொரு நாடான லைபீரியாவில் தொலைத் தொடர்புகளையும், இரத்தினக் கல் உற்பத்தியையும் தனியார் மயமாக்கும் முயற்சிகளின் பின்னணியில் லண்டனைச் சேர்ந்த வேறொரு புகழ் பெற்ற வங்கி ஒன்று இருந்ததாகவும் ஒரு குற்றச்சாட்டு உண்டு.

ஆபிரிக்காவைச் சுரண்டுவதற்காக இப்படி இன்னும் எத்தனையோ அசிங்கங்கள். இவற்றின் பின்னணியில் பிரிட்டனுக்கு உள்ள பங்கு மிகப் பெரியது என்று கூறினால் அது தவறு அல்ல.

இவ்வாறான சுரண்டல்கள் ஆபிரிக்காவில் தொடர்ந்து இடம் பெறாது இருக்க அந்தக் கண்டத்தில் நேர்மையான வர்த்தகம் நடைமுறைப் படுத்தப் படுத்தப்பட வேண்டும் என பொருளியல் வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

*பொருளாதார ஒழுங்கு*

ஆபிரிக்காக் கண்டம் பாலும் தேனும் வழிந்து ஓடக்கூடிய கண்டமாக இருந்தும் அவ்வாறான செல்வச் செழிப்பு அங்கு ஏற்படாமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. ஆபிரிக்க நாடுகளின் விவசாயிகளுக்கு செல்வந்த நாடுகள் வழங்கும் மானியங்கள்.

2. ஆபிரிக்கப் பொருட்களுக்கு உலக சந்தையில் காணப்படும் கதவடைப்புகள்

எனவே ஆபிரிக்காவுக்கு இப்போது தேவையாக இருப்பது நீதியான பொருளாதார ஒழுங்கு மட்டுமே. நியாயமான கட்டுக்கோப்புடன் கூடிய உலக வர்த்தகம் ஆபிரிக்காவில் அதிசயிக்கத்தக்க மாற்றங்களைக்கொண்டுவரும் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

ஆபிரிக்காவின் ஏற்றுமதி இன்று இருப்பதைவிட இன்னும் 1%ஆல் அதிகரிக்குமாயின் அதன் வருமானம் வருடத்துக்கு 400 கோடி பவுண்களாக இருக்கும். இந்த அதிகரிப்பு ஜி—8 நாடுகளையோ அல்லது பிரிட்டிஷ் அமெரிக்க கதாநாயகர்களையோ எதிர்பாராது ஆபிரிக்கா துரிதமாக முன்னேறுவதற்குப் போதுமானது.

அதற்கு செல்வந்த நாடுகள் முதலில் செய்ய வேண்டியது ஒன்று உண்டு. அவை ஆபிரிக்க நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களின் மீதான வரிகளையும்ஏனைய வர்த்தகக் கட்டுப்பாடுகளையும் தமது நாடுகளில் நீக்கி விட வேண்டும்.

*ஜி-8 நாடுகள் செய்ய வேண்டியது என்ன?*

ஐரோப்பிய நாடுகள் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் சந்தைகளை தமது பொருட்களுக்குத் திறந்து விடுமாறு கேட்கின்றன. ஆனால் இதே ஐரோப்பிய நாடுகள் தமது சந்தையை ஆசிய ஆபிரிக்க நாடுகளின் பொருட்களுக்காக திறந்து விடுவதற்கு பின்நிற்கின்றன.

மேற்கத்திய நாடுகளுக்கு ஆபிரிக்கப் பொருட்கள் செல்வதற்கான தடைகள் நீக்கப்படுமானால் மிக விரைவில் ஆபிரிக்க நாடுகள் சுபீட்சம் அடையும். செழிப்பு மிகுந்த நாடுகளாக இவை மாறும்போது ஐரோப்பியப் பொருட்களுக்கான பாரிய சந்தை ஒன்று அங்கு நிச்சயமாகத் திறக்கப்படும்.


இந்தக் கருத்துகளை மனதில் இருத்தி ஆபிரிக்காவுக்கான நிதி உதவியையும், அது தனது பொருட்களை மேற்கு உலகில் சந்தைப் படுத்துவதற்கான வசதிகளையும் ஒரே சமயத்தில் செய்த கொடுக்க இந்த ஜி—8 நாடுகள் முன்வர வேண்டும். இவற்றைச் செய்வதற்கு பிளேயர் ஏன் பின்னடிக்கிறார். அவரது சுயநலம் அவரைத் தடுக்கிறது.

சராசரியாக ஒரு ஆணின் மூளை 1375 கிராம் இருக்கும். பெண்ணின் மூளை ஆணின் மூளையை விட சிறிது குறைவான எடை கொண்டதாகவே இருக்கும். புகழ் பெற்ற ரஷ்ய நாவலாசிரியர் டர்கினவ்வின் மூளை 2021 கிராம் எடை கொண்டதாகவும், பிஸ்மார்க்கின் மூளை 1807 கிராம் எடை கொண்டதாகவும் இருந்ததாம். ஐன்ஸ்டீனின் மூளை சராசரி எடை கொண்டதாகவே இருந்ததாம்.

ஒரு யானையின் மூளை 5000 கிராமும், திமிங்கிலத்தின் மூளை 10,000 கிராமும் இருக்குமாம். மொத்த உடல் எடை அளவோடு மூளை அளவை ஒப்பிடும் போது திமிங்கலத்தின் மூளை மனித மூளையை விட எடை குறைவானதுதானாம்.

சராசரியாக மனித உடல் எடையின் ஒவ்வொரு 44 கிராமுக்கும் மூளையின் எடை 1 கிராம் இருக்குமாம்.

மனித மூளையில் 100




பில்லியனுக்கும் மேற்பட்ட நரம்பு செல்கள் உள்ளனவாம். இதன் வழியாகத்தான் மூளையின் கட்டளைகள் எலக்ட்ரிக் பல்ஸ்சாக அனுப்பப்படுகின்றன. இந்த எலக்ட்ரிக் பல்ஸ் கட்டளைகள் மணிக்கு 400 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கின்றன. அதாவது ஒரு பல்ப் எரிவதற்குத் தேவையான மின்சாரத்தை இதிலிருந்து தயாரிக்க முடியும். உடலின் மற்றப் பாகங்களை விட மூளைதான் அதிக அளவு சக்தியை எடுத்துக் கொள்கிறது. அதாவது நாம் உண்ணும் உணவின் சக்தியில் ஐந்தில் ஒரு பங்கை மூளை எடுத்துக் கொள்கிறது. மனித மூளை பற்றிய ஆராய்ச்சிகளில் இன்னமும் கண்டறியப்படாத எவ்வளவோ வியத்தகு உண்மைகள் புதைந்திருக்கின்றன. சிக்கல் முடிச்சுகள் நிறைந்த மனித மூளையில் ஒரு நேரத்தில் ஒரு சிந்தனை மட்டுமே தோன்ற முடியும். அது நேர்மறைச் சிந்தனையாக இருக்கட்டுமே!

# பாரதீய ஜனதா - இந்து அமைப்புக்கள் உறவு முறுகலில்

பாரதீய ஜனதா 1984ஆம் ஆண்டு இரண்டே இரண்டு உறுப்பினர்களைத் தான் இந்திய நாடாளுமன்றமான லோக்சபாவில் கொண்டிருந்தது. 1999ஆம் ஆண்டு 185 உறுப்பினர்களைப் பெற்று 150 கூட்டணிக்கட்சி எம்.பிக்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பாரதீய ஜனதா முன்னேற முக்கிய காரணம் அதன் சகோதர இந்துவெறி அமைப்புகளான விஷ்வ இந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ் அமைப்பு ஆகியவையே.

இந்த அமைப்புகள் பெரும் எண்ணிக்கையான தீவிர இந்துமத தொண்டர்களைக் கொண்டவை. தேர்தல் ஒன்று வந்தால் ஆண்டாண்டு காலமாக பதவியில் இருந்த காங்கிரஸின் தொண்டர் பலத்தை மிஞ்சுமளவு இந்த இந்துமத அமைப்புகளுக்கு தொண்டர் பலம் உண்டு. தேர்தல் காலத்தில் மிகத் தீவிரமாக பாரதீய ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து இத் தொண்டர்கள் பிரசாரம் செய்வர். இவர்களின் ஆதரவின்றேல் பி.ஜே.பி இல்லை என்பதே யதார்த்தம். உண்மை இப்படி இருக்க, இந்த அமைப்புகளுடன் முரண்படும் ஒரு நிலையை அண்மைக்காலமாக எடுக்கத் துணிந்திருக்கிறது பாரதீய ஜனதா.


பாரதீய ஜனதா ஆட்சியில் பல மாநில ஆளுநர்களாக ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தினர் நியமிக்கப்பட்டனர். பல பாரதீய ஜனதா தலைவர்களும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பிலிருந்து வந்தவர்களே. அத்வானி கூட ஆர்.எஸ்.எஸ் மூலமாகத்தான் பி.ஜே.பிக்கு வந்தார்.

இப்படிப்பட்ட அத்வானி எதிர்க்கட்சித் தலைவர் என்ற ஹோதாவில் கடந்தவாரம் பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது பாகிஸ்தானின் தேச பிதாவும் முதல் பிரதமருமான முகம்மத் அலி ஜின்னாவை மத சார்பற்ற கோமகன் என்று கூறிவிட ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட அமைப்புகள் கிளர்ந்தெழுந்தன.

ஒன்றாக இருந்த இந்தியாவை உடைத்து பாகிஸ்தானைப் பிரித்தெடுத்தவர் ஜின்ன என்பது சிறு குழந்தைக்கும் தெரியும். பிரிவினை கோர ஜின்னாவுக்கு காந்தி இடமளித்தார் என்று குற்றஞ்சாட்டியே ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சார்ந்த கோட்சேயால் காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். காந்தியை சுட்டுக்கொன்ற ஆர்.எஸ்.எஸ் இயக்கத்திலிருந்து வந்த அத்வானி ஜின்னாவை மத சார்பற்றவர் என்று சொல்வது முழு முரண்பாடுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஜின்னாவை மத சார்பற்றவர் என்றால் காந்தி மதச்சார்புடையவரா மதச்சார்பற்றவரா என்ற கேள்வி எழுகிறது. ஜின்னாவை வெறுப்பதாக காங்கிரஸ் கட்சி கூடக் கூறியுள்ளது. பி.ஜே.பி தலைவர் ஒருவர் ஜின்னாவை எப்படிப் புகழலாம்?

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கோபம் நியாயமே. ஆனால் அத்வானியோ விடுவதாக இல்லை. ராஜினாமாச் செய்ய



அத்வானி

வேண்டுமென்ற ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கூச்சலை அத்வானி முதலில் ஏற்க மறுத்தார். பின்னர் மனம் மாறி ராஜினாமாச் செய்தார். ஆனால் கட்சி கடந்த ஆண்டு தோற்று ஆட்சியை இழந்த பிறகு தான் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கட்சியில் இருந்து ஓரம் கட்டப்பட்டு கட்சித் தலைவராக இருந்த வெங்கையா நாயுடுவும் நீக்கப்பட்டு தலைமை அத்வானியிடம் தரப்பட்டது.

இப்போது ஜின்னா பிரச்சினையில் அத்வானியையும் விலக்கினால் கட்சிக்கு யார் தலைவர் என்ற சிக்கலுள்ளது. அதுவும் கட்சி ஆட்சியை இழந்து எதிர்க்கட்சி வரிசையில் தடுமாறும் நிலையில் அத்வானி, வாஜ்பாய் இருவரில் ஒருவர்தான் தலைவராக இருக்க வேண்டிய அவசியமுள்ளது. அதாவது முழு அந்தஸ்தில்லாத சுஷ்மா ஸ்வராஜ், பிரமோத் மகாஜன், அருண் ஜேட்லி போன்றோரில் ஒருவரை நியமிக்க முடியாது. இம் மூவரும் வெற்றிடம் வர முன்னரே தங்களுக்குள் தலைமைப் பதவிக்காக அடிபட்டு கெட்ட பெயர் தேடியவர்கள்.

எனவே வேறு வழியின்றி கட்சி அத்வானியிடம் தஞ்சமடைந்துள்ளது. இதன் விளைவுகள் விபரீதமாக இருக்கலாம். முதன்முறையாக பிஜேபி அதன் உயிர்நாடியான ஆர்.எஸ்.எஸ் அமைப்பை தூக்கி எறிந்துள்ளது. கோபமுற்ற ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் தேர்தல் வரட்டும் தொண்டர்களின்றி தடுமாறும்போது எமது அருமை தெரியும் என முழங்கியுள்ளனர்.

-எஸ்.சுரேந்திரஜித்-

அத்வானி ஜின்னாவை புகழ்ந்ததும் பாபர் மசூதி இடிப்பை துர்ச்சம்பவம் என்று சொன்னதும் முஸ்லிம் வாக்குகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தே. எவ்வளவுதான் சகல இந்துக்களின் வாக்குகளும் கிடைத்தாலும் ஆட்சியில் நீடிக்க அதுமட்டும் போதாது என்பதை பிஜேபி உணர்ந்துள்ளது. கடந்த ஆண்டு தேர்தலில் பிஜேபி தோற்றதற்கும் காங்கிரஸ் வென்றதற்கும் இதுவே காரணம் என்பதையும் பி.ஜே.பி புரிந்துகொண்டுள்ளது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 165

சொற்சிலம்பம் 165 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஜூன் 26 ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூலை 3 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 10ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.163க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.


**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 165



## சொற்சிலம்பம் போட்டி இல.163

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 வ | 3 கா | 4 ச | ம் | ■ | 5 அ | 6 வா |
| 7 ச | ரி | த | ல் | ■ | 8 ப | க | ல் |
| ம் | ■ | 9 க | லி | 10 யா | ண | ம் | ■ |
| 11 பா | 12 க | ன் | ■ | 13 ச | ம் | பா | 14 தி |
| 15 வி | ண் | ■ | 16 ந | ணை | ■ | 17 வ | ரை |
| 18 த | ணி | 19 த | ல் | ■ | 20 நா | ம் | ■ |
| ம் | ■ | 21 க | ல | வ | ன் | ■ | 22 நா |
| ■ | 23 கு | டு | வை | ■ | 24 கு | ண் | டு |

## சொற்சிலம்பம் போட்டி இல.165

**இடமிருந்து வலம்**

1.வேளாண்மை செய்பவன்.
4. சிலப்பதிகாரத்தில் கோவலன் காதல் நாயகி.
7. ஏழு நாட்கள்.
8தென்னோலையைக் கீறிப் பெறுவது.
9. இளைய சகோதரர்மார்.
11. வேகம்.
12. சோதிடத்தில் வீடு அல்லது மேடை.
13.போதை தருவது.
14.குழு.
15.சிங்கம்.
17. வலிமை.
18.சினிமாவிலும் நாடகத்திலும் பலரும் செய்வது.
19. ஒரு ராசி/ ஓலையால் வனைந்த பெட்டி.
21 .சிதம்பரம்.
22. அறியாமை/படியாத தன்மை.

**மேலிருந்து கீழ்**

1. தர்க்கம்.
2. அருள் கூர்ந்து அளிப்பது.
3. நறுமணம் பெறவும் பயன்படுத்துவர்/ முட்டாளைத் திட்டவும் பாவிப்பர்.
4.மார்பு/நெஞ்சு.
5. பொருத்தமானது/சரியானது.
6. பகுபத உறுப்பில் ஒன்று.
8. இரண்டு.
10. தமிழ் மாதம் ஒன்று.
13.இறத்தல்.
14.சேர்தல்/ சேர்த்தல்/ ஒருவரைப் பற்றி அள்ளி வைத்தல்.
15. பன்னிரண்டு அங்குலம்.
16.கொலை செய்யாமை.
17. தினசரி மாறுவது.
18. நமது/நம்முடைய.
20. இது அறுபத்தி நான்கு என்பர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 162

1. திருமதி.எஸ்.ஐ.அன்தனி,
ஸ்ரீ ராம கிருஷ்ண மத்திய கல்லூரி ஆசிரியர் விடுதி,
கலஹா 20420, கலஹா.
2. எம்.எம்.அஷ்ரப்,
இல.489, ஆஸ்பத்திரி வீதி,
சாய்ந்தமருது—07.
3. நா.அச்சுதன்,
389, திருநகர்,
யோகபுரம்.

### பாராட்டுப் பெறுவோர்

1. செல்வி.ம.மேரியூலியட்,
மல்லாவி மத்திய கல்லூரி,
யோகபுரம்.
2. ஐ.சந்திரசேகரம்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
3. ம.சத்தியபாலன்,
மயிலணி,
சுன்னாகம்.
4. வ.மன்னர் அன்ரனி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
5. கே.புஷ்பராணி,
புலோலி மத்தி,
தம்பசிட்டி.
6. தா.வடிவேல்,
ஏறாவூர்,
செங்கலடி.
7. செல்வி.இ.மோகனராஜி,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.
8. இ.சிவசிறிதரன்,
நாயாறு,
முல்லைத்தீவு.
9. ஹியூபட் செலர்,
மாமாங்கம்,
மட்டக்களப்பு.
10. திருமதி.ச.சொர்ணமலர்,
மன்னார் வீதி,
வவுனியா.

# கறுப்பு நிலா!

வெண்ணிலாவைப் பார்த்துப் பார்த்து பொன்னிலா என்று பாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எமது வானத்தில் கறுப்பு நிலா ஒன்று உலா வந்துகொண்டிருக்கிறது.

சனிக்கோள் பற்றி ஆராயச் சென்ற விண்கலம், இந்தக் கறுப்பு நிலாவைப் படம் பிடித்து அனுப்பியிருக்கிறது.

### சனிக்கோள்

சனிக்கோளின் மர்மங்களைக் கண்டுபிடிக்க 'காசினி' என்ற விண்கலத்தை விஞ்ஞானிகள் அனுப்பியிருக்கிறார்கள்.

இந்த விண்கலம் இப்போது சனியில் படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பி வைக்கிறது.

### கறுப்பு நிலா

ஜூன் 11ஆம் திகதி வந்த படத்தைப் பார்த்த அமெரிக்க விண்வெளி ஆய்வுநிலைய (நாசா) விஞ்ஞானிகள், ஆச்சரியப் பட்டார்கள்!

சனியைச் சுற்றிவந்து கொண்டிருக்கும் ஒரு நிலாவின் படம் அது! (பக்கத்திலுள்ள அந்தப் படத்தைப் பாருங்கள்!)

அம்மைத் தழும்பு விழுந்த முகம் போல, மேடு பள்ளங்கள்!

கோள் என்றால், உருண்டையாக இருக்கும். ஆனால், இந்த நிலா, ஆப்பிள் பழத்தில் ஒரு கடி கடித்தது போல, ஒரு பக்கம் குறைவாக இருக்கிறது!

நிறமும் நிலவு போன்று பொன்னிறமாக இல்லை! கறுப்பாக இருக்கிறது!!

சூரிய மண்டலத்திலுள்ள எல்லாக் கோள்களும் சூரியனிலிருந்து உடைந்து சிதைந்தவைதான். ஆனால், இந்த நிலவு மட்டும் சூரிய மண்டலத்துக்கு வெளியிலிருந்து வந்ததாகத் தெரிகிறது!

### வால் நட்சத்திரம்

இந்த நிலவுக்கு 'போபி' என்று பெயர்.

இது ஒரு காலத்தில் வால் நட்சத்திரமாக இருந்தது! 400 கோடி ஆண்டுக்கு முன் சனியால் ஈர்க்கப்பட்டு சனியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது!


இது ஒரு சிறிய கோள். இதன் குறுக்களவு 200 கி.மீ.தான்! இது தன்னைத்தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள, 9 மணி 16 நிமிடம் ஆகிறது!

### கறுப்பு ஏன்?

இந்த நிலா முழுக்க முழுக்க கரிப் பொருளால் ஆனது. அதனால்தான் கறுப்பாக இருக்கிறது! மேலே பனி படர்ந்திருக்கிறது!

கறுப்பு நிலா முழுதும் எரிமலைகள் இருந்தன! அந்த எரிமலைகளின் வாய்கள்தான் குழிகுழியாகத் தெரிகின்றன! ஒவ்வொரு குழியும் 50 கி.மீ. முதல் நூறு கி.மீ.வரை அகலமானவை!

'போபி'க்கு 32,500 கி.மீ. தொலைவிலிருந்து இந்தப் படம் எடுக்கப்பட்டது.



'போபி'யின் படங்கள் நிறைய வந்துள்ளன. 'போபி'யைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள, அந்தப் படங்களை விஞ்ஞானிகள் ஆழமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 20-06-2005 முதல் 26-06-2005வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரியசெவ்வாய் 12இல் இருப்பது நல்லதல்ல. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் பலன் செய்யாது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். வீண் அலைச்சல் இருக்கும். மன அமைதி இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. அறுசுவை உணவு உண்ணலாம். நாலாம் வீட்டில் சனி இருப்பதால் தாய்க்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. வீட்டில் பிரச்சினைகள் தோன்றலாம். (9,12) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. பிதாவுக்கு கூடாதகாலம். சயன சுகம் இருக்காது. (10,11) உரிய சனி நாலில் இருப்பது கூடாது. தொழில்துறையில் பிரச்சினைகள் உருவாகலாம். புதிய முதலீடுகளில் அவதானம் வேண்டும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். மன அமைதி இருக்கும். (2,5) உரிய புதன் மூன்றில் இருப்பதில் பலன் இல்லை. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பதில் பயன் இல்லை. மாதாவுக்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. (7,12) உரிய செவ்வாய் 11இல் இருப்பது விசேஷம். திருமண பலன் உண்டு. சயன சுகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். பிதாநலம், தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் இரண்டில் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாணவாய்ப்பு உண்டு. வாகன சுகம் உண்டு. தாய் நலம். இரண்டில் சனி இருப்பதால் கையில் பணம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (6,11) உரிய செவ்வாய் 10இல் இருப்பதால் மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களால் பிரச்சினை தோன்றலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். (7,10) உரிய குரு நாலில் கேதுவுடன் இருப்பது தோசம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் விருச்சிகம் முதல் மகரம் வரை சஞ்சரிப்பதால் வார முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் நல்ல பலன் உண்டு. இருப்பினும் ராசியில் சனி இருப்பதால் மன அமைதி பாதிக்கலாம். பிரயாண வாய்ப்பு தடைப்படலாம். இரண்டுக்குரிய சூரியன் 11இல் இருப்பதில் பயன் இல்லை. கையில் பணம் இருக்காது. (3,12) உரிய புதன் ராசியில் இருப்பதில் பயன் இல்லை. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. சயன சுகம் இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 12இல் நல்ல பலனைச் செய்யும். தாய் நலம், வாகன சுகம் உண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (5,10) உரிய செவ்வாய் 9இல் இருப்பதில் பயன் இல்லை. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. 7க்குரிய சனி ராசியில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசி நாதன் சூரியன் 11இல் இருப்பது விசேஷம். இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதில் பலன் குறையலாம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். மன அமைதி இருக்கும். பிரயாண வாய்ப்புக்கள் உருவாகும். (2,11) உரிய புதன் 12இல் இருப்பதில் பயன் இல்லை. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் அலைச்சல் இருக்கும். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3,10) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது சிறப்பானது. தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 8இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. அதிஷ்டமும் கை நழுவிப் போகலாம். (6,7) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகை விலகும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11இல் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய சுக்கிரன் 10இல் இருப்பதில் பயன் இல்லை. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு கூடாது. அதிஷ்டம் இருக்காது. (4,7) உரிய குரு ராசியில் கேதுவுடன் இருப்பது தோசமான நிலை. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு கூடாது. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். (5,6) உரிய சனி 11இல் இருப்பது நல்லது. பிள்ளைகள் ஆரோக்கியமாக செயற்படுவர். உடல் ஆரோக்கியம் உண்டு. எதிரிகள் நண்பராகும் வாய்ப்பு உண்டு. 12க்குரிய சூரியன் 10இல் இருப்பது விசேஷமானது. சயன சுகம் உண்டு. குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். மன அமைதி இருக்கும். பூர்வீக சொத்துக்கள் சேரும். (2,7) உரிய செவ்வாய் 6இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. அறுசுவை உணவு கிடைக்கும். (3,6) உரிய குரு, 12இல் இருப்பது கூடாது. இளைய சகோதரத்துக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகை விலகும். (4,5) உரிய சனி 10இல் இருப்பது மத்திமமான பலன். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நலமிருக்காது. பிள்ளைகள் ஆரோக்கியமாக செயற்படுவர். (9,12) உரிய புதன் 10இல் இருப்பதால் பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. சயனசுகம் இருக்காது. 10இல் சனி இருப்பது தொழில் முன்னேறும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை.**

(1,6) உரிய செவ்வாய் 5இல் இருப்பது நல்லதல்ல. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதில் பிரயோசனம் இருக்காது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் ஆபத்து வரக்கூடும். (2,5) உரிய குரு 11இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 9இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாவிடினும் தீங்கு இல்லை. இளைய சகோதரத்துக்கு மத்திம பலன். தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (7,12) உரிய சுக்கிரன் 8இல் நல்ல பலனைச் செய்யும். திருமணவாய்ப்பு உண்டு. சயனசுகம் உண்டு. 10க்குரிய சூரியன் 8இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குரு, செவ்வாயைப் பார்ப்பது விசேஷம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு, 10இல் கேதுவுடன் இருப்பது தோசம். இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (2,3) உரிய சனி 8இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (5,12) உரிய செவ்வாய் 4இல் ராகுவுடன் இருப்பது கூடாது. சயனசுகம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,11) உரிய சுக்கிரன் 7இல் இருப்பதில் பிரயோசனம் இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லை இருக்கும். நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய புதன் 8இல் இருப்பதில் பயன் இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**மகரம்: உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். மன அமைதி இருக்காது. கையில் பணம் இருக்காது. பிரயாணவாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,11) உரிய செவ்வாய் 3இல் இருப்பது விசேஷம். தாய் நலம், வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய சுக்கிரன் 6இல் பலன் செய்யமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 7இல் சனி இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவாது. சனி வழிபாடு ஆறுதல் தரும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. மன அமைதி இருக்கும். (2,11) உரிய குரு 8இல் இருப்பதில் பலன் இல்லை. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லை இருக்கும். மூத்த சகோதரத்துக்கு கூடாது. (3,10) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,9) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது விசேஷம். பெற்றோர் நலம். வாகன சுகம் உண்டு. அதிஷ்டம் இருக்கும். 7க்குரிய சூரியன் 5இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. ஆனால், கேதுவுடன் இருப்பது தோசம். இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (4,7) உரிய புதன் 5இல் இருப்பது விசேஷம். தாய் நலம். வாகன சுகம் உண்டு. நல்ல இருப்பிடம் அமையும். திருமண பலன் உண்டு. 6க்குரிய சூரியன் 4இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். கள்ளர் பயம் உண்டு. எதிரிகளால் தொல்லை இருக்கும். (11,12) உரிய சனி 5இல் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கும் கூடாது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| செவ் ராகு | | | சூரியன் சுக |
| | | | புதன் சனி |
| | | | |
| | | | குரு கேது |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | உத்தரட்டாதி | சனி |
| சுக்கிரன் | புனர்பூசம் | குரு |
| புதன் | புனர்பூசம் | குரு |
| சூரியன் | திருவாதி | ராகு |
| குரு | அத்தம் | சந் |
| சனி | புனர்பூசம் | குரு |

ஆனி 06 முதல் 12 வரை

சந்திரன் விருச்சிகம் முதல் மகரம் வரை



# உங்கள் அலுவலகத்தில் நீங்கள் எப்படி...?

இன்று ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் வேலைக்குச் சென்று சம்பாதித்து குடும்பச் சுமையை தமது கணவனோடு பங்குபோட்டுக்கொள்கிறார்கள். இவ்வாறு வேலைக்குப் போகும்போது சில சங்கடங்களையும் அவர்கள் சந்திக்க வேண்டி ஏற்படுவதும் வழமை.

தினமும் வாழ்க்கை எமக்குப் பல பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறது. அனுபவம் எம்மைச் செம்மைப்படுத்துகிறது. புத்திசாலிகள் மற்றவரின் அனுபவம் மூலமாகக் கற்றுக்கொள்கிறார்கள். முட்டாள்களோ அனுபவித்தே பாடம் படிக்கிறார்கள். அந்த வகையில் ஓர் அலுவலகத்தில் நாம் எவ்வாறுநடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிப் பார்ப்போமா?

உங்கள் நண்பர்கள் எல்லோரும் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு குண இயல்பு கொண்டவராக இருப்பார்கள். எல்லா நேரங்களிலும் எல்லோரும் எமது கருத்தோடு ஒத்துப்போக வேண்டும் என்பது அவசியமில்லை. 'மாற்றுக் கருத்துச் சொன்னாலே அவர் எம்மோடு சண்டைபோடத்தான் வருகிறார்' என்ற எண்ணத்தை நாம் முதலில் மனதை விட்டு அகற்ற வேண்டும்.

ஏன் அப்படிச் செய்தீர்கள்? எதற்காக அப்படிச் செய்ய வேண்டும்? என்ற கேள்விகள் மற்றவர் மனதில் எப்போதுமே கோபத்தைத்தான் வரவழைக்கும். எனவே நடந்தவற்றைப் பற்றி விளக்கம் கேட்கலாம். ஆனால் அது மற்றவர்களைக் கோபப்படுத்துவதாக அமையக் கூடாது.

மேலும் நீங்கள் வேலையில் காட்டும் அக்கறை மற்றும் உங்களின் செயல் மூலம் உங்களுக்கு என்று தனிப்பட்ட ஒரு மதிப்பு உங்கள் அலுவலகத்தில் இருக்கும். நல்லதோ கெட்டதோ உங்கள் வேலையில் நீங்கள் காட்டும் அணுகுமுறை சிறப்பானதாக அமைய வேண்டும்.

நீங்கள் ஏற்றுக்கொண்டதை விட சற்று அதிக வேலை செய்தல், மற்றவர் ஏற்கத் தயங்கும் வேலைகளை ஏற்று செய்து முடித்தல் ஆகியவை பிறர் உங்களிடம் வைத்திருக்கும் நட்பை மேலும் அதிகரிக்கச் செய்யும். அதிக வேலையை ஏற்று அதைச் செய்து முடிப்பது உங்கள் மீது மற்றவர்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்யும். மேலும் உங்கள் நற்பெயரையும் கூட அதிகரிக்கச் செய்யும்.

ஒருவரைப்பற்றி அவர் இல்லாத நேரத்தில் தவறாகப் பேசுதல் தவிர்க்கப்பட வேண்டும். இது உங்களுக்கு தற்காலிகமான நட்பை ஏற்படுத்தித் தரலாம். ஆனால் இது உங்களின் நற்பெயரையும், நம்பிக்கையையும் குறைக்கவே உதவும். மற்றவர்கள் புறம்பேசும்போது நீங்கள் அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று விடுவதே நல்லது. அல்லது வேறு விடயங்கள் ஏதாவது பேசி பேச்சை மாற்றலாம்.

சக வேலையாளர்களிடம் பேச்சு வைத்துக்கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இது ஒருவருக்கொருவர் நம்பிக்கை வைப்பதற்கும் வேலைகள் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும் அதே சமயத்தில் உங்கள் வேலையின் முன்னேற்றத்துக்கும் பயன்படும்.

நல்ல நண்பர்களை அலுவலகத்தில் ஏற்படுத்திக்கொள்வது என்பது ஒன்றும் அவ்வளவு கடினமான வேலையில்லை. அதே சமயத்தில் இந்த நட்பு உங்கள் வேலைக்கும் வாழ்வுக்கும் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

# எல்லோருக்கும் பிடித்த பெண்ணா நீங்கள்?

பெண்கள் பார்க்கும் ஒவ்வொரு வேலைக்குமே திறமை வேண்டும். ஆனால் எல்லா வேலைகளுக்கும் திறமைசாலியான எல்லாப் பெண்களுக்கும் தேவையானது புன்னகையும், சுறுசுறுப்பும்தான்!



இன்றைய வாழ்க்கை இயந்திரமயமாகிவிட்டது. அதனால் எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தாமல் தன்னைப் பார்த்து ஒருவர் சிரித்து, தனக்கு தன்னம்பிக்கை ஊட்ட மாட்டாரா என்று எல்லோருமே எதிர்பார்க்கத்தான் செய்கிறார்கள்.

ஒரு பெண் திறமைசாலியாக இருக்க வேண்டுமானால், அவளிடம் எல்லோருக்கும் பிடித்தமான பழக்கவழக்கங்கள் இருக்க வேண்டும். உங்களுடைய அணுகுமுறை மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் எரிச்சலை உருவாக்குகிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் அணுகுமுறை நன்றாக இருக்க வேண்டுமானால், நீங்கள் அடுத்தவர்களிடம் அன்பு காட்ட வேண்டும். ஒருவரிடம் அன்போடு பேசினால் அவரை சுறுசுறுப்பானவராக மாற்றி நாமும் அந்த மன நிலைக்கு மாறிவிடுவோம்.

நல்ல அணுகுமுறைகளை எப்படி உருவாக்கிக் கொள்வது? மற்றவர்களிடம் எப்படிப் பழகினால் நன்றாக இருக்கும்? என்ற கேள்வியை நீங்கள் எழுப்பலாம்.

மற்றவர்கள் உங்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ அப்படியே நீங்கள் முதலில் அவரிடம் நடந்துகொண்டால் அதுவே நல்ல அணுகுமுறை. மற்றவர்கள் உங்களுக்கு மரியாதை தர வேண்டும் என்று விரும்பினால் நீங்கள் முதலில் அவர்களிடம் அன்பு காட்டுங்கள். இப்படி அவர்கள் விரும்பும் ஒவ்வொன்றையும் நீங்கள் அவர்களுக்கு வழங்கும்போது அவர்கள் அதையே உங்களுக்குத் திரும்பத் தருவார்கள்.

உங்களிடம் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது உங்களைப்பற்றிய விடயங்களை மட்டுமே அவரிடம் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். அவரைப்பற்றியும் கேளுங்கள். அவரைப்பற்றிக் கேட்பது என்பது அவரது குடும்பத்தைப் பற்றிக்கூடக் கேட்கலாம். எல்லோரிடமும் நம்பிக்கையோடும், உண்மையோடும் பேசுங்கள். பொய்யான தகவல்களையும், ஒட்டுக்கதைகளையும் ஒருபோதும் பரப்ப வேண்டாம்.

உங்களை நம்பிக்கையானவராகக் கருதி ஒருசில தனிப்பட்ட ரகசிய விடயங்களை சொல்லி இருக்கலாம். அதை ஒருபோதும் மற்றவர்களிடம் தெரிவிக்கக் கூடாது.

சீரியஸான விடயங்களையும் ஓரளவு தமாசாகச் சொல்வது சிலருக்குப்புரியும். ஆனால் அந்தத் தமாஷ் யாரையும் நோகடித்துவிடக்கூடாது. அதே நேரத்தில் மற்றவர்கள் தமாஷாகப் பேசினாலும் அதற்குத் தவறான அர்த்தத்தை நீங்கள் உருவாக்கிவிடக்கூடாது.

மற்றவர்கள் புதிதாக ஒரு செயலைச் செய்யும்போது அவர்களை உற்சாகப்படுத்துங்கள். உங்களால் மட்டுமே எல்லா வேலைகளையும் செய்ய முடியும் என்பதுபோல் ஒரு போதும் பேச வேண்டாம்.

யாரிடம் பேசினாலும் அவரது பெயரைச் சேர்த்துப் பேசுங்கள். அப்படிப் பேசினால் எமது பெயரை நினைவில் வைத்திருக்கிறாரே என்ற மதிப்பு உங்கள் மீது அவருக்கு ஏற்படும்.

நீங்கள் எல்லோருக்கும் பிடித்த பெண்ணாகத் திகழ வேண்டுமா சகோதரிகளே? மேலே சொன்ன விடயங்கைக் கொஞ்சம் கடைப்பிடித்துத்தான் பாருங்களேன்.

# குழந்தையின் ஆரோக்கிய உணவுக்கு தாய் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்

குழந்தைக்குத் தேவையான உணவு ஆரம்ப கட்டத்தில் முழுமையாகத் தாய்ப்பாலில் இருந்து கிடைப்பதே இயற்கை. அனைத்து வகையிலும் தாய்ப்பாலே சிறந்த உணவாகும்.



தாயிடம் போதிய பால் சுரக்காத காலகட்டத்திலேயே மாற்றுவகைப் பால் உணவினைக் கொடுக்க வேண்டும். தாயிடம் சுரக்கக் கூடிய பாலின் அளவு, தாயின் உடல் வளம் மற்றும் மன நிலைகளைப் பொறுத்தே அமையும்.

குறிப்பாக மிகவும் சோர்வுற்றும், கவலை தோய்ந்தும் இருக்கும் தாயிடம் போதிய பால் சுரப்பினை எதிர்பார்க்க முடிவதில்லை. ஆகவே கவலையைத் தரத்தக்க சூழ்நிலை இருப்பினும் அவற்றை மாற்றி அமைத்துக் கொள்ளும் பக்குவத்தினை தாயானவள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

பால் ஊட்டிக்கொண்டிருக்கும்போதே போதிய பால் அருந்தாமல் கூட சில குழந்தைகள் உறங்கத் தொடங்கிவிடும். அப்படிப்பட்ட வேளைகளில் அவ்வப்போது குழந்தையின் குதிக்காலை வருடிக் கொடுத்து உறங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குழந்தை வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் அடிக்கடி பால் தேவைப்படும். சில வேளைகளில் மூன்று மணிக்கொருதடவை கூட பால் ஊட்ட வேண்டியிருக்கும்.

சற்றே வளரத் தொடங்கிவிடும் குழந்தைக்குப் பால் கொடுக்கும் இடைவெளி நீடித்துப்போகலாம். அந்தப் பால் கொடுக்கும் இடைவெளியானது நான்கு மணியிலிருந்து ஆறு மணி வரை கூட அமையலாம்.

ஆனால் குழந்தையின் வளர்ச்சிக்கேற்ப பாலின் அளவைக் கூட்டிக்கொடுத்து வர வேண்டும்.

குழந்தைக்குத் தேவையான தண்ணீரும் பாலில் இயற்கையாகவே இருப்பதால் கூடுதலாகத் தண்ணீர் தேவையில்லை என்கிற நிலை இருந்தாலும் கூடுதலான தண்ணீரும் தேவைதான். ஏனெனில் பல்வேறுபட்ட சுவைகளையும் குழந்தை அறிந்து வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் பாலைத் தவிர பிற உணவு வகைகளை குழந்தை நாடாமல் தட்டிவிடும் வாய்ப்புகள் உருவாகிவிடும்.

குழந்தை அழும்போதெல்லாம் பால் மட்டும்தான் கொடுக்க வேண்டும் என்பதில்லை. பால் ஊட்டும் வேளைகள் தவிர இடைப்பட்ட நேரங்களில் கொதிக்க வைத்து ஆறிய சற்றே வெதுவெதுப்பான தூய்மையான வெந்நீரை பாலாடையுடன் கொடுத்து வரலாம்.

வெப்பம் நிறைந்த சூழலில் வாழ்கின்ற குழந்தைகளின் உடல் நலத்துக்குத் தண்ணீரும் மிகவும் இன்றியமையாததாகும்.

குளிர் பகுதிகளில் வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு கூடுதலாகத் தண்ணீர் தேவைப்படாது.

பால் மட்டுமன்றி தண்ணீரையும் எடுத்துக்கொள்ளும் குழந்தைகளுக்கு மலச்சிக்கல் பிரச்சினைகள் பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

சகோதரிகளே, ஓர் ஆரோக்கியமான குழந்தையின் வளர்ச்சி என்பது அதன் தாய்ப்பாலிலேதான் தங்கியுள்ளது என்றே கூற வேண்டும். எனவே குழந்தைக்குப் பால் ஊட்டுவதால் தாயின் அழகு கெட்டுவிடும் என்ற சிலரின் தப்பான கருத்துகளையெல்லாம் மனதில் கொள்ளாது மேற்கூறப்பட்டவாறு உங்கள் குழந்தையின் உணவில் கவனம் செலுத்தி ஆரோக்கியமாக வளருங்கள். சிறப்பான ஒரு எதிர்கால வாரிசை உருவாக்குங்கள்.




## சின்னச்சின்ன பாடங்கள்...

*மற்றவர்களின் எதிர்பார்ப்புகளை மிஞ்சுங்கள்.

*நிதானமாகப் பேசுங்கள்.
விரைவாகச் சிந்தியுங்கள்.

*உங்களுக்குப் பதில் சொல்லப்பிடிக்கவில்லை என்றால் கேள்வி கேட்பவரைப் பார்த்து ''எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்று புன்னகையுடன் கேளுங்கள்.

*தோற்றாலும் அதில் கற்ற பாடத்தைக் கோட்டைவிடாதீர்கள்.

*உறவினர்களை வைத்து ஒருவரை மதிப்பிடாதீர்கள்.

*மற்றவர்களின் இலட்சியங்களை ஊக்குவியுங்கள்

*சண்டைபோடும் நேரத்தில் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள்.


*வருடத்தில் ஒருமுறையாவது நீங்கள் செல்லாத இடத்துக்குச் செல்லுங்கள்.

*சிறிய பிரச்சினையால் ஆழமான நட்புப் பாதித்துவிடக்கூடாது.

*தவறை உணர்ந்தால் உடனடியாக அதைச் சரி செய்யுங்கள்.




அனுபவம் என்பது மெதுவாகத்தான் கற்பிக்கும். அதில் தவறுகள் என்பது அதற்குரிய செலவுகள்.




# சிறார்களின்






க.மேகலா
தரம் 9A
கிளி.திருவையாறு ம.வி.



மதுரன், தரம் 3,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,
கொழும்பு 6.

# கைவண்ணம்



# உதவாத கழுதை

ஒரு கழுதையும் நாயும் தங்களது எஜமானுடன் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தன. அது ஒரு நீண்ட மலைப்பாதை என்பதால் எஜமானன் நடப்பதற்குச் சிரமப் பட்டார். இதனால் அவர் மிகுந்த களைப்பாக இருந்தார்.

எனவே சிறிது கண் அயர்ந்து விட்டு பயணத்தை மீண்டும் தொடரலாம் என்று எண்ணி சற்றே உறங்க ஆரம்பித்தார்.

வழக்கம்போல் கழுதை சுமையை சுமந்து கொண்டே நின்றது. அப்போது அந்த இடத்தில் நிறைய புற்கள் வளர்ந்திருப்பது அதன் கண்களுக்குத் தெரிந்தது. எஜமானன் எழும்புவதற்குள் புல்லை மேய்ந்து பசியைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்த கழுதை புல்லை மேயத் தொடங்கியது. இதைப் பார்த்த நாய்க்கும் பசி எடுத்தது. ஆனால் நாயால் புல்லைத் தின்ன முடியாதே. அதனால் கழுதையிடம் சென்றது.

"ஏய் கழுதையே! உன் முதுகில் எஜமானன் வைத்திருக்கும் சுமையில் நிறைய ரொட்டிகளும் இருக்கின்றன. அவற்றில் கொஞ்சத்தை எடுத்து நீயும் நானும் பகிர்ந்துகொண்டு பசியாறலாம்" என்று சொன்னது.



அப்போது கழுதைக்கு பசியில்லை. அதனால் நாயின் கோரிக்கையை தட்டிக் கழிக்க எண்ணிய கழுதை "கொஞ்சம் நேரம் பொறு. எஜமானன் எழுந்து விடுவார். அதன் பிறகு அவர் உனது பசியைப் போக்குவார். இதில் என் உதவியை எதிர் பார்க்காதே!" என்று கடுமையாகச் சொன்னது.

அப்போது அங்கே ஒரு ஓநாய் வந்தது. அதைப் பார்த்ததும் கழுதைக்கு உடல் நடுக்கம் கொடுத்தது. உடனே நாயிடம் சென்றது. "நாயே, நாயே எனக்கு உதவி செய்." என்று கெஞ்சியது.

நாயோ, "நான் இப்போது கடுமையான பசியில் இருக்கிறேன். அதனால் ஓநாயிடம் சண்டையிடும் அளவுக்கு என்னிடம் உடல் பலம் இப்போது இல்லை. ஆகவே உனக்கு எந்த வகையிலும் என்னால் உதவ இயலாது. சிறிது நேரத்தில் எஜமானன் எழுந்து விடுவார். அதுவரை நீ பொறுத்திரு." என்றது.

கதையின் நீதி: அவசரத்தின் போது மற்றவர்களுக்கு நாம் உதவாவிட்டால் நமக்கு உதவி செய்ய எவரும் முன்வரமாட்டார்கள்.

## செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைகள் எவை?

1. மனித நேயம்.
2. பாரபட்சம் இன்மை.
3. நடுநிலைமை.
4. தொண்டர் சேவை.
5. ஒருமைப்பாடு.
6. சுயாதீனம்.
7. சர்வதேசம்.

### மனிதாபிமான சேவைகள் எவை?

1. இயற்கை, செயற்கை அனர்த்தங்களின்போது உதவி புரிதல்.
2. அடிப்படை சுகாதாரம்.
3. முதலுதவி.
4. இரத்ததானம்.
5. நிவாரணம்.
6. அம்புலன்ஸ் சேவை.
7. சிரமதானம்.
8. யுத்த நிறுத்த பிரதேசங்களில் சேவை புரிதல்.
9. அவசர சேவை.
10. தேடுதல் சேவை.
11. சமூக அபிவிருத்தி பணிகள்.

*அ.அஜந்தன், முள்ளிவாய்க்கால் – கிழக்கு, முல்லைத்தீவு.*




இந்த கோல்ப் ஆட்டக்காரர் அணிந்திருக்கும் தொப்பி எது? காலணி எது? வட்டமிட்டுக் காட்டுங்கள்.

### அன்பான தம்பி தங்கைகளே!

உங்கள் பாடசாலையில் நடைபெற்ற, உங்கள் உள்ளம் கவர்ந்த, மறக்க முடியாத சம்பவம் ஒன்றைப் பற்றி எமக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் ஆக்கங்கள் சிறியதாக ஆனால், இறுக்கமாக இருக்க வேண்டும். ஒவ்வொருவாரமும் எமக்குக் கிடைக்கும் உங்கள் ஆக்கங்களில் மிகச்சிறந்த ஒன்றைத் தெரிவு செய்து எமது வாராந்த சுடர் ஒளியில் பிரசுரிப்போம்.

அனுப்பவேண்டிய முகவரி:–
இளஞ்சுடர்
சுடர் ஒளி வாரமலர்
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு – 14.

# கவிதைப் புனல்

## புதைக்கப்பட்ட எழுத்துக்கள்

செழித்த தேயிலைக்குள்
புதைக்கப்பட்ட புற்களாய்
புழுதிபடிந்த வரலாறு
எழுதியபோது
எழுத்துக்களுள் மலையகம்.
நிமிர்ந்த இடை உயர்ந்த மலை
உவமை சொன்னபோது
கூடையுடன் கூனி
குனிந்த பெண்கள்;
பணிந்த லயம், பந்தடிக்கும்
சிறுவர்கள்
காத்திருந்த பார்த்தபோது
நவீன மாடி "லயம்"
மாற்றம் இது மட்டும் தானா?
போதும் போதும் மலையக
தந்திரங்கள்
வேலைக்கு சென்றுரிய
வேதனம் வாங்காமல்
வேதனையுடன் திரும்பிச் செல்லும்
வெட்கக்கேடு நமக்கு வேண்டாம்
உழைப்பிற்கு ஊதியம்.
அதிக வேலை
உங்களுக்கு ஏது ஊதியம்
முதலாளிகளின் ஊதிய மீதி –
உங்கள்
வேதனைக்கு வேதனம்.
பொறுமைக்கு இங்கே
வேலையில்லை
இளைஞனே பொங்கி எழு
புதைக்கப்பட்ட எழுத்துக்களுக்கு
புது அர்த்தம் கொடுப்போம்.
வெட்ட வெட்ட துளிரும்
தேயிலையாய்
வேக நடை போட வேண்டும்.
உலகம் காண வேண்டாமா
உறுதியுடன் புறப்படு – மீண்டும்
புதைக்கப்பட்ட எழுத்துக்களுக்கு
புது அர்த்தம் கொடுப்போம்.

மகா, டிக்கோயா.

## உலகில் எதுவுமே நிலையில்லை

உலகில் எதுவுமே எனக்குச்
சொந்தமில்லை
மண்ணுக்காக அடம்பிடிப்பவர் சிலர்
பொன்னுக்காக அடம்பிடிப்பவர் சிலர்
பெண்ணுக்காக அடம்பிடிப்பவர் சிலர்
இது எதுவுமே எனக்குச் சொந்தமில்லை
நான் அடம்பிடிக்கவில்லை
ஏனென்றால் உயிரே எனக்குச்
சொந்தமில்லை
நான் அடம்பிடித்ததெல்லாம் உன்
நட்புக்காக – நீ
சொந்தம் என எண்ணியிருந்தேன்
ஆனால் உன் நட்பே என்னை
ஏமாற்றியது
கவிதைக்கும் கண்ணீருக்கும்
வழி வகுத்தது.
இறுதியில் பேனா மட்டும் என்
சொந்தமாகியது.
இந்த உலகில் எதுவுமே எனக்கு
ஆறுதலில்லை
என் பேனாவைத் தவிர
என் உணர்ச்சிகளை ஊரறிய பறைசாற்றும்
அந்தப் பேனா மட்டுமே
என் ஊன்றுகோலாகும்!

சு.திவ்ய துர்க்கா, மாத்தளை.

## இறப்பு

அன்பே....
மனித யதார்த்தத்தில் நானும் ஒருவன்
எம் திருமணத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி
இல்லற வாழ்க்கையில் இனிக்கவில்லை
எமக்குள் புரிந்துணர்வு இல்லை
எப்படி வாழ்வது?
யார் யாருக்கு எப்படி விட்டுக் கொடுப்பது?
முடியவில்லையே...
ஏதோ முற்பிறப்பில் நான் செய்த பாவமா?
இப்படி என்னிதயம் கேட்கிறது
உனக்குத் தெரிவதில்லை என்நிலைமை
உன்னை நீங்கி என்னால் வாழவும் முடியாது
என் மனதில் இருப்பவள் நீ மட்டும்தான்
உன்னுடன் வாழ்ந்து உனக்காக
மடிவதே எனது ஆசை – ஆனால்
அதற்கு முன் இறப்பேன் போலத் தோன்றுகிறது.
என் கண்களில் ஊற்றெடுக்கும் கண்ணீரை
எத்தனை முறைதான் துடைத்து எடுப்பது?
முடியவில்லை
நான் இறப்பதே உனக்குச் சிறந்தது.

சீ.குகானந்த், விசுவமடு.

## முத்தமிழே வாழி

தமிழே எம் இனிய தமிழே!
அமுதே எம் இதய ஒலியே!!
இயல் இசை நாடகம் எனும்
இனிய முத்தமிழே!!!

உலகெலாம் கிளை பரப்பி
உணர்வெல்லாம் இணையச் செய்த
உயிரினும் மேலான இனிய
முக்கனியே முத்தமிழே!

மெல்லத் தமிழ் இனிச் சாகுமா? இல்லை
மெல்லத் தமிழ் இனிச்சு – ஆகுமா?

சொல் தமிழே சொல் – உன்னைக்
கொல் என்றவனை விடுவோமா?

யாழினது குழலினிது என்பர் – தம்
மக்கள் மழலைச் சொல் கேளாதார்
அந்நிய மொழி பெரிதென்பர் – எம்
இனிய தமிழின் அருமை புரியாதார்.

வாழி வாழி முத்தமிழே வாழி
நிகரற்ற தமிழே நிறைவுடன் வாழி
கறையற்ற தமிழே குறையாது வாழி
உயிரினிய தமிழே உலகெலாம் வாழி.

கி.குகநாதன், புலோலியூர்.

## இரகசியம்

வண்டுக்கு மலர் மேல் காதல்
வானத்திற்கு முகில்
மேல்காதல்
கடலுக்கு கரை
மேல் காதல்
இவை இயற்கையின்
இரகசியம்
எனக்கோ உன்
மேல் காதல்
இதுவே இளமையின்
இரகசியம்.

இ.புவாணி,
தொட்டியபடி.



## மாறுமா?

இது எங்கள் நீசப்த பூமி
நிம்மதியாய் நாமிங்கு
வாழ்ந்த பூமி இன்று
நாய்களும் பேய்களும்
அத்துமீறி ஆக்கிரமித்து
நடமாடும் மயானபூமியாய்
மாற: நாம் எமது
சொந்த பூமியிலேயே
உருக்குலைந்து உருமாறி
நிம்மதி இழந்து அகதிகளாய்
நாதியற்று தத்தளிக்கின்றோம்.

ஜோ. கிறிஸ்றி,
களுத்துறைச் சிறையிலிருந்து.

## ஒரு வார்த்தைக்காக!!

அன்பே
உன்னுடைய ஒவ்வொரு
பார்வையுமே
என்னை உன்னிடம்
பறித்தெடுத்தது.
உன் நினைவுகள் படுத்தும்
அவலங்களை
நீக்கிவிட முடியவில்லை.
உனக்கெல்லாம் நீயாக
காத்திருக்கின்றேன்
உன்னுடைய ஒரு வார்த்தைக்காக!!

யஸ்மினா, மீசாலை.

## சம்பவத்தின் தவிப்பு!



உணர்ச்சிகளை ஒதுக்கிவிட்டு
உணர்ந்து சொல்கிறேன்.
காதல் உணர்வோ சுகமாச்சு
ஆனால் முடிவோ சோகமாச்சு
அன்போடு கொடுத்தேன்
பிறந்தநாள் பரிசு
ஆசைவச்சு – அதை
கிழிச்சு எறிஞ்சா
கண்கள் குளமாச்சு !

எஸ்.ஜே.பி, வத்தளை.

## கவிதை

கம்பனின் சொல்லில் மலர்ந்தது கவிதை
காதலர் நெஞ்சில் உதிப்பது கவிதை
புலவர்கள் பாடும் பொருளே கவிதை
பள்ளிச் சிறுவனின் படிப்பிலும் கவிதை
பாவேந்தர் பாடும் பாவும் கவிதை
பரம ஏழையின் வறுமையில் கவிதை
பலரது மனத்தை கவர்ந்திடும் கவிதை
சிலரது உழைப்பைக் கூட்டிடும் கவிதை
கற்பனைத் தேரின் சிகரமே கவிதை
காவிய பொருளின் கருவிலும் கவிதை
இயற்கையின் இனிமை கூறிடும் கவிதை
ஈகையை வார்த்தையில் தந்திடும் கவிதை
மன்னர்க்கு புகழைத் தருவது கவிதை
மாற்றாரை மறைத்தோதும் பொருளிலும் கவிதை
இன்பத்தின் பெருக்கிலோ இன்பக் கவிதை
துன்பத்தின் கொடுமையில் துக்கக் கவிதை
கிடைக்காத ஒன்றிலோ ஏக்கக் கவிதை
கைக்கு அது வந்த போது
திடீரென குதிப்பது வியப்புக் கவிதை
தரணி போற்றிடும் தமிழின் கவிதை —என்
கற்பனை திறனில் பிறந்திடும் கவிதை.

ஜெ.ரூபி, கிளிநொச்சி.

## கனவு

தூக்கமதில்
கண்களிரண்டும்
கண்டு கொள்ளும்
இலவச சினிமா

## கண்ணீர்

வாழ்வில் நேரும்
துன்பமதை
வெளிக்காட்டும்
கண்ணாடி.

அ.யாழினி, மட்டக்களப்பு.

## தனிமை!



நீ வருவாய் என நான் நினைத்தேன்
நீ வரவில்லை
நீ அழைப்பாய் என நான் – இருந்தேன்
நீ அழைக்கவில்லை
நீ அணைப்பாய் என
நான் நினைத்தேன்
நீ அணைக்கவுமில்லை
அதனால் தான் ஏனோ
தெரியவில்லை
எனக்கு தனிமை! தனிமை!!
என்றே காலம் கழியுதடா?

ச.சீதா, நயினாதீவு.

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

* தொலைக்காட்சி பார்த்து பெரும்பாலான நேரத்தைக் கழிப்பது எல்லா நாடுகளிலும் பெருகி வருகிறது. மக்கள் டி.வி.யிலேயே மூழ்கிவிடாமல் இருப்பதற்கு ஐஸ்லாந்து நாடு ஒரு நல்ல முடிவு எடுத்துள்ளது. இதன்படி அந்த நாட்டில் வியாழக்கிழமைகளில் டி.விக்கு விடுமுறை. வியாழக்கிழமைகளில் அங்கு மக்கள் டி.வியை பார்க்க முடியாது.

* நியூசிலாந்து நாட்டில் பிளென்டி வளைகுடாவில் 'வகாரி' எரிமலை காணப்படுகிறது. இப்போதும் இந்த எரிமலை புகையையும் சாம்பலையும் வெளியே தள்ளிக் கொண்டே இருக்கிறது.

நல்ல வேளை. மக்கள் அதிகம் இல்லாத பகுதியில், இந்தத்தீவு அமைந்திருப்பதால் 'வகாரி' பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை.

* சாப்பிடும் போது பக்கத்தில் உள்ளவர்களுக்கு புரை ஏறிவிட்டால் தலையில் தட்டுகிறோம். இது மிகவும் தவறானது.

காரணம், உணவுக் குழாயில் செல்லும் உணவு தலையில் தட்டப்படும்போது, அதிவேகமாக உள்ளே தள்ளப்படுகிறது. இதனால் மூச்சுக்குழாய் அடைபட்டு மரணமே நேரலாம். ஆகவே, புரை ஏறியவரின் மேல் வயிற்றில் வேகமாக தட்டுவதே சிறந்தது. உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் தடுக்கவும் கூட.

* அமெரிக்காவின் பிரபல நடிகையும் பொப்பாடகிகளில் ஒருவருமான லயனல் நிகோலி ஒரு டி.வி. நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ரெனோ நகரிலிருந்து நியூயோர்க் நகருக்கு விமானத்தில் சென்றார்.

விமான நிலையத்தில் அவரைச் சோதனை செய்தபோது உலோகத்தை கண்டுபிடிக்கும் கருவி 'பீப் பீப்' என்று அலறஆரம்பித்துவிட்டது.



பாதுகாப்பு பிரச்சினை ஆனவர் என்றாலும் விமான நிலைய அதிகாரிகள் அவரைச் சும்மா விடவில்லை. சத்தம் எங்கிருந்து வருகிறது என்று தீவிரமாக ஆராய்ந்ததில் அவரது பிராவிற்குள் ஏதோ ஒரு உலோகம் இருப்பது தெரிந்தது. சோதனை இடுபவர்களோ ஆண்கள். அதனால் தர்மசங்கடமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட நிகோலி கடைசியில் விமான நிலைய பெண் அதிகாரிகளை அழைத்து சோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அவர்கள் அவரின் மேலாடையைக் களைந்து பார்த்தபோது நிகோலி பேஷனுக்காக தனது மார்பில் வெள்ளி வளையம் அணிந்திருப்பது தெரியவந்தது.

அதிர்ந்துபோனார்கள் விமானநிலைய பெண் அதிகாரிகள். அதைக் கழற்றி வாங்கிக்கொண்டு நிகோலியை அனுப்பி விட்டார்கள்.

* மூன்று நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முதல் நபர் சொன்னார். "என் மனைவி கர்ப்பமாக இருந்தபோது இரட்டை நகரங்களைப் பற்றிய புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன."

இரண்டாம் நபர் சொன்னார். "என் மனைவி மூன்று வீரர்களைப் பற்றிய புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன."

மூன்றாவது நபர், "அய்யோ.... நான் உடனே வீட்டுக்குப் போக வேண்டும்..." என அலறியடித்துக் கொண்டு ஓடத் தொடங்கினார்.

மற்ற இருவரும் அவரிடம் "ஏன் இவ்வளவு பதட்டப்படுகிறாய்?" எனக் கேட்டனர்.

"என் மனைவியும் கர்ப்பமாக இருக்கிறாள். அவள் அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்ற புத்தகத்தை படிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாள்" என்றார்.

* உத்தரப்பிரதேசத்தில் 500 அடி உயரமுள்ள – உலகிலேயே மிக உயரமான – புத்தர் சிலை அமைக்கும் பணி மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள குஷி நகர் மாவட்டத்திலேயே இந்தச் சிலையை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக உத்தரப்பிரதேச அரசும் ஜப்பானைச் சேர்ந்த மைத்ரியா என்ற அறக்கட்டளையும் ஒப்பந்தம் செய்து கொண்டன.

புத்தர் சிலையுடன், மருத்துவமனை, கல்வி நிறுவனம், தியான மையம், பூங்கா, விருந்தினர் இல்லம், அருங்காட்சியகம் ஆகியவைகளும் அந்தப் பகுதியில் 1000 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட உள்ளன.

# ஜாக்சன் விடுதலை



பிரபல பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் மீது சிறுவன் ஒருவனை பாலியல் தொந்தரவு செய்ததாக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை கடந்த பல மாதங்களாக கலிபோர்னியாவில் உள்ள மரியா நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கில் ஜாக்சன் மீது குற்றம் நிருபிக்கப்பட்டால் அவருக்கு 20 ஆண்டுவரை சிறைத்தண்டனை கிடைக்கும் என தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் சாண்டா மரியா நீதிமன்றில் இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை விடுவிப்பதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். ஜாக்சன் நீதிமன்றத்தில் இருந்து வெளியே வருவதையும் ரசிகர்கள் அவரை வரவேற்பதையும் படங்களில் காணலாம்.





திருகோணமலையில்... சுடர்ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

HOTEL WESTEERN (PVT) LTD




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P.: +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax: +94 11 4518481 E-mail: info@hotelwesteern.com
Website: www.hotelwesteern.com

EXPOAIR your friend in the skies...

எக்ஸ்போ ஏயார் வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



மீண்டும் புதுப் பொலிவுடன்..... உங்களின் இக்காலத் தெரிவுக்கு....

குமரகுரு

புடைவை அழகுப்பொருள் வாணிபம்





இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், செட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

KUMARAKURU TEXTILE & FANCY HOUSE
Yarl Road, Kilinochchi. Tel: 021 228 5971

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி



யாழ். நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்!

நாளைய நாகரிகத்தை இன்றே அறிமுகப்படுத்துகின்றோம் ஒரு முறை விஜயம் செய்துபாருங்கள் உண்மை புரியும்.

அழகிய புடவைத் துணிசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

கிறீன் பலஸ் எம்போறியம்



பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.


இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஜூன் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.